www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925-2025

மலர் 88 | இதழ் 12 | 2025 ஜூன் 22 - ஜூன் 28 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15



## இஸ்ரேலே, இனப்படுகொலைப் போரை நிறுத்து!

# டெல்லியில் இடதுசாரிக் கட்சிகள் ஆர்ப்பாட்டம்

**இஸ்ரேலின் இனப்படுகொலையைக் கண்டித்தும், பாலஸ்தீன மக்களுக்கு ஒருமைப்பாட்டைத் தெரிவித்தும் டெல்லி நாடாளுமன்ற சாலையில் இடதுசாரிக் கட்சிகள் சார்பில் ஜூன் 17 அன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இடதுசாரிக் கட்சிகள் கூட்டாக நடத்திய இந்த ஆர்ப்பாட்டத்தில், மாணவர்கள், இளைஞர்கள், அறிவர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.**



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.பேபி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) லிபரேசன் பொதுச்செயலாளர் தீபங்கர் பட்டாச்சார்யா, புரட்சிகர சோசலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஆர்.எஸ். தாக்கர், பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்த ஹரிசங்கர், கெதர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பிர்ஷூ நாயக் சிபிஐ மற்றும் சிபிஎம் கட்சிகளின் டெல்லி தலைவர்கள் தினேஷ் வர்ஷ்னே, அனுராக் சக்சேனா ஆகியோர் உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளர்கள் பல்லப் சென்குப்தா, சையத் அஜீஸ்பாஷா, ராமகிருஷ்ண பாண்டா, ஆனி ராஜா மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினர்கள் நிலோத்பல் பாசு, அருண் குமார், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் தலைவர் சையதா ஹமீது, பேராசிரியர் அஜய் பட்நாயக், நந்திதா நரேன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா, “பாலஸ்தீனர்கள் மீதான இஸ்ரேலின் இனப்படுகொலைப் போர் தடுத்து நிறுத்துப்பட வேண்டும்.

இஸ்ரேலின் கொடூரமான ஆக்கிரமிப்புப் போர் குறித்து மோடி அரசாங்கம் எதுவும் பேசாமல் மவுனமாக இருந்து வருகிறது. ஐ.நா. கொண்டுவந்த போர்நிறுத்தத் தீர்மானத்தையும் இந்தியா புறக்கணித்திருக்கிறது. இதனை கடுமையாகக் கண்டிக்கிறோம். இஸ்ரேலுடனான அனைத்து ராணுவ உறவுகளையும் இந்திய அரசு உடனடியாகக் கைவிட வேண்டும். நீதி மற்றும் அமைதிக்கான உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். இந்துத்துவா சக்திகள் சித்தரிக்க விரும்புவது போல், பாலஸ்தீன மக்களின் போராட்டம் மதப் போரோ இஸ்லாமியப் போரோ அல்ல, ஆக்கிரமிப்புக்கு எதிரான விடுதலைப் போராட்டம்” என்று டி.ராஜா கூறினார்.

ஆர்ப்பாட்டத்தில் பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.பேபி, “இஸ்ரேல் ஒரு மூர்க்கத்தனமான அரசு (rogue state), அதன் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஒரு பயங்கரவாதி” என பிரகடனம் செய்தார். “காஷ்மீர் மாநிலம் பகல்காமில் அப்பாவி மக்கள் மீது அண்மையில் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதலுக்கும், ஈரான் மீது இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதல்களுக்கும் இடையே வேறுபாடு ஏதேனும் உண்டா? இரண்டும் மனிதத் தன்மையற்றவை, வன்முறையையும் அழிவையும் ஏற்படுத்தும் பயங்கரவாதச் செயல்களே!” என்றும் எம்.ஏ.பேபி காட்டமுடன் கூறினார்.

**-இளமதி**

## இஸ்ரேல் அரசை கண்டித்து ஜூன் 24 சென்னையில் ஆர்ப்பாட்டம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மா.லெ) லிபரேசன் மாநிலச்செயலாளர் பழ.ஆசைத்தம்பி ஆகியோர் கூட்டாக அறிக்கை விடுத்துள்ளனர். அதில்,

“டெல்லியில் கூடிய இடதுசாரிக்கட்சிகள் பாலஸ்தீன மக்களுக்கு ஒருமைப்பாடும் ஆதரவும் தெரிவிக்கும் வகையிலும், இனவெறி பிடித்த இஸ்ரேலுக்கு கண்டனம் தெரிவிக்கும் முறையிலும் நாடு தழுவிய இயக்கத்துக்கு அறைகூவல் விடுத்துள்ளன. இதன்படி 24.06.2025 அன்று மாலை 4.00 மணிக்கு சென்னை, சைதாப்பேட்டையில் பெருந்திரள் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

ஆயுத விற்பனையை இந்தியா நிறுத்த வேண்டும். இஸ்ரேல் அரசின் இனவெறி கொண்ட படுகொலைகள், போர்க் குற்றச் செயல்களை கண்டிக்கிறோம்; தேச உரிமைக்கும், இறையாண்மை கொண்ட சுதந்திர தாயக உரிமைக்கும் போராடும் பாலஸ்தீன மக்களுக்கு துணை நிற்போம். மோடியின் ஒன்றிய அரசு, இந்தியாவின் பாரம்பரிய வெளியுறவுக் கொள்கை நெறிகளில் உறுதியாக நிற்க வேண்டும். பாலஸ்தீன மக்களின் உரிமைப் போராட்டத்தை தொடர்ந்து ஆதரிக்க வேண்டும். இனவெறி பிடித்த இஸ்ரேலுக்கு இந்தியா ஆயுத விற்பனை செய்து ஒத்துழைத்து வருவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்ற முழக்கங்களோடு நடைபெறும் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் அனைத்து தரப்பு மக்களும் பங்கேற்குமாறு அழைக்கிறோம்” என்று குறிப்பிட்டுள்ளனர்.

### வாக்குச் சாவடிகளின் சிசிடிவி காட்சிகளை வெளியிடுக..

“மராட்டிய தேர்தல் குறித்து மறைப்பதற்கு எதுவும் இல்லையென்றால், அனைத்து வாக்குச்சாவடிகளின் மாலை 5 மணிக்குப் பிறகான சிசிடிவி காட்சிகளைத் தேர்தல் ஆணையம் வெளியிட வேண்டும். அனைத்து மாநிலங்களுக்கும், அண்மையில் நடந்த மக்களவை மற்றும் சட்டப்பேரவைத் தேர்தல்களின் ஒருங்கிணைந்த வாக்காளர் பட்டியலை டிஜிட்டல் வடிவில் வெளியிட வேண்டும்.”

**ராகுல் காந்தி**
மக்களவை எதிர்க்கட்சித் தலைவர்

### பிரதமர் மோடி டீ விற்றதே இல்லை

“43 ஆண்டுகாலம் நீடித்த எங்கள் நட்பில் பிரதமர் நரேந்திர மோடி டீ விற்று ஒருபோதும் பார்த்ததே இல்லை. மக்களிடம் அனுதாபத்தைப் பெறுவதற்காகவே அவ்வாறு அவர் கூறிவந்தார்”

**பிரவீன் தொகாடியா**
விஷ்வ ஹிந்து பரிஷத் முன்னாள் தலைவர்

### இந்தி பேச முடியாவிட்டால் நாட்டை விட்டு வெளியேறு

“நீங்கள் இந்தியாவில் வசிக்கிறீர்கள் என்றால் இந்தியை நேசிக்கவேண்டும்.இல்லையெனில், நீங்கள் வெளிநாட்டவராகக் கருதப்படுவீர்கள். இந்தி பேச முடியாவிட்டால் நாட்டை விட்டு வெளியேறி வேறு எங்காவது செல்லுங்கள்”

**சஞ்சய் நிஷாத்**
உபி பாஜக அமைச்சர்

### கலவரக்காரர்கள்

“ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த நம்முடைய திருப்பரங்குன்ற மலையை சிக்கந்தர் மலை எனச் சொல்லும் துணிச்சல் திமுக அரசுக்கு வந்துள்ளது. பிரிவினைவாத, அரசியல் லாபங்களுக்காக இப்படிச் செய்து வருகிறது திமுக அரசு. ஜூன் 22ல் நடைபெறும் முருக பக்தர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு நமது வலிமையைக் காட்ட வேண்டும்.”

மதுரையில் ஒன்றிய அமைச்சர்
**அமித் ஷா**

### கூட்டணி ஆட்சி அல்ல; பாஜக ஆட்சி

2026ல் தமிழ்நாட்டில் கூட்டணி ஆட்சி என நான் சொல்ல மாட்டேன்; பாஜக ஆட்சி என்றுதான் நான் சொல்வேன்.

**அண்ணாமலை**
பாஜக முன்னாள் தலைவர்

### அமித்ஷாவின் கனவு

“தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் வரும் என்பது அமித்ஷாவின் கனவாக இருக்கலாம். டெல்லியில் விளையாடியதுபோல் தமிழ்நாட்டில் விளையாட முடியாது; டெல்லி வேறு தமிழ்நாடு வேறு; தமிழ்நாடு முற்றிலும் மாறுபட்ட பூமி.”

**தொல். திருமாவளவன்**
விசிக தலைவர்

கட்சிக் கடிதம்

# சிவக்கட்டும் சேலம்!



## மாநில மாநாட்டை நோக்கி... 1

**போர்க்குணமிக்க தோழர்களே!**

**மக்கள் நலனுக்கான போராட்டக் களங்கள் கண்டு, முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்ற மக்களைத் திரட்டி தினமும் போராடுகிறோம்.**

ஜனநாயக நடைமுறைகளை வெறுத்து ஒதுக்கி வரும், பாஜக ஒன்றிய அரசின் மூர்க்கத்தனமான அடக்குமுறைகளையும் எதிர்த்துத் தொடர்ந்து அரசியல் இயக்கங்களை நடத்தி வருகிறோம்.

உள்ளூர் மக்கள் பிரச்சினைகள் தொடங்கி முதல் உலக நாடுகளின் உறவுகள் வரை எல்லா நிலைகளிலும் ஏகாதிபத்திய ஆதிக்கம், நிதி மூலதனச் சக்திகள், பன்னாட்டுக் குழும நிறுவனங்களுக்கு ஆதரவுக் கொள்கைகள், உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பறிக்கும் நடவடிக்கைகள் என எல்லாவற்றையும் எதிர்த்துப் போராடி வருகிறோம்.

கடந்த மூன்றாண்டுகளில் நாம் மேற்கொண்ட அரசியல் பணிகளையும், அமைப்புநிலைப் பணிகளையும் பரிசீலிப்பது அவசியமாகிறது.

நமது கட்சி, கடந்த 2022 அக்டோபர் 14, 18 தேதிகளில் விஜயவாடா நகரில் நடைபெற்ற 24 வது அகில இந்திய மாநாட்டில் நிறைவேற்றிய அரசியல் தீர்மானம், ஆகஸ்ட் 6, 7, 8, 9 தேதிகளில் திருப்பூர் மாநகரில் நடைபெற்ற 25வது மாநில மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள், இதனைத் தொடர்ந்து, தேசியக் குழு மற்றும் மாநிலக் குழு அவ்வப்போது கூடிய எடுத்த முடிகள் என அனைத்தின் மீதும் நாம் மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பரிசீலிக்க வேண்டும்.

அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமைப்பு நிலை குறித்தும், அதற்கு வகுத்து வழங்கப்பட்ட கடமைகளின் நிறைவேற்றம் குறித்தும் பரிசீலிக்க வேண்டிய கடமையும் முன் வந்துள்ளது.

அமைப்பு நிலையின் பலம், பலவீனம் குறித்து, விமர்சன ரீதியான மதிப்பீடுகள் செய்து, தவறுகளையும், குறைகளையும் நீக்க வழிவகை காண வேண்டும்.

கட்சியின் நிர்வாகப் பொறுப்புகளில் உள்ள தோழர்கள், தங்கள் பணிகளை சுய விமர்சனங்களையும் உள்ளடக்கி அனுபவத்தை பகிர்ந்து கொண்டு, அடுத்த இலக்கை நோக்கி முன்னேற திட்டமிட்டு, செயலாற்ற மாநாடுகள் நடத்தப்படுகின்றன.

நாடு முழுவதும் உள்ள கட்சிக் கிளை அமைப்புகள், இடைநிலை அமைப்புகள் மாவட்ட அமைப்புகளின் மாநாடுகள் நடந்து வருகின்றன.

இந்த மாநாடுகளில், குறிப்பாக கட்சிக் கிளை மாநாடுகள், அன்றாடம் சமூகத்தின் பல தரப்பட்ட மக்களுடன் உயிரோட்டமான உறவும், தொடர்பும் உள்ள அமைப்புகள் என்ற முறையில், கட்சியின் கொள்கை நிலைகள் மற்றும் அரசியல் முடிவுகள் மீது மக்களின் கருத்தோட்டங்களை உள் வாங்கி, மேல் அமைப்புகளுக்கு தெரிவித்து, சரியான முடிவுகள் எடுக்க உதவுகின்றன. இந்தப் பணி இடைக்குழுக்களும், மாவட்டக் குழுக்களும் மாவட்ட அளவிலான கருத்துக்களை தொகுத்து வழங்கி வருகின்றன.

இதனைத் தொடர்ந்து மாநில மாநாடுகள் நிறைவு பெற்று, வரும் செப்டம்பர் 21 முதல் 25 வரையிலும் கட்சியின் 26வது அகில இந்திய மாநாடு பஞ்சாப் மாநிலத் தலைநகர் சண்டிகரில் நடைபெறவுள்ளது.

நமது கட்சியின் அமைப்பு விதிகள், கட்சி அமைப்புகளுக்கும், உறுப்பினர்களுக்கும் மிக விரிவான ஜனநாயக உரிமைகளை வழங்குகிறது.

கட்சி உறுப்பினர், தனது உள்ளத்தில் உருவாகும் கருத்துக்களை ஒளிவு, மறைவு இல்லாமல் கட்சி அமைப்பில் முன் வைக்க அனுமதிக்கிறது. இதன் மீது கட்சி அமைப்பு மேற்கொள்ளும் முடிவுக்கு உறுப்பினர் கட்டுப்பட்டு செயலாற்றும் கடமையினையும் வலியுறுத்துகிறது.

மேதை லெனின் வகுத்தளித்த ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடுகளை கட்சி, வாழ்க்கை நெறியாகப் பின்பற்றி வருகின்றது. இதனடிப்படையில் மாநாடுகளில் மிக உயர்ந்தபட்ச ஜனநாயகம் பின்பற்றப்படுவதைக் காண முடியும்.

ஜனநாயகம் என்பது மிக, மிக முக்கியமானது. அதே நேரத்தில், வரம்பற்ற ஜனநாயகம் அராஜக நிலைக்கு தள்ளிவிடும் என்பதும் கருத்தில் கொள்ள வேண்டும். இந்த நிலையில் உழைக்கும் மக்களின் ஜனநாயகம் என்பது வரைமுறைகள் கொண்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிளை மாநாடுகளில் தேர்வு செய்யப்படும் பிரதிநிதிகள், இடைநிலை அமைப்புகளின் மாநாடுகளிலும், இடைநிலை அமைப்பு மாநாடுகளில் தேர்வு செய்யப்படும் பிரதிநிதிகள் மாவட்ட மாநாடுகளிலும், மாவட்ட மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் மாநில மாநாட்டிலும்,



மாநில மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள், கட்சிப் பேராயத்திலும் பங்கேற்க உரிமை பெறுகிறார்கள்.

கட்சி அமைப்புகள் பரிபூரண உள் கட்சி ஜனநாயக முறைகளை பின்பற்றி, கிளைகள் தொடங்கி, தேசியக் குழு வரை இத்தகைய முறையை நாம் பின்பற்றுகிறோம் என்பது நம் அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான்.

நம் கட்சியின் அமைப்பு விதிகள் தான் நம் ஒவ்வொருவரையும் வழி நடத்துகின்றது.

தோழர்களே, நம் நாட்டை வழி நடத்துவது, "மக்களாகிய நாம்" ஏற்றுக் கொண்ட அரசியலமைப்புச் சட்டம்.

அரசியலமைப்புச் சட்டத்திற்கு புறம்பாக எவரும் செயல்பட முடியாது, கூடாது.

நாட்டிற்கு அரசியலமைப்புச் சட்டம் மிக முக்கியமானது போன்று கட்சியை கீழ் இருந்து மேல் வரை வழிநடத்துவது கட்சியின் அமைப்பு விதியாகும்.

உறுப்பினர் தொடங்கி பொதுச் செயலாளர் வரை கட்சி கிளை தொடங்கி கட்சி பேராயம் வரை நமக்கு வழிகாட்டுவது நாம் ஏற்றுக் கொண்டு இருக்கின்ற அமைப்பு விதியாகும்.

ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு அமைப்பும் பிரச்சனைகளை அரசியல் ரீதியாக அணுக வேண்டும். அதன் மீது அமைப்பு ரீதியாக செயல்பட வேண்டும். அரசியல் முடிவுகளுக்கு அப்பால் சென்று செயல்பட முடியாது. அதே போன்று அமைப்பு முறைகளுக்கு உட்படாமலும் செயல்பட முடியாது.

நாம் கம்யூனிஸ்ட்கள் என்கிற முறையில் நமக்கு இரண்டு நெறிமுறைகள் உண்டு.

ஒன்று அரசியல், மற்றொன்று அமைப்பு நிலை.

இவை இரண்டையும் இரண்டு கண்களைப் போன்று மதிக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் கிளை மாநாடுகள் எவ்வாறு நடைபெற வேண்டும். இடைநிலை, மாவட்ட மற்றும் மாநில மாநாடுகள் நடைபெற வேண்டும் என்பது குறித்து ஒரு விரிவான சுற்றறிக்கை மாநில மையத்திலிருந்து, கட்சி அமைப்புகளில் செயல்படும் நிர்வாகிகள் மாநிலக் குழு உறுப்பினர்கள், மாவட்டக் குழு உறுப்பினர்கள், இடைக்குழு உறுப்பினர்கள் மற்றும் கிளைச் செயலாளர்கள் அனைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

மாநிலக் குழு அனுப்பிய சுற்றறிக்கை கிடைக்கப் பெற்ற தோழர்கள் மிக பயனுள்ளதாக இருந்தது என தெரிவித்து வருகின்றனர்.

மாநிலம் முழுவதும் கிளை மாநாடுகள் நடைபெற்று முடிந்துள்ளது. ஒரு சில மாவட்டங்களில் தவிர்க்க முடியாத பல்வேறு அரசியல் பணிகள் காரணமாக கிளை மாநாடுகள் தொடங்கி நடைபெற்றுக் கொண்டுள்ளன.

சில மாவட்டக் குழுக்கள், கிளை, இடைநிலை மாநாடுகளை நடத்தி முடித்து, மாவட்ட மாநாடுகளையும் நடத்தி முடித்துள்ளன.

குறிப்பாக சேலம், கன்னியாகுமரி, தூத்துக்குடி, ஈரோடு தெற்கு, தனி 2, தனி 4 போன்ற மாவட்டங்களின் மாநாடு நடந்து முடிந்துள்ளன.

மற்ற மாவட்டங்களும் முனைப்பாக செயல்பட்டு வருகின்றன. கிளை மாநாடுகளை முழுமையாக முடித்த மாவட்டங்களில் உள்ள கிளை செயலாளர்களுக்கு மாநிலக்குழு சார்பில் வாழ்த்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

குறிப்பாக, சேலம், குமரி, தேனி, தென்காசி, கள்ளக்குறிச்சி, அரியலூர், திருச்சி மாநகர் போன்ற மாவட்டங்களில் கிளை மாநாடுகளில் தேர்ந்தெடுக்கப் பெற்ற அனைத்து கிளைச் செயலாளர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

பல கிளைச் செயலாளர்கள் கடிதம் கிடைத்தது குறித்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்து மாநில மையத்திற்கு பதில் கடிதம் அனுப்பியுள்ளனர்.

புதுக்கோட்டை, திருநெல்வேலி மாவட்டக் குழுக்கள் தேர்ந்தெடுக்கப் பெற்ற கிளைச் செயலாளர்களில் ஒரு பகுதியினர் முகவரியை மட்டும் அனுப்பியுள்ளது. அவ்வாறு அனுப்பப்பட்ட கிளைச் செயலாளர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

கிளை மாநாடுகளில் தேர்ந்தெடுக்கப்படும் அனைத்து கிளைச் செயலாளர்களுக்கும் கடிதம் அனுப்பப்படும்.

அவர்களுக்கு மட்டுமின்றி, இடைநிலை மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்படும் இடைநிலைக் குழு உறுப்பினர்கள், மாவட்ட மாநாடுகளில் தேர்ந்தெடுக்கப்படும் மாவட்டக்குழு உறுப்பினர்களுக்கும் கடிதங்கள் அனுப்பப்படும்.

மாவட்டச் செயலாளர்கள், கிளைச் செயலாளர்கள், இடைநிலைக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் குழு உறுப்பினர்கள் முழு முகவரியைத் தவறாது விரைவாக, மாநில மையத்துக்கு அனுப்பி வைத்திட வேண்டுகிறோம்.

கிளை மாநாடுகளில் சேலத்தில் நடைபெறவுள்ள மாநில மாநாட்டிற்கு பேரணியில் பங்கேற்க ஒவ்வொரு கட்சி கிளையும் குறைந்தபட்சம் ஒரு வாகனம் ஏற்பாடு செய்து வருவது பாராட்டிற்குரியது. இவை மட்டுமின்றி,

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

# பாஜக ஆட்சியின் 11 ஆண்டுகள்: கொடுங்கோன்மையின் பேரழிவுகள்



**2025 ஆம் ஆண்டில், மோடி அரசாங்கம் பதினோராவது ஆண்டை நிறைவு செய்கிறது. இடையீடற்ற அதன் ஆட்சி கொண்டாடத்தக்கது அல்ல. மாறாக உண்மையான முன்னேற்றத்தை உருவாக்குவதற்குப் பதிலாக, தொடர்ச்சியான அரசியல் வஞ் சகத்தின் மூலம் எவ்வாறு நீடித்து நிலைநிற்க முடியும் என்பதை நினைவூட்டுவதாகும்.**

தொடக்கத்திலிருந்தே, நரேந்திர மோடி அளித்த வாக்குறுதிகள் கொள்கை உறுதிமொழிகளாக இல்லை. அவை வெகுமக்களின் ஆசைகளைத் தூண்டிவிடும் கருவிகளாக இருந்தன. உணர்ச்சிகளைக் கைப்பற்ற வடிவமைக்கப்பட்ட முழக்கங்களே தவிர, வேறு விளைவுகள் எதையும் நிறைவேற்றாதவை. அவை ஒவ்வொன்றும் மக்களின் கவலைகளையும், நியாயமான விருப்பங்களையும் எடுத்துரைத்து, அவர்களை ஈர்த்து, அதன் மூலம் தம்மை அரசியல் அதிகாரத்தில் நிலைநிறுத்திக் கொள்வதையும், அதன் வழியாக ஒரு சில காா்ப்பரேட் நிறுவனங்கள் தேசிய வளங்களைக் கொள்ளை அடிப்பதற்கு உதவுவதையும் மட்டுமே நோக்கமாகக் கொண்டிருந்தன.

அரசியலுக்கான அடித்தளமாகப் பயன்படுத்திக் கொள்வதை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருந்தன.

ஒவ்வொரு ஆண்டும் 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு என்ற அந்தப் புளித்துப்போன வாக்குறுதியை எடுத்துக் கொள்ளுங்கள். இதனை நிறைவேற்றுவதற்கான கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு அரசு கவலையேபடவில்லை. இது இளைஞர் களுக்கு ஆசையூட்டி தம் பக்கம் இழுத்துக் கொள்வதற்கான வெற்று முழக்கம் தான்.

2025 ஆம் ஆண்டுக்குள், இந்தியாவில் 22 கோடி வேலைகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். உண்மை மிகவும் கொடூரமானது. இந்தியா, கடந்த அறுபது ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிக மோசமான வேலைவாய்ப்பு நெருக்கடியை அனுபவித்து வருகிறது. இளைஞர்களின் எதிர்காலம் நிச்சயமற்றதாகிவிட்டது. தகுதிவாய்ந்த பட்டதாரிகள், அலுவலக உதவியாளர் வேலைக்கு வரிசையில் நிற்கிறார்கள். வேலைவாய்ப்பு குறித்த தரவுகள் மறைக்கப்படுகின்றன அல்லது சிதைக்கப்படுகின்றன. வேலையின்மை என்பது ஒரு வாழ்க்கை முறைமையாகிவிட்டது. ஆனால் அரசாங்கமோ மற்றவர்களை குறை கூறிக் கொண்டிருக்கிறது.

வேறு வழியின்றி இளைஞர்கள் மேற்கொள்ளும், சாலையோர பக்கோடா கடைகள், உணவகங்களில் இருந்து உணவு வாங்கித் தரும் (ஜிக்) பணிகள், அன்றாட கூலி வேலை போன்றவற்றை, அவர்கள் “தொழில் முனைவோர்” என்று ஆகிவிட்டதாக பொய்யாகச் சொல்லி, மோடி அரசு நெருக்கடியை குறைத்துக் காட்டுகிறது. வேலைகளை உருவாக்குவது என்பது, அரசுக்கு ஒரு இலக்காக இல்லை. அது இளைஞர்களுக்காக போடப்பட்ட தூண்டில் மட்டுமே!

ஒவ்வொருவர் வங்கிக் கணக்கிலும் 15 லட்சம் ரூபாய் டெபாசிட் செய்யப்படும் என்று மோடி திரும்பத் திரும்பக் கூறியது ஏதோ வாய் தவறிவந்ததல்ல. ஏழைகளின் நம்பிக்கையைத் தூண்டி, கருப்புப் பணத்தை மீட்கும் மீட்பராக தன்னைக் காட்டிக்கொள்வதற்காக திட்டமிட்டு வடிவமைக்கப்பட்ட பிரம்மாண்டமான பொய் அது! ஆட்சிக்கு வந்ததும், இந்த வாக்குறுதியை நிறைவேற்ற எந்த முயற்சியும் இல்லை.

மிகச் சாதாரணமாக, இது ஒரு “ஜும்லா”, ஒரு தேர்தல் நேர தந்திரம் என்று பாஜகவின் மூத்த தலைவர்கள் நிராகரித்தனர். ஆனால், பொருளாதார நிவாரணத்தில் ஒரு பகுதியையாவது எதிர்பார்த்திருந்த பல கோடிக்கணக்கான மக்களுக்கு, இது ஒரு நகைச்சுவை அல்ல. இது வடிகட்டிய துரோகம். கருப்புப் பணத்தை மீட்டெடுப்பதற்கான எந்த தடயமும் இல்லை. மாறாக, முதலாளிகளிடமிருந்து திரை மறைவில் பெரும் நிதியை பெறுவதற்காக, தேர்தல் பத்திரங்கள் போன்ற புதிய வழிமுறைகள் உருவாக்கப்பட்டன. பெரு நிறுவனங்கள் கொள்ளை அடிப்பதில் பங்கு வாங்குவது சட்டப்பூர்வமாக்கப் பட்டது. இது ஊழலை ஒழிப்பது அல்ல; பதிலாக அதனை நியாயப்படுத்தி நிறுவனமயமாக்குவதே!




2022 க்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதாக வாக்குறுதி அளித்தது மற்றொரு கொடூரமான ஏமாற்று வேலை. மோடியின் அரசாங்கம் பல ஆண்டுகளாக இதை தலைப்புச் செய்தியாக ஆக்கியது, கிராமப்புற துயரங்களுக்கு ஒரு முடிவு காண முடியாமல் அரசு முற்றிலும் தோற்றுப் போனதை மறைக்க, வெறும் வாய்ப்பந்தல் போட்டது.

வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்குப் பதிலாக, விவசாயிகள் இன்று கடனில் மூழ்கிக் கிடக்கிறார்கள். அதிகரித்து வரும் விவசாய உள்ளீட்டுச் செலவுகள், கட்டுபடியாகாத விலைகள் மற்றும் ஒழுங்கற்ற கொள்முதல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விவசாயிகளை கலந்து கொள்ளாமல், அவர்கள் மீது மோடி அரசு திணித்த மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்துப் போராடியபோது, அவர்களை தேச விரோதிகளாக அரசு முத்திரை குத்தியது.

மோடி அரசு ஒரு வருடத்திற்கும் மேலாக அவர்களின் கோரிக்கைகளை புறக்கணித்தது, இதனால் போராட்டங்களின் போது 700க்கும் மேற்பட்ட விவசாயிகள் கொல்லப்பட்டனர். நாடாளுமன்றத் தேர்தலை எதிர் நோக்கும் நேரத்தில்தான் அரசாங்கம் சட்டங்களை ரத்து செய்தது. இது அக்கறையால் விளைந்ததல்ல வெறும் தேர்தல் கணக்கீடு.

இது தவறு ஒன்றும் இல்லை, இதுவே வேலை முறை என்று அவர்கள் கருதுகிறார்கள். ஊழல், விலை நிர்ணயம், வளர்ச்சி போன்ற ஒவ்வொரு முக்கிய பிரச்சார வாக்குறுதியும், மக்களின் உணர்வுகளைப் பயன்படுத்திக் கொள்ளவும், தேர்தலில் வெற்றி பெறவும் மட்டுமே வடிவமைக்கப்பட்டவை. அருமை ஏமாற்று வித்தை. எனவே ஆட்சிக்கு வந்தவுடன், அவர்களது சொந்த நிகழ்ச்சி நிரல் முக்கியத்துவம் பெற்றது. அதிகாரத்தை மையப்படுத்துதல், நிறுவனங்கள் மீது கட்டுப்பாடு, மாற்றுக் கருத்துக்களை நசுக்குதல், பெருநிறுவன நலன்களை அப்பட்டமாகப் பாதுகாத்தல் போன்றவை ஆட்சியின் அடிப்படைகளாக மாறின.

உண்மையில், பல பத்தாண்டுகளாக நாம் பார்த்திராத அளவுக்கு, மிகவும் பொறுப்பற்ற, சர்வாதிகார ஆட்சியைத்தான், மோடி “நல்லாட்சி” என்று சந்தைப்படுத்தினார்.

நாடாளுமன்றம் வெறும் கூச்சல் போடும் கூடாரமாக சுருக்கப்பட்டது. விவாதங்களே இல்லாமல் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன..

ஒரு காலத்தில் “முதன்மைப் பணியாளர்” என்று கூறிக்கொண்ட பிரதமர், பத்திரிகையாளர் சந்திப்புகளைத் தவிர்த்து, எதற்கும் பொறுப்பேற்க மறுத்து, நடனக் கலை வடிவிலான வாய்வீச்சுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருக்கிறார். பாஜகவின் ஆட்சி என்பது சேவை அல்ல. எல்லாவற்றின் மீதும் கட்டுப்பாடு. மாற்றுக் கருத்தை, எடுத்துரைப்பை, பெரு நிறுவனங்களை, பொருளாதாரத்தை, சமூகத்தை முற்றாக தனது கட்டுப்பாட்டின் கீழ் அடக்கி வைப்பதுதான் அவர்களது ஆட்சி முறைமை.

இந்தக் கட்டுப்பாடு யாருக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது? தொழிலாளர்களுக்காக அல்ல, விவசாயிகளுக்காக அல்ல, வேலையில்லாத இளைஞர்களுக்காக அல்ல. ஆனால் பெரும் பணக்காரர்களுக்காக மட்டுமே இது பயனளிக்கிறது. மோடியின் ஆட்சியின் கீழ், இந்தியாவில் பொருளாதார சமத்துவமின்மை அதிர்ச்சியூட்டும் வகையில் அதிகரித்துள்ளது.

அரசாங்கத்திற்கு நெருக்கமான ஒரு சில பில்லியனர்கள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு செல்வத்தைக் வாரிக்குவித்துக் கொண்டே இருக்கின்றனர், அதே நேரத்தில் பெரும்பான்மையானவர்கள் பணவீக்கம், ஊதிய தேக்கம், வேலையின்மையால் வாழ்க்கை நடத்த இயலாமல் திண்டாடுகிறார்கள்.

தனியார்மயமாக்கல் மற்றும் ஒருதலைப்பட்ச கொள்கை முடிவுகள் மூலம், நாட்டின் வளங்கள் பெருநிறுவனக் கூட்டாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தனியார் முதலாளிகளுக்கு பலனளிக்கும் வகையில் பொதுத்துறை திட்டமிட்டு பலவீனப்படுத்தப்பட்டுள்ளது. பெயருக்குப் பொதுத் துறையாக இருக்கும் நிறுவனங்களிலும், குறிப்பிட்ட சில தனியார் முதலாளிகளுக்கு கான்ட்ராக்ட் தருவதன் மூலம், அவர்களுக்கு லாபம் மடை மாற்றப்படுகிறது. இது வளர்ச்சி அல்ல, இது பெருநிறுவன மற்றும் பெரிய வணிக நிறுவனங்களுக்கு வளங்களை கை மாற்றுவதற்காகவே ஒழுங்கமைக்கப்பட்ட பொருளாதாரப் பரிமாற்றம்.

“டிஜிட்டல் இந்தியா” மற்றும் “ஸ்டார்ட்அப் இந்தியா” பிரச்சாரங்கள் கூட உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதையோ அல்லது உண்மையான புதுமைகளை உருவாக்குவதையோ நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. குறிப்பாக எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களில் அல்லது காஷ்மீர் மணிப்பூர் போன்ற மோதல் மண்டலங்களில், இணைய வசதியை முடக்கி, தகவல் தொடர்பு சுதந்திரத்தை நசுக்குகிற பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. இணைய முடக்கம் செய்வதில் இந்தியா முன்னணி நாடுகளில் ஒன்றாக மாறியது.

இதற்கிடையில், தொடக்க நிறுவனங்கள் அதிகரித்து வரும் வரிவிதிப்பு, முதலீட்டாளர் இது நம்பகத்தன்மை இழப்பு, ஏற்ற அரசு கொள்கைகள் ஆகியவற்றால் சீரழிக்கப்படுகின்றன. விரைவான டிஜிட்டல் வளர்ச்சி, மக்களைக் கண்காணிப்பதற்கே அல்லாமல், அவர்களுக்கு அதிகாரமளிக்கப் பயன்படுத்தப்படவில்லை.

“சப்கா சாத், சப்கா விகாஸ்” என்ற முழக்கம், ஆரம்பத்தில் இருந்தே பிஜேபியின் மதவெறி குறுங்குழுவாக திட்டத்தை மறைப்பதற்கான ஒரு முகமூடியாக இருந்தது

பல ஆண்டுகளாக, இந்த ஆட்சி சிறுபான்மையினரை மீண்டும் மீண்டும் குறிவைத்தது, பத்திரிகையாளர்களின் வாயை மூடச் செய்தது, செயற்பாட்டாளர்களை சிறையில் அடைத்தது, அரசியலமைப்பின் மதச்சார்பற்ற அடித்தளங்களை பலவீனப்படுத்தியுள்ளது. வன்முறை, வெறுப்பு, மதம், சாதி, வாழும் இடம், பேசும் மொழி ஆகியவற்றால் மக்களை தனித்தனியாக பிரித்து நிறுத்துதல் ஆகியவை தேர்தல் அணிதிரட்டலின் கருவிகளாக மாறிவிட்டன. தலித்துகளுக்கு எதிரான அட்டூழியங்கள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தண்டனையின்றி அதிகரித்து வருகின்றன. பல்கலைக்கழகங்கள், தெருக்கள் அல்லது நீதிமன்றங்களில் இருந்தாலும், கருத்து வேறுபாடுகளை வெளிப்படுத்தும் ஒவ்வொரு முயற்சியும் மிருகத்தனமான அரசு அதிகாரத்தினாலோ அல்லது விஷப் பிரச்சாரத்தினாலோ அடக்கி ஒடுக்கப்படுகிறது. இது தேசிய ஒற்றுமை அல்ல இது ஒரு சித்தாந்த ஆதிக்கம்!

கடந்த 11 ஆண்டுகளாக மக்களைத் திட்டமிட்டு ஏமாற்றித் துரோகம் செய்து இருக்கிறார்கள். மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை ஒருபோதும் நிறைவேற்ற விரும்பாத அரசாங்கம் இது. மக்களுக்காக அது தன்னை அர்ப்பணித்துக் கொள்ளவில்லை. மாறாக அதன் பெருநிறுவன ஆதரவாளர்கள், பொய்களையும் அரை உண்மைகளையும் தனக்குச் சாதகமாக பரப்புகிற கட்டமைப்பு அப்பட்டமான மதவெறி ஆகியவையே இந்த அரசின் இயக்க அடித்தளம் ஆகும்.

மோடியின் வாக்குறுதிகள் ஒருபோதும் கொள்கை நோக்கங்களாக இருக்கவில்லை, அவை தேர்தலுக்கான ஆயுதங்களாகத் தயாரிக்கப்பட்டவை.

இந்திய மக்களை தனது விருப்பத்திற்கு ஏற்ப உழைத்துக் கொள்ளும் இறைஅச்சத்தை உருவாக்குபவை.

பாஜக இப்போது 11 ஆண்டுகளைக் குறிக்கும் நிலையில், முழக்கங்கள் மற்றும் காட்சிகள் மூலம் வரலாற்றை திருப்பி எழுத அனுமதிக்கக்கூடாது. கொடுத்த வாக்குறுதிகளை ஏன் நிறைவேற்றவில்லை

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 88 இதழ் 12

# கொலைகார இஸ்ரேலுக்கு இந்தியா துணை போகக் கூடாது!

காசாவில் அப்பாவி பாலஸ்தீன மக்கள் மீது தாக்குதல் தொடுத்து, பெரும் இனப்படுகொலையை நிகழ்த்திய இஸ்ரேல், ஜூன் 13ஆம் தேதி ஈரான் மீது போர் துவக்கியுள்ளது.

இஸ்ரேல் அணுஆயுதம் வைத்துக் கொள்ளுமாம், ஆனால் ஈரான் வைத்திருப்பதை அனுமதிக்காதாம்!

இவ்வளவுக்கும் ஈரான், இஸ்ரேலின் பக்கத்து நாடு அல்ல. 2000 கிலோமீட்டர்களுக்கு அப்பால் இருக்கும் நாடு. அமெரிக்கக் குரங்கு, இஸ்ரேல் குட்டியை விட்டு ஆழம் பார்க்கிறது!

ஈரான் மீது தொடர்ந்து பொருளாதாரத் தடையை அமெரிக்கா விதித்துள்ளது. அதனை மீறி உலகின் வேறு எந்த நாடும் ஈரானுக்குப் பொருட்களை ஏற்றுமதி செய்யவோ அல்லது ஈரானிலிருந்து இறக்குமதி செய்யவோ முடியாது. இதனால் ஈரானின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

கச்சா எண்ணெய் அமெரிக்க டாலரில் வாங்குவது இந்தியாவுக்குக் கடினமானது. ஆனால், ஈரான் நமது ரூபாயை வாங்கிக் கொண்டு குறைந்த விலையில் எண்ணெய் வழங்கியது.

'விஸ்வகுரு' அஞ்சாத 56 இன்ச் மோடி, அமெரிக்காவின் மிரட்டலுக்கு அடிபணிந்து, படிப்படியாக எண்ணெய் இறக்குமதியைக் குறைத்து 2019ல் முற்றிலுமாக நிறுத்திவிட்டார். அதுபோலவே ஈரான் வெளிநாடுகளில் இருந்து, மருந்து, உணவு பொருள் மட்டும் அல்ல, நவீன ஆயுதங்கள், போர் விமானங்களை வாங்கவும் முடியாது. ஈரானிடம் இருப்பதெல்லாம் 15 ஆண்டுகள் பழையவை.

இஸ்ரேலில் மொசாத் உளவுப் படை, ஈரானுக்குள் ஊடுருவியுள்ளது. ஈரானியத் தலைவர்களைக் கொலை செய்யும் திட்டம் அவற்றுக்குத் தரப்பட்டிருக்கிறது.

எளிதில் வீழ்த்தி விடலாம் என்ற திட்டத்தோடு இஸ்ரேல் தாக்குதல் தொடுத்தது. முதலில் ஈரானில் உள்ள அணு ஆய்வு நிலையத்தைக் குறி வைத்து ஏவப்பட்ட ஏவுகணை, அந்த ஆய்வகம் தரைக்குக் கீழே கட்டப்பட்டிருந்ததால், பாதிப்பை ஏற்படுத்தவில்லை; எதிர்பார்த்தபடி அணுக்கதிர் வீச்சு எழும்பி ஈரானை அழிக்கவில்லை.

ஈரான் எதிர்த்தாக்குதல் தொடுக்கிறது. இஸ்ரேலின் இரும்புத் திரைகளையெல்லாம் துளைத்துக் கொண்டு பெரிய நகரான டெல்அவிவ், கடற்கரையோர ஹைஃபா நகரங்களின் மீது ஏவுகணைகளை வீசி கடும் சேதத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

கொடுங்கோலனான பிரதமர் நேத்தன்யாகு வீட்டின் மீதும், எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையத்தின் மீதும், உளவு அமைப்பு மொசாத் கட்டிடத்தின் மீதும் குண்டுகள் வெடித்துள்ளன.

சர்வாதிகார அரசாங்கத்திடமிருந்து மக்களை விடுவிக்கப் போவதாக நேத்தன்யாகு சொல்வதை ஈரான் மக்கள் ஏற்கவில்லை. கொமேனி தலைமை மீது கடும் எதிர்ப்பு இருந்தவர்கள் கூட, தொடுக்கப்பட்ட யுத்தத்தை எதிர்த்து நாட்டோடு சேர்ந்து நிற்கிறார்கள்.

ஆனால் அதே நேரத்தில், முதல் தடவையாகத் தங்கள் குடியிருப்புகளுக்குள் குண்டுகள் விழுவதைப் பார்க்கிற இஸ்ரேல் மக்கள், போருக்கும் அரசாங்கத்துக்கும் எதிராக அணி திரள்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு இஸ்ரேல் அரசு பெரும்பாடு படுகிறது.

இந்தியா எப்போதும் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாகவே இருந்தது. 1992 வரை இஸ்ரேலுடன் அரசு பூர்வமான உறவுகள் ஏதும் கிடையாது.

வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது, 2003ல் முதல்முறையாக இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோன் இந்தியாவுக்கு வந்தார். ராணுவம், உளவறிதல் துறைகளில் இந்தியா ஒப்பந்தம் செய்து கொண்டது. மோடி ஆட்சிக்கு வந்ததும், இஸ்ரேலுடன் அதிக நெருக்கத்தை ஏற்படுத்தினார். 2017ல் மோடி அங்கு சென்று, நேத்தன்யாகுவைக் கட்டித்தழுவி என் நண்பர் என்றார். பாலஸ்தீனம் என்ற பெயரை உச்சரிப்பதைக் கூடத் தவிர்த்தார்.

இஸ்ரேலுடன் ராணுவ ஆயுதங்கள், போர்க்கருவிகள், விவசாயம், நீர்ப்பாசனம், தொழில் ஆய்வு மற்றும் மேம்பாடு, மருத்துவம் உள்ளிட்ட பல துறைகளில் மோடி அரசு ஒப்பந்தங்களைச் செய்திருக்கிறது.

அது மட்டுமல்ல, மோடியின் நேசர்களான அதானி, அம்பானி, டாட்டா, மகேந்திரா உள்ளிட்ட இந்திய கார்ப்பரேட்டுகள் ஏராளமாக இஸ்ரேலில் முதலீடு செய்து பல தொழிற்சாலைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்போது தாக்குதலுக்கு உள்ளான ஹைஃபா துறைமுகம் அதானிக்குச் சொந்தமானது.

தற்போது ஜி7 மாநாட்டில் கலந்துள்ள மோடி, "ஈரான் அணு ஆயுதத்தை உற்பத்தி செய்யக் கூடாது, அதனைத் தடுத்து இஸ்ரேல் தனது பாதுகாப்பை உறுதி செய்வது அதன் உரிமை" என்ற தீர்மானத்தை ஆதரித்துள்ளார்!

கூடுதலாக ஆர்.எஸ்.எஸ்.ஸின் இந்துத்துவாவும், இஸ்ரேலின் ஜியோனிசமும் ஒன்றுக்கொன்று நெருங்கியவை. முஸ்லிம்களை தமது எதிரியாக வரித்துக் கொண்டவை.

இதனால் இஸ்ரேலுக்கு வெளிப்படையான ஆதரவை மோடி தருகிறார். விடுதலையையும் நீதியையும் வலியுறுத்துகிற இந்தியாவின் பாரம்பரியமான உறுதிப்பாட்டுக்கு நேர் எதிராக, கொலையாளிகளுடன் வெட்கமின்றி மோடி அரசு கூட்டுச் சேர்ந்துள்ளது.

இதற்கு எதிராக இந்தியாவின் முற்போக்கு சக்திகள் கிளர்ந்தெழ வேண்டும்.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தூத்துக்குடி மாவட்ட 12வது மாநாடு




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தூத்துக்குடி மாவட்ட 12வது மாநாடு ஆழ்வார் திருநகரியிலுள்ள சுவேதா திருமண மண்டபத்தில் விஜயகுமார் லோகநாதன் மற்றும் சேதுராமலிங்கம் ஆகியோர் தலைமையில் தியாகசீலர் ப.மாணிக்கம் நினைவரங்கத்தில் 14.06.25ல் நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கட்டுப்பாட்டுக்குழு தலைவர் கே.சுப்பராயன் எம்.பி அவர்கள் தூத்துக்குடி மாநகரத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட மாநாட்டுக் கொடியினைப் பெற்றுக் கொண்டு ஏற்றி மாநாட்டைத் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் டி.ராமசாமி, எக்ஸ்.எம்.எல்.ஏ. திருச்செந்தூர் ஒன்றியத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட தியாகிகளின் நினைவு ஜோதியினைப் பெற்றுக்கொண்டு மாநாட்டை வாழ்த்தியும் சிறப்புரையாற்றினார்.

அஞ்சலித் தீர்மானத்தை மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் சேதுராமலிங்கம் முன்வைத்தார். ஸ்தாபனம் மற்றும் வேலை அறிக்கையினைக் கட்சியின் மாவட்டச் செயலாளர் பி.கரும்பன் சமர்ப்பித்தார். அரசியல் அறிக்கையினை மாவட்ட துணைச் செயலாளர் பாலமுருகன் முன்வைத்தார், வரவு செலவு அறிக்கையினை மாவட்டப் பொருளாளர் த.சுப்பிரமணியன் முன்வைத்தார்.

மாநாட்டுப் பிரதிநிதிகளின் விவாதத்திற்குப் பின்பு அரசியல், ஸ்தாபன வேலை அறிக்கை மற்றும் வரவு செலவு ஆகிய அறிக்கைகள் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

தூத்துக்குடி மாவட்ட மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளான குடிநீர் விநியோகம், மின்சார வசதி, தெரு விளக்குகள், சாலை வசதிகள், போக்குவரத்து வசதிகளை உடனடியாகத் தீர்க்க மாவட்ட நிர்வாகம் தமிழக அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும், மாவட்டத்தில் பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் பன்றிகளிடமிருந்து விவசாயிகளையும், விவசாய விளைபொருள்களையும், பொது மக்களையும் பாதுகாத்திடவும் விவசாயிகள் அச்சமின்றி விவசாயத்தை மேற்கொள்ளவும் பன்றிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும் மாவட்டத்தில் தனிக் குழு ஏற்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், பன்றிகளால் பாதிப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு உரிய நஷ்டஈடு வழங்க வேண்டும் என மாவட்ட நிர்வாகத்தையும் தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொண்டு ஏக மனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாவட்டச் செயலாளராக பி.கரும்பன், துணைச் செயலாளர்களாக வ.பாலமுருகன், ஜி.பாபு, பொருளாளராக சுப்பிரமணியன் ஆகியோர் ஏக மனதாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

மாநாட்டின் நிறைவில் மாநிலக் குழு உறுப்பினர் எஸ்.பி. ஞானசேகர் நன்றியுரை ஆற்றினார்.



## சிவக்கட்டும் சேலம்!

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஒவ்வொரு கட்சி கிளையும் மக்கள் தொண்டர் அணிக்கு குறைந்தபட்சம் ஒரு இளம் தோழரை தேர்வு செய்து வருவது வரவேற்கதக்கது.

தொண்டர்களுக்கான பயிற்சி முகாம்கள் நடைபெற்று வருகின்றன. சேலம் மாவட்டம் மட்டும் மண்டல வாரியாக முகாம் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இளம் பெண் தோழர்களும் மாவட்ட வாரியாக தேர்வு செய்யப்பட்டு மண்டல வாரியாக பயிற்சி முகாம்கள் நடைபெற்று வருகின்றன.

சேலம் பேரணியில் சீருடை அணிந்த தொண்டர்களின் கம்பீரம் மிக்க அணிவகுப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து முனைப்போடு செயல்பட்டு வருவதும், இவர்களுக்கான பயிற்சி அளித்திட தோழர்கள் எம்.இலகுமய்யா, சந்திரசேகர ஆசாத், திருப்பூர் பன்னீர் மற்றும் தோழர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

ஆம், கட்சியின் மாநில 26வது மாநாடு மாநகர் சேலம் நகரில் ஆகஸ்ட் 15ல் தொடங்கி 18ம் நாள் வரை நான்கு தினங்கள் நடைபெறவுள்ளது.

மாநாட்டில் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. அவைகள் குறித்த விவரம் அடுத்தடுத்த வாரங்களில் வெளியிடப்படும்.

மாநாட்டு நிறைவு நாளான ஆகஸ்ட் 18ம் நாள் நடைபெறவுள்ள மாபெரும் பேரணியிலும் பொதுக் கூட்டத்திலும் பங்கேற்க, ஆயிரமாயிரமாய், பல்லாயிரமாய், குடும்பத்தோடு லட்சக்கணக்கில் பங்கேற்க ஆயத்தமாவீர்!

சேலம் மாநகர் செம்மயமாகி, சிவக்கும் எழிலார்ந்த காட்சியை நாடு காண வேண்டும்.

மீண்டும் சந்திப்போம்.

வணக்கம்.

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

## கொடுங்கோன்மையின் பேரழிவுகள்

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

என்பது மட்டுமே அல்ல, அந்த வாக்குறுதிகள் ஏன் முன்வைக்கப்பட்டன என்பதை மக்கள் ஆய்வு செய்ய வேண்டும். அவை மக்களை ஏமாற்றவும், திசைதிருப்பவும், பிளவுபடுத்தவும் மட்டுமே பயன்படுத்தப்பட்டன. இதன் மூலம் அவர்கள் அதிகாரத்துக்கு வந்தார்கள், இல்லாத அதிகாரங்களையும் குவித்துக் கொண்டார்கள், நிறுவனங்களை கைப்பற்றினார்கள், நாட்டின் வளங்களை எல்லாம் தனது வணிகக் கூட்டாளிகளிடம் ஒப்படைத்தார்கள். இதனை நாடு நினைவில் கொள்ள வேண்டும்.

இன்று இந்திய மக்களின் முன் உள்ள பணி, பாஜக ஆர்எஸ்எஸ் கூட்டணியின் ஏமாற்றுதலை அம்பலப்படுத்துவது மட்டுமல்லாமல், அத்தகைய துரோகம் மீண்டும் ஒருபோதும் அனுமதிக்கப்படாமல் பார்த்துக் கொள்வதும் ஆகும். பொய்களின் அடிப்படையில் ஜனநாயகம் வாழ முடியாது. அது உண்மையின் மூலம் மீட்டெடுக்கப்பட வேண்டும். போராட்டங்கள் மூலம், மக்களின் ஒற்றுமை மூலம், நாட்டின் அரசியலமைப்பு காப்பாற்றப்பட வேண்டும், இது மட்டும்தான் அனைத்து குடிமக்களுக்கும் கண்ணியத்துடன் வாழும் உரிமையை உறுதி செய்யும்.

நன்றி: நியூ ஏஜ்
தமிழில்: டி.எம்.மூர்த்தி.

# விமானப் பராமரிப்பில் ஏனிந்த அலட்சியம்?



த.லெனின்

**பொதுவாக ஒவ்வொரு முறையும் விமானங்கள் பறக்க ஆயத்தமாகும் போது அனைத்து விமானப் பணிப் பெண்களும் நின்று சைகை மொழியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும், ஆபத்து நேரங்களில் எப்படி விமானத்திலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும் என்பதற்கான அனைத்தையும் சொல்வது வழக்கமாக இருக்கிறது. ஆனால் எந்த விபத்தின் போதும் இது பயன்பட்டதாக வரலாறு இல்லை.**

நவீன விஞ்ஞானத் தொழில்நுட்பம் மிகப்பெரும் வளர்ச்சியைக் கண்டிருக்கிற இந்தக் காலத்தில் கூட விமானப் பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. ஏனெனில் இது குறித்த ஆய்வுகள் மேற்கொண்டு ஒவ்வொரு இருக்கைக்கும் பாதுகாப்பு அளிப்பது என்றால் அதிகச் செலவு பிடிக்கும் ஒன்றாக இருக்கும். மற்றொன்று நிறுவனங்களின் லாபம் குறையும். எனவே, லாப வெறி முதலாளித்துவம் இதற்கெல்லாம் எதிராக இருக்கிற காரணத்தால்தான் ஆய்வுகள் மேற்கொள்ள செலவுகளைச் செய்யாது இருக்கின்றனர்.

ஆனால் கார்களில் இருக்கையில் அமர்ந்திருக்கிற ஓட்டுநர் உள்ளிட்ட அனைவருக்கும் காற்றுப் பைகள் (Air bags) விபத்து கால பாதுகாப்பிற்காக உள்ளன. ஆனால் ஆகாய விமானங்களில் இதுபோன்ற தொழில்நுட்பங்கள் ஏன் பயன்படுத்துவதில்லை?

## அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்திய விமான விபத்து

அகமதாபாத்தில் சமீபத்தில் நிகழ்ந்த விமான விபத்து இந்தியாவில் நடந்த மிகப்பெரிய விமான விபத்துகளில் ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. அனைவரையும் குலைநடுங்க வைத்த இந்த விமானத்தில் 242 பேர் இருந்தனர். 241 பேர் இதில் பலியானார்கள். ஏர் இந்தியா விமானம் ஏஐ171 விபத்துக்குள்ளானதில் நல்வாய்ப்பாக ரமேஷ் விஸ்வக்குமார் புச்சர்வாடா உயிர் தப்பினார். மருத்துவக் கல்லூரிமாணவர்கள் 10 பேர்மற்றும்தரையில் இருந்தவர்களையும் சேர்த்து எண்ணிக்கை 270 ஆக அதிகரித்துவிட்டது.

நாட்டையே உலுக்கிய இந்தக் கொடூரச் சம்பவத்தால் பலரும் சோகமடைந்துள்ளனர். இதனிடையே இந்த விமானம் விபத்தில் சிக்கியது எப்படி? என்று பலரும் கேள்வி எழுப்பி வருகின்றனர். ஏனென்றால் ட்ரீம்லைனர் ரக போயிங் விமானம் விபத்தில் சிக்குவது உலகில் இதுவே முதல்முறையாகும்.

அகமதாபாத்திலிருந்து லண்டன் கேட்விக்கிற்குப் புறப்பட்ட சில நிமிடங்களுக்குப் பிறகு, அது பதிவுசெய்யப்பட்ட 625 அடி உயரத்தைத் தொட்டது, இது உலகளாவிய ஆய்வுக்கு உட்பட்டது. 11 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான போயிங் 787–8 விமானத்தில், ஏராளமான வசதிகள் மற்றும் நம்பகமான இரட்டை எஞ்சின்கள் GEnx-1B67, உள்ளன. இவை ஒவ்வொன்றும் 67,000 பவுண்டுகள் உந்து சக்தி கொண்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதனை இயக்கிய குழுவினர் திடீரெனப் பல நிகழ்வுகளை எதிர்கொண்ட காரணங்கள் குறித்து பல ஊகங்களுக்கு வழிவகுத்தது. சுமை (Luggage) திட்டமிடல், சுற்றுப்புறக் காற்று, வெப்பநிலை மற்றும் இயந்திரச் செயல்திறன், இறக்கை மேற்பரப்பு அமைப்புகள் மற்றும் பறவை மோதுவது போன்ற காரணங்களை நிபுணர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

கடந்த 2006 ஆம் ஆண்டு போயிங் நிறுவனத்துடன் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் 68 விமானங்களை, ஏர் இந்தியா அரசு நிறுவனமாக இருந்த போது, வாங்கப்பட்டது.

இந்த வகை விமானங்களின் உலகளாவியப் பாதுகாப்புப் பதிவுகள் பொதுவாக வலுவாக உள்ளன. ஆனால் அசெம்பிளி லைன் தரக் கட்டுப்பாடு, ‘விசில்ப்ளோவர்’ அறிக்கைகள், பாதுகாப்பு உத்தரவை ஏற்படுத்திய இயந்திர ஐசிங் சிக்கல்கள், உலகளாவிய தரையிறக்கங்கள், லித்தியம்பேட்டரிதொடர்பானமின் அமைப்புச் சிக்கல், வெப்ப சேதத்தை ஏற்படுத்திய அவசர இருப்பிட டிரான்ஸ்மிட்டர் பேட்டரி தீ, போன்ற பிரச்சினைகளும் தீர்க்கப்படவில்லை. அத்துடன் கடந்த 2024 ஆம் ஆண்டில், இந்த விமானத்தில் ஏற்பட்ட ஒரு கோளாறு ஆகியவையும் இவற்றில் அடங்கும்.

## தறிகெட்ட தனியார் மயம்!

இந்திய அரசுக்கு சொந்தமான ஏர் இந்தியா விமான நிறுவனத்தோடு நான்கு விமான நிறுவனங்களின் இணைப்பிற்குப் பிறகு,இந்திய அரசின் தனியார்மயமாக்கலால் அடிமாட்டு விலைக்கு டாட்டா குழுமத்திடம் விற்றது. இதில் சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் லிமிடெட் 25.1% பங்குகளை வைத்திருக்கிறது என்பது கூடுதல் செய்தி. தனியார் மயம் என்றாலே தரம் கூரையை பிய்த்துக் கொண்டு கொட்டும் என்று கூச்சலிடுபவர்கள் மத்தியில்தான் இந்தவிபத்து நிகழ்ந்துள்ளது. ஏற்கனவே இதே விமானத்தில் பயணிகள் குளிரூட்டி வேலை செய்யாததையும், எந்த உபயோகப் பொருட்களும் பயன்பாட்டில் இல்லாததையும், காணொளி வாயிலாக விளக்கி இருக்கின்றனர். அளிக்கப்படும் உணவு தரம் குறைந்த ஒன்றாக இருப்பது என்பதையும், தேநீர் கேட்டால் அதோடு இணைந்து உணவையும் வாங்க வேண்டும் என்ற நிர்ப்பந்தங்களை எல்லாம் பயணிகள் பலமுறை எழுப்பியும் ஒழுங்குமுறை ஆணையம் எப்போதும் போலவே கள்ள அமைதி காத்து நின்றது. லாபம், அபரித லாபம் என்பதை தவிர இவர்களுக்கு பாதுகாப்பு அம்சம் குறித்த எந்த கவலையும் இல்லை என்பதை இந்த விபத்து உலகளாவிய அளவில் வெளிப்படுத்தி இருக்கிறது. சிறு நகரங்களை இணைக்க மோடி அறிவித்த உடான் திட்டம் படுதோல்வி கண்டது.

கடந்த வாரம் புது தில்லியில் நடந்த 81வது சர்வதேச விமானப் போக்குவரத்து சங்க ஆண்டு பொதுக் கூட்டம் மற்றும் உலக விமானப் போக்குவரத்து உச்சி மாநாட்டில், இந்தியா மிகப்பெரிய விமானப் போக்குவரத்து சந்தைகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டது. இருப்பினும், அதன் வேகமாக விரிவடைந்து வரும் விமானப் போக்குவரத்துத் துறை தரையிலும் வான்வெளியிலும் பாதுகாப்பு உள்ளிட்ட சவால்களை எதிர்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. இந்த நிலையில் தான் இந்த கோர விபத்து பல அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தி உள்ளது.

## அதானி நிறுவனம் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்!

விமானங்களையும், விமான நிலையங்களையும், விமானத்தில் ஏற்றப்படும் சுமைகளையும் பராமரிப்பதில் சர்வதேச அளவில் புகழ்பெற்ற, நீண்ட அனுபவமும் கொண்ட, செலிபி (CELEBI) (Çelebi Aviation Holding) என்னும் நிறுவனம் இந்தியாவில் ஒன்பது விமான நிலையங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணிகளை செய்து வந்தது. அவற்றில், அகமதாபாத் சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையமும் ஒன்று. இங்கிருந்து புறப்பட்ட விமானம்தான் கடந்த 12.6.2025 அன்று கீழே வீழ்ந்து சிதறியது.

இந்த நிறுவனத்துடன் இந்தியாவால் கடந்த 2008 இல் போடப்பட்ட ஒப்பந்தம் 2032 வரைக்குமானது ஆகும். ஆனால், பஹல்காம் தாக்குதலை காரணம் காட்டி துருக்கியை சார்ந்த இதனை கடந்த மே மாதம் 15 ஆம் தேதியுடன் வெளியேற்றி விட்டது. பஹல்காமில் நடைப்பெற்ற தாக்குதலை ஒட்டி ஏற்பட்ட இந்தியா பாகிஸ்தான் மோதலைத் தொடர்ந்து துருக்கி மீது சங்பரிவார் கும்பலுக்கு ஏற்பட்ட வெறுப்புணர்வு. அந்த வெறுப்புணர்வை தேசபக்த உணர்வாக பாவித்துக் கொண்ட பாஜகவின் மோடி அரசு இந் நிறுவனத்தை வெளியேற்றியது.

அந்நிறுவனம் பார்த்து வந்த விமானம் விமான நிலையங்கள் மற்றும் விமானத்தில் ஏற்றப்படும் சரக்குகளின் எடை பராமரிப்பு பணிகளை மோடியின் உடன்பிறவா சகோதரர் அதானியின் ‘AAHL’ (Adani Airport Holding Limited) என்னும் நிறுவனத்திடம் தான் ஒப்படைத்தது.

அதானியின் நிறுவனம் விமான நிலைய எடை சார்ந்த (Baggage Handling) பணிகளில் போதிய அனுபவம் கொண்டிருக்கவில்லை என்பது வெளிப்படையான உண்மை. இதுவரை விபத்து குறித்து வந்துள்ள செய்திகளில் இரட்டை என்ஜின் இருந்தும் ‘அந்த விமானம் மேலே எழமுடியாமல் போனது ஏன்? விமானப் பராமரிப்பு பிரச்சனையா? அல்லது அதில் ஏற்றப்பட்ட அதிக எடை பிரச்சனையா? இதற்கெல்லாம் விடை தெரிய மோடியின் நண்பரான அதானியின் நிறுவனத்திடமும் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

## செய்வாரா மோடி? அல்லது மறைப்பாரா மூடி?

ஏற்கனவே விமான நிலைய வளர்ச்சிக்கான நிதியை ஒவ்வொரு பயணியிடம் கறாராக வசூலித்தும், அதனை விமான நிலைய அபிவிருத்திக்கு பயன்படுத்தவில்லை என்பதை சிஏஜி கவனத்தோடு சுட்டிக்காட்டியும் இருக்கிறது. ஆக அனைத்து வகையிலும் கட்டணக் கொள்ளை தான் நடக்கிறதே தவிர எந்த வசதிகளையும் செய்து கொடுப்பதில்லை.

## எச்சரிக்கைகள் மீது நடவடிக்கை இன்மை

விமான விபத்துக்கள் கடந்த காலங்களிலும் நடைபெற்றுள்ளது. கடந்த 2010 இல் மங்களூரில் ஒரு பெரும் விபத்தும், 2020 ஆம் ஆண்டு கோழிக்கோட்டில் ஒரு பெரிய விபத்தும் நடைபெற்றது. இந்த விசாரணைகளில் பரிந்துரையாக அளிக்கப்பட்ட பாதுகாப்பு குறைபாடுகள் தொடர்ந்து இப்போதும் புறக்கணிக்கப்பட்டே வருகின்றது. இதன் காரணமாகத்தான் இதுபோன்ற கோரச் சம்பவங்கள் நடைபெறுகின்றன.

இந்த விபத்துகளில் ஓடுபாதை சரியாக பராமரிக்கப்படாதது,பறவைகள் ஆபத்து, அடிப்படை பாதுகாப்பு நடவடிக்கைகள் செயல்படுத்த தவறியது, ஆகியவைகள் அடங்கும். இந்த விபத்தின் போதும் கூட ஓடுபாதைக்கு அருகில் மிக அதிக உயரத்தில் புட்கள் வளர்ந்துள்ளதை காரணமாக சொல்கின்றனர். இது போன்ற புட்கள் வளர்ந்தால் அவற்றால் பறவைகள் ஈர்க்கப்பட்டு உள்ளே வரும் அபாயம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் அகமதாபாத் விமான நிலையத்தில் இதை புறக்கணித்து விட்டனர்.

ஒழுங்குமுறை அமைப்பின் மேற்பார்வையில் பொறுப்பு கூறல் இல்லாதது. விபத்துகளுக்கு காரணமாக அமைந்துவிடுகிறது. பருவ மழை காலங்களுக்கு முன்பே சீர்படுத்தப்பட வேண்டிய ஓடு பாதைகளை புறக்கணித்து விடுகின்றனர்.

விபத்துகள் ஏற்பட்டால் விமானிகள் மீது பழி சுமத்தி விடுகின்றனர். இதன் மூலம் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு பதிலாக அதிகாரிகள் விமானிகளை ஆக்கி விடுகின்றனர் விபத்துகளை முறையாக விசாரிப்பதற்கு முன்பே இது போன்ற குற்றச்சாட்டுகளை வைக்கக் கூடாது என்று பன்னாட்டு சிவில் வான் பயண அமைப்பு (ஐசி ஏஓ) விதிமுறைகளை வகுத்து இருந்தாலும் இந்த விபத்திலும் அது மீறப்பட்டுள்ளது.

தொடர்புக்கு : 9444481703

## விபத்துக்கான காரணங்கள்

நிபுணத்துவ, தலைமைத்துவம் இல்லாத அரசியல் ரீதியான நியமனங்கள் தான் இது போன்ற விபத்துகளுக்குக் காரணமாக இருக்கிறது. கல்வித் துறை, தொடங்கி அறிவியல், வரலாற்று ஆராய்ச்சித் துறை, தொல்லியல் என்று அனைத்திலும் ஆர்.எஸ்.எஸ்க்கு சேவகம் செய்தவர்களையே நியமிக்கும் ஒரு பெருங்கேடு இந்நாட்டை பீடித்துள்ளது. அதேவழியில் தான் இங்கும் நடைபெற்றுள்ளது என்பது பெருங்கொடுமை. ஒன்றிய அரசின் சிவில் விமான போக்குவரத்து இயக்குனரகம் (DGCA) மற்றும் இந்திய விமான நிலைய ஆணையம் (AAI) போன்றவற்றில் மக்கள் தொடர்புகளை மையமாகக் கொண்ட நிபுணர்கள் புறக்கணிக்கப்பட்டனர். இது அபாயமானதாகும். இது சர்வதேச வழிகாட்டலுக்கும் எதிரானதாகும்.




## மத்திய கிழக்கில் போர்ப் பதற்றம்

# பற்றி எரியும் டெல் அவிவ், தெகரான்!



மு.வீரபாண்டியன்



**ஈரான் யுரேனில் செறிவூட்டலில் ஈடுபடக் கூடாது அணுஆயுதச் சோதனைகளை மேற்கொள்ளக் கூடாது என அழுத்தம் கொடுத்து, ஈரானை பேச்சுவார்த்தைக்கு அழைத்தது அமெரிக்கா. மூன்று கட்டப் பேச்சு வார்த்தையும் நடைபெற்றது. ஈரானும் ஏறத்தாழ ஒப்புக்கொண்டது.**

எங்கள் மீதான பொருளாதாரத் தடை விலக்கப்பட வேண்டும். இஸ்ரேல் அணு ஆயுதத் தாக்குதலில் ஈடுபடாது என்ற உத்திரவாதம் வேண்டும். அரபு மண்ணில் குறிப்பாக பாலஸ்தீன காஸாவில் இருந்து இஸ்ரேல் விலகிச் செல்ல வேண்டும் என ஈரான் நிபந்தனைகள் விதித்தது. இதற்கு செவி மடுக்காமல் அமெரிக்கா உடனடியாக அணு ஆயுதச் சோதனைகள், ஆராய்ச்சிகளை நிறுத்தக் கோரியது. இதற்கு ஈரான் மறுத்தது. கடும் விளைவுகள் ஏற்படும் என அமெரிக்கா எச்சரித்தது.

பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிற போதே இஸ்ரேல் ஈரானைத் தாக்கியது.

பல விஞ்ஞானிகள் கொல்லப்பட்டனர். சோதனைக் கூடங்கள் தகர்க்கப்பட்டன. கொஞ்சமும் முன்னறிவிப்பின்றித் திடீர் தாக்குதல் இது. அமெரிக்கா தூண்டிதான் இந்தத் தாக்குதல். எனக்குச் சம்பந்தம் இல்லை என அமெரிக்கா கூறினாலும், உலகிற்குத் தெரியும் இந்த உண்மை.

இஸ்ரேல் உலகிலேயே சிறந்த வான் பாதுகாப்பு அயர்ன் டோம் போன்ற சிறந்த தடுப்புச் சாதனங்கள் கொண்ட நாடு. சிறு கொசு கூட இஸ்ரேல் மீது பறக்க முடியாது என்ற பிம்பத்தை ஈரான் தகர்த்து விட்டது. தன்னிடம் உள்ள மிகப் பழைய ஏவுகணைகளை மறு சீரமைப்பு செய்து, புதிய யுக்திகளைச் சேர்த்து மிக எளிதில் இஸ்ரேல் தலைநகரைத் தாக்க முடிந்தது. இஸ்ரேல் இதனை எதிர்பார்க்கவில்லை. இரு நாடுகளும் அடுத்தடுத்து தாக்கிக் கொள்கின்றன. இரு நாட்டுத் தலைநகரமும் தீப்பற்றி எரிகின்றன. மக்கள் உறக்கமின்றி உயிர் பயத்தில் பதுங்குக் குழிகளை நோக்கி ஓடுகிறார்கள்.

இஸ்ரேல் போர்களில் இதுபோல் இழப்புகளைச் சந்தித்தது இல்லை. ஈரான் தாக்குதலை அவமானமாக, தோல்வியாகக் கருதுகிறது. எப்படியாவது ஈரானை அழிக்க அமெரிக்க, இங்கிலாந்து போன்ற பெரிய வல்லரசு நாடுகளின் உதவியை நாடுகிறது. அமெரிக்கா நேரடியாக இஸ்ரேலுக்கு ஆதரவாகப் போரில் இறங்கலாம். இஸ்ரேல் விருப்பமும் இதுதான்.

ஜி7 நாடுகளின் கூட்டம் கனடாவில் நடைபெற்றது. இதனைப் பாதியிலேயே முடித்துக்கொண்டு ஈரான் மீது எச்சரிக்கை விடுத்தபடி அமெரிக்க அதிபர் வெளியேறி விட்டார். அத்தோடு ஈரான் தலைநகர் டெஹ்ரான் மக்களை ட்ரம்ப் வெளியேறச் சொல்கிறார். அதாவது மிரட்டுகிறார். மத்திய கிழக்கில் ராணுவக் கப்பல்களை அமெரிக்கா, இங்கிலாந்து நிறுத்தி உள்ளது. எந்த நேரத்திலும் அமெரிக்கா ஈரானைத் தாக்கக்கூடும்.

ரஷ்ய அதிபர் புட்டின் இஸ்ரேல் அதிபர் நெதன்யாகு ஈரான் தலைவர் கொமேனி ஆகியோரிடமும் அமெரிக்க ட்ரம்ப் அவர்களிடமும் பேசி உள்ளார். நான் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறேன். பேசித் தீர்க்க முயற்சிக்கலாம். ஈரானுக்கு மின்னுற்பத்திக்கான யுரேனியச் செறிவூட்டலுக்கு நாங்கள் உதவுகிறோம் என்றும் புட்டின் கூறியுள்ளார்.

ஏற்கனவே ஈரான் 90 சதம் யுரேனியச் செறிவூட்டலில் முன்னேறி விட்டது. இன்னும் 10 சதம் அணு ஆயுதங்களை அதனால் தயாரிக்க முடியும். இதனைத்தான் அமெரிக்க இஸ்ரேல் விரும்பவில்லை. இவை மட்டுமல்ல ஏராளமான பொருளாதாரத் தடைகளை மீறி ஈரான் முன்னேறுகிறது.

தற்போது சீனாவின் ஒன் ரோடு ஒன் பெல்ட் எனும் பிரமாண்ட திட்டத்தில் இணைந்துள்ளது. இதையும் அமெரிக்கா வெறுக்கிறது. போர் நடந்தால் இவையாவும் பாதிக்கப்படும் அல்லவா! எனவேதான் போரைத் தூண்டுகிறது அமெரிக்கா.

ஏற்கெனவே ஆப்கன் மீது போர் தொடுத்தது. ஈராக் மீது போர் தொடுத்தது. நிறைவில் அமெரிக்கா தோல்வியில்தான் வெளியேறியது. முன்னர் சின்னஞ்சிறிய வியட்நாம், சிறிய நாடு கியூபா இரண்டு நாடுகளிடமும் தோற்று வெளியேறியது அமெரிக்கா. எனினும் அடங்கவில்லை. அமெரிக்கா ஜி7 நாடுகளுக்கு, உலகில் போர் நடந்து கொண்டே இருக்க வேண்டும். தனக்கு இசையாத நாடுகளைக் கூட்டாகத் தாக்கி நிலைகுலையச் செய்வார்கள். லிபியா, செர்பியா என ஏராளமான உதாரணம் உண்டு. ஆனால் இவர்களால் ரஷ்யாவை ஒன்றும் செய்ய இயலவில்லை.

மூன்று ஆண்டுகள் போர் தொடர்கிறது. யாரால்? அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகளால். இவர்கள்தான் உக்ரைனைத் தூண்டினார்கள், ஆயுதம் கொடுத்தார்கள். ரஷ்யா – உக்ரைன் போர் தொடர்கிறது.

இவர்கள் அனைவரும் சேர்ந்தும் கூட ஏன் ரஷ்யாவை அடக்க முடியவில்லை, தோற்கடிக்க முடியவில்லை. ஜி7 நாடுகளின் பின்னால் ஆயுத உற்பத்தி உள்ளது. இவர்கள் அனைவரும் மரண வியாபாரிகள். எனினும் ரஷ்யாவிடம் எடுபடவில்லை.

இவர்களால் உக்ரைனைச் சேர்க்கவும் முடியவில்லை. உக்ரைன் அழிவைத் தடுக்கவும் முடியவில்லை. இது ஜெலன்ஸ்கி போன்ற தலைவருக்குப் புரியவில்லை.

சரி ஐநா சபை என்ன செய்கிறது? ஐநாவில் தலை எப்போதோ சாய்ந்து விட்டது. ஐநாவின் நோக்கங்களையும் ஜி7 நாடுகள் தகர்த்து விட்டன.

அமெரிக்க இங்கிலாந்து தனது வீட்டோ ரத்து அதிகாரத்தால் உலக விடுதலை இயக்கங்களுக்கு இழைத்த தீமைகள் ஏராளம்.

நெல்சன் மண்டேலாவைச் சிறையில் இருந்து விடுவிக்க வேண்டும். ஆப்பிரிக்கா விடுதலை பெற வேண்டும் என்ற தீர்மானத்தை எதிர்த்து வீட்டோவைப் பயன் படுத்திய நாடுகள்தான் அமெரிக்காவும் ஜி7 நாடுகளும். இவர்கள் யாருக்கும் உலகத் தலைவர் தகுதி ஏதுமில்லை. அனைவரும் காலனி ஆதிக்கச் சக்திகள் போர் வெறியர்கள்.

இன்றைய சூழலில் இந்தியா போர்ச் சூழலை வெறுக்க வேண்டும். பாலஸ்தீனத்தை ஆதரிக்க வேண்டும். ஈரான் – இஸ்ரேல் அமைதிப்பேச்சுக்கு முயற்சிக்க வேண்டும். நாடு என்ற முறையில் இந்தியாவிற்குத் தார்மீக நெறிகள் உண்டு. ஆனால் முன்னெடுப்புச் செய்ய நேரு போன்ற சர்வதேசப் பார்வை கொண்ட தலைவர்கள் இல்லையே?

எது எப்படியோ! போர் இல்லா உலகம் எழுக!

போர்களுக்கு எதிராக மானுடக் குரல் எழுக!

## பேட்டை ரவுடிகளாய் வலம் வரும் அமெரிக்காவும் இஸ்ரேலும்

ஈரான் மீது, ‘ஆபரேஷன் ரைசிங் லயன்’ என்ற பெயரில் ஜூன் 13ஆம் தேதி குண்டு வீசி இஸ்ரேல் தாக்குதல் தொடுத்தது.

ஈரான் அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபடக் கூடாது என்பதற்காகவே இந்த யுத்தம் என்கிறது இஸ்ரேல்.

அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல் உட்பட குறைந்தபட்சம் ஒன்பது நாடுகளிடம் அணு ஆயுதங்கள் உள்ளன.

ஏற்கனவே ஈராக் நாட்டில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாகக் கூறி அமெரிக்கா அந்த நாட்டையே அழித்தது. அதன் அதிபர் சதாம் உசேனைக் கொடூரமான முறையில் கொலை செய்தது. கடைசியில் பேரழிவு ஆயுதங்கள் எதுவும் அங்கு கிடைக்கவில்லை என்று சர்வ சாதாரணமாகச் சொல்லிவிட்டுப் போனது.

இப்போது ஈரான் மீது தாக்குதல். தனக்கும் போருக்கும் நேரடி ஈடுபாடு எதுவும் இல்லாதது போல் முதலில் அமெரிக்கா நடித்தது.

அமெரிக்கா தனது பிராந்தியத்தில் தற்காப்பு ஆயுதங்களை நிலைநாட்டி வருவதாகவும், அவற்றின் மீது ஈரான் தாக்குதல் தொடுத்தால் அழிவு நேரும் என்றும் பின்னர் எச்சரித்தது. உண்மையில் ஈரான் அத்தகைய தாக்குதல் எதிலும் ஈடுபடவில்லை.

ஈரான், இஸ்ரேல் மீது எதிர்பார்க்காத வகையில் வலிமையான எதிர்த்தாக்குதலைத் தொடுக்கிறது. நாங்கள் அடித்தால், நீ எப்படித் திருப்பி அடிக்கலாம் என்று கேட்கிறது அமெரிக்கா!

எந்த நிபந்தனையும் இல்லாமல் உடனடியாக ஈரான் சரணடைய வேண்டும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கொக்கரிக்கிறார்.

“ஈரானின்’உச்சத் தலைவர்’ [அயதுல்லா கொமேனி] எங்கே ஒளிந்திருக்கிறார் என்பது எங்களுக்குத் துல்லியமாகத் தெரியும். அவர் ஒரு எளிதான இலக்கு. ஆனால் நாங்கள் அவரை ‘இப்போதைக்கு’ கொல்லப் போவதில்லை” என்கிறார் ட்ரம்ப். எப்போது வேண்டுமானாலும் கொல்வோம் என்பதைத் தவிர இதற்கு வேறு என்ன பொருள்?

கொமேனி சரணடையாவிட்டால், சதாம் உசேனின் கதிதான் உனக்கும் நேரும் என்று ஆணவம் பேசுகிறது இஸ்ரேல்.

“நிபந்தனையற்ற சரணடைதல்!” என்று டிரம்ப் மீண்டும் மீண்டும் பதிவிட்டு வருகிறார். “அமெரிக்காவின் பொறுமை குறைந்து வருவதாகவும், பொதுமக்கள் மற்றும் அமெரிக்கப் படைகளின் பாதுகாப்புதான் தனக்கு முக்கியம் என்றும் எச்சரிக்கிறார்! என்ன ரவுடித்தனம்?

பாலஸ்தீனர்களின் நகரங்களை முற்றிலுமாக அழித்து, மீதி இருப்பவர்களையும் பட்டினி போட்டுக் கொன்று கொண்டிருக்கிறது இஸ்ரேல். அவர்களுக்கு உணவு வழங்க சர்வதேச முகமைகள் முயன்ற போது, அதை வாங்குவதற்கு வரும் பாலஸ்தீனர்கள் மீது தினமும் துப்பாக்கிச் சூடு நடத்துகிறது இஸ்ரேல் படை.

தங்கள் வீரர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதை ஒப்புக்கொள்ளும் இஸ்ரேல் ராணுவம், நிவாரணப் பொருட்களை வாங்க வருவதற்கான நெறிமுறைகளைப் பின்பற்றாமல் தங்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவர்களை நோக்கித்தான் வீரர்கள் சுடுவதாக தெனாவட்டாகக் கூறுகிறது. பட்டினி கிடக்கும் அப்பாவி மக்கள் ஒரு ராணுவத்தை எதிர்த்து என்ன அச்சுறுத்தலைத் தர முடியும்!

கையில் கத்திகளைச் சுழற்றிக்கொண்டு தெருவில் போவோர் வருவோரை எல்லாம் அச்சுறுத்தி விரட்டும் பேட்டை ரவுடிகளைப் போல, அமெரிக்காவும் இஸ்ரேலும் உலகை மிரட்டுகின்றன.

உலகம் முழுவதும் லட்சக்கணக்கான மக்கள் இந்த ரவுடித்தனத்திற்கு எதிராக தெருவில் வந்து கண்டனக் குரல் எழுப்புகிறார்கள்! கேட்கும் திறனற்ற இந்த மகாபாவிகளின் காதுகளில் விழுவதற்கு இன்னும் உரத்த குரல்கள் தேவை.

இவர்களைக் காதைத் திருகி அடக்கி, அமர வைக்க சோவியத் யூனியன் என்ற மனிதரை நேசித்த மாபெரும் நாடு இப்போது இல்லை!

– டி.எம்.



# பாஜக நடத்தும் முருக பக்தர்கள் மாநாடு
# அரசியல் முருகன் ஆட்சியில் அமர்த்துவாரா?



வ.மணிமாறன்

**முருக பக்தர்கள் மாநாட்டை மதுரையில் நடத்தி, தமிழ்நாட்டில் காலூன்றி பெரும் வளர்ச்சி காண முடியும் என பாஜக நம்புகிறது. ஆனால் தமிழ்நாட்டின் வரலாறு பாஜகவின் நம்பிக்கைக்கு எதிராக இருக்கிறது.**

மதுரையில் முருக பக்தர்கள் மாநாடு ஜூன் 22 ஆம் தேதி நடைபெறுகிறது. பாண்டி கோவில் சாலையில் உள்ள அம்மா திடலில் நடைபெறும் இந்த மாநாட்டையொட்டி, அறுபடை முருகன் கண்காட்சி ஜூன் 17 ஆம் தேதி முதல் நடைபெற்றது. அறுபடை வீடு என்று அழைக்கப்படும் முருகன் கோவில்களின் கோபுரத்துடன் கூடிய முகப்புத் தோற்றம், பிரகாரம், மூலவர் சன்னதி போன்றவை வடிவமைக்கப்பட்டிருந்தன. அங்கு வைக்கப்பட்டிருந்த முருகன் சிலைகளுக்கு வேதமந்திரங்கள் முழங்க பூசை செய்து தீபாராதனை காண்பித்து வழிபாடுகள் நடைபெற்றன. புதுச்சேரி மாநில உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் கண்காட்சியைத் தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசும் போது, ‘‘அமித்ஷா ஆன்மீக அன்பராக முருக பக்தர்கள் மாநாட்டைச் சிறப்பாக நடத்துமாறு மக்களிடம் கோரிக்கை வைத்துள்ளார். அவரை பாஜக தலைவராகப் பார்ப்பது அபத்தமானது. முருக பக்தர்கள் மாநாடு நடத்துவதில் எந்தப் பிளவுவாத நோக்கமும் கிடையாது’’ என்று நமச்சிவாயம் கூறினார்.

முருக பக்தர்கள் மாநாட்டிற்காக பாஜக நடத்திய ஆலோசனைக் கூட்டங்களில், அக்கட்சியின் மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் பல்வேறு பகுதிகளில் கலந்துகொண்டார். விழுப்புரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய நயினார் நாகேந்திரன், “முருக பக்தர்கள் மாநாட்டில் ஒலிக்கும் முருகா, வீரவேல் முழக்கம் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் எதிரொலிக்க வேண்டும். தமிழகத்தில் எட்டு மாதங்களுக்குப் பிறகு திமுக ஆட்சி இருக்காது. ஆட்சி மாற்றம் நிச்சயம் ஏற்படும். திமுக ஆட்சி ஆன்மிகத்துக்கும் இந்து மக்களுக்கும் எதிரானது. இந்த ஆட்சி இருக்கக் கூடாது என பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் முடிவு செய்துள்ளனர்’’ என்று தங்களுடைய நோக்கத்தைத் தெளிவாக எடுத்துக் கூறினார்.

முருகா.. முருகா.. வேல்.. வேல்.. வீரவேல்... முழக்கங்கள் பாஜகவைத் தமிழ்நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் அமர்த்தும் என்று நயினார் நாகேந்திரனும் சங் பரிவாரமும் நம்புகின்றனர்.

## பாஜகவுக்குப் பயன் அளிக்குமா?

முருக பக்தர்கள் மாநாட்டையொட்டி பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் ஜூலை 17 முதல் விரதம் இருந்தார். விரதமிருப்பது குறித்து அறிக்கை ஒன்றையும் அவர் வெளியிட்டார். அதில், “அள்ளிக் கொடுப்பதில் எல்லையற்றவனான முருகப் பெருமானின் அருளாசியுடனும், அவர்தம் பக்த கோடிகளின் ஒத்துழைப்புடனும் மாநாடு மாபெரும் வெற்றியடைய ஜூன் 16 முதல் 22 ஆம் தேதி வரை விரதம் இருப்பதுடன், ‘மூவிரு கயந்தலை முந்நான்கு முழவுத்தோள்’ என பரிபாடல் குறிப்பிடும் ஆறு தலை கொண்ட அறுபடை நாயகனின் திருவடிகளில் ஆறு முக்கியக் கோரிக்கைகளை வேண்டுதலாகவும் சமர்பித்துள்ளேன்.

விரதமும் வேண்டுதல்களும் தமிழர் இறை வழிபாட்டு முறைகளில் வேரூன்றிய பண்பாடு என்பதற்கிணங்க, ஆறு கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தருமாறு எத்திசையிலும் உள்ள முருக பக்தர்கள் அனைவரும் கருணைக் கடலாம் கந்தனிடம் வேண்டிக் கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன். கூப்பிட்ட குரலுக்கு பக்தர்கள் குறை தீர்க்க ஓடோடி வரும் வேலவன் நமது கவலைகளைத் தீர்க்கவும் அருள் புரியட்டும்’’ என்று நயினார் நாகேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

பாஜகவின் குறைகள், கவலைகள் எல்லாம் தமிழ்நாட்டின் ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்க வேண்டும் என்பதுதான். முருகா.. கந்தா.. கடம்பா.. கதிர்வேலா.. வேலவா.. ஓடோடி வா.. தமிழ்நாட்டின் ஆட்சி அதிகாரத்தை எங்களிடம் கொடு! உம்முடைய அருள் முதலமைச்சர் நாற்காலியை எங்களுக்குத் தரட்டும்! இதுதான் நயினார் நாகேந்திரனின் விரதம், வேண்டுதல் ஆகியவற்றின் நோக்கமாகும்.

ஆசைகளை முற்றாகத் துறந்துவிட்ட சாமியார் என்று சொல்லிக்கொள்ளும், உத்தரப்பிரதேச முதலமைச்சர் ஆதித்யநாத், அதுபோன்ற நிலையை அடைய முயற்சித்துக் கொண்டிருக்கும் ஆந்திரப்பிரதேச துணை முதலமைச்சர் பவன் கல்யாண் போன்றவர்களும் விரதமும் வேண்டுதலும் நிறைவேறப் பங்கேற்றனர்.

## ஜெய் ஜெகன்நாத்

உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், அரியானா போன்ற மாநிலங்களில் ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்க “ஜெய் ஸ்ரீராம்’’ என முழங்கினர். ஒடிசா மாநிலத்திலும் “ஜெய் ஸ்ரீராம்’’ என முழங்கினர்.

“இராமனை நினைவு கொள்வாய் மனமே அந்த
கோசலை மகனை துதி செய்வாய் தினமே!
சித்திரை நவமியில் புனர்பூசத்தில் பிறந்து
இத்தரை மாந்தர் வாழ்வில் உய்யவே அவதரித்த அந்த
இராமனை நினைவு கொள்வாய் மனமே..’’

என்று ஸ்ரீராமனை மனமுருகி வேண்டினர். பஜனை பாடினர். ஒடிசா மாநிலத்தில் எதுவும் நடக்கவில்லை. “ஜெய் ஸ்ரீராம்’’ முழக்கம் “ஜெய் ஜெகன்நாத்’’ என்று மாறியது. ஒடிசா மாநில மக்கள் தனித்துவமாக வழிபடும் ஜெகன்நாதர் இடம்பிடிக்கத் தொடங்கினார். “ஜெய் ஸ்ரீராம்’’ காணாமல் போய்விட்டது. கூட்டங்களில் பேசிய பிரதமர் மோடி “ஜெய் ஜெகன்நாத்’’ என்றே முழங்கினார். சங் பரிவாரங்கள் “ஜெய் ஜெகன்நாத்’’ என்று முழங்கின.

இதேபோன்று, மேற்கு வங்கத்திலும் “ஜெய் ஸ்ரீராம்’’ காணாமல் போய்விட்டது. “ஜெய் ஸ்ரீராம்’’ என்று சொன்னபோதெல்லாம் எவரும் கண்டுகொள்ளவில்லை. “ஜெய் காளி’’ “ஜெய் துர்க்கா’’ என்று மாறியது. “ஜெய் ஸ்ரீராம்’’ காணாமல் போய்விட்டது. சங் பரிவாரங்கள் “ஜெய் காளி’’ “ஜெய் துர்க்கா’’ என்றே முழங்கின. ஆட்சி அதிகாரத்துக்கு வர முடியாவிட்டாலும், கணிசமான வெற்றியைக் கொடுத்திருக்கிறது. தமிழ்நாட்டில்..?

## கந்த சஷ்டி கவசம்

‘‘உன் எண்ணம் ஈடேற, உலகில் உள்ளோர் ஓதி இன்புற்று வாழ ஒரு மந்திரத்தை செந்தமிழில் பாடு’’ என்று கடவுள் முருகன் எழுந்தருளி ஆசி கூறிவிட்டு மறைந்துவிட்டார். மடைதிறந்த வெள்ளமாய்ப் பாடினார் தேவராயர். கந்த சஷ்டி கவசம் பிறந்தது.

“இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக!
வாசவன் மருகா வருக! வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்



## பாஜகவின் வேல் யாத்திரை

கறுப்பர் கூட்டம் சர்ச்சையின் தொடர்ச்சியாக, 2020 நவம்பர் 6 ஆம் தேதி பாஜக மாநிலத் தலைவராக இருந்த எல்.முருகன் வேல் யாத்திரையைத் தொடங்கினார். அன்றைய எடப்பாடி பழனிசாமி அரசு வேல் யாத்திரைக்குத் தடை விதித்தது. வேல் யாத்திரையைத் தொடங்குவதற்காக, சென்னையில் இருந்து ஏராளமான கார்களுடன் எல்.முருகன் திருத்தணிக்குப் புறப்பட்டார். காவல்துறை தடுத்து நிறுத்தி, அவருடன் ஒன்றிரண்டு வாகனங்கள் மட்டும் செல்ல அனுமதித்தது. அடுத்த நாள் திருத்தணியில் வேல் யாத்திரையைத் தொடங்கிய எல்.முருகன் கைது செய்யப்பட்டார். இப்படித் தினமும் அவர் வேல் யாத்திரை செல்ல முயற்சிப்பதும் காவல்துறையால் கைது செய்யப்படுவதும் தொடர்கதை ஆனது. ஒரு வழியாக டிசம்பர் 6 அன்று திருச்செந்தூரில் வேல் யாத்திரையை எல்.முருகன் நிறைவு செய்தார். அந்த விழாவில் அன்றைய மத்தியப்பிரதேச முதலமைச்சர் சவுகான் கலந்துகொண்டார்.

## ‘கறுப்பர் கூட்டம்’ கைது




‘கறுப்பர் கூட்டம்’ என்ற யுடியூப் சேனல், கந்த சஷ்டி கவசத்தைப் பகுத்தறிவுக் கண்ணோட்டத்தில் விமர்சித்து 2020 ஆம் ஆண்டு காணொளிகளை வெளியிட்டது. அந்தக் காணொளிகள் கந்தசஷ்டி கவசத்தை அவமதித்து விட்டதாக பாஜக உள்ளிட்ட சங் பரிவாரங்கள் போராட்டத்தில் ஈடுபட்டன. சென்னை மாநகரக் காவல் ஆணையரிடம் பா.ஜ.க புகார் அளித்தது. பல்வேறு இடங்களில் போராட்டங்களிலும் ஈடுபட்டனர். ‘கறுப்பர் கூட்டம்’ யுடியூப் சேனலை நடத்தியவர்கள் கைது செய்யப்பட்டனர். சிலர் குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டனர்.

## முப்பாட்டன் முருகன்

‘நாம் தமிழர் கட்சி’ சீமான் தொடக்கத்தில் இருந்தே முப்பாட்டன் முருகன் என முன்னிறுத்தி வருகிறார். இதற்கென வீரத்தமிழர் முன்னணி என்ற சார்பு அமைப்பை 2015 ஆம் ஆண்டு தொடங்கினார். அடுத்த மாதமே வீரத்தமிழர் முன்னணி, திருச்செந்தூர் முருகன் கோவிலில் தமிழில் வழிபாடு நடத்தக் கோரி ஊர்வலம் நடத்தியது. 2016 ஆம் ஆண்டு முதல் தைப்பூச நாளில் வேல் வழிபாடு நடத்தி வருகிறது. சீமான் கட்சியினர் திருமுருகப் பெருவிழா நடத்தி வருகின்றனர். நாம் தமிழர் கட்சியை ஒரு இடத்தில்கூட முப்பாட்டன் முருகன் வெற்றி பெற வைக்கவில்லை.



## பாலஸ்தீனம் – காஷ்மீர் இரண்டும் மதம்சார்ந்த சிக்கல்களா?

காஷ்மீரம் ஒரு தனி இனம்; அதுபோலவே பாலஸ்தீனமும் ஒரு தனி இனம்.

காஷ்மீர இனத்தில் முஸ்லிம்கள் மட்டும்தானா? இந்து பண்டிட்டுகளும், பௌத்தர்களும், பழங்குடியினரும் சேர்ந்த ஒரு கலவை அது.

பாலஸ்தீனமும் அப்படியே. யூதர்கள், பின் கிறித்தவர்கள், அதன்பின்னே முஸ்லிம்கள் என அடுத்தடுத்த மதங்களின் வரிசை.

இப்படியான முழுப் பூசணிக்காயை மறைத்துவிட்டு, இந்த இரு இனங்களையும் இஸ்லாத்தின் பெயரால் மட்டும் அடையாளப்படுத்தியது யார், எது? அவ்வாறே அடையாளப்படுத்தியதிலுள்ள சதித் திட்டம் என்ன?

இன்றைக்கு உலகெங்கும் முஸ்லிம் வெறுப்பைத் திட்டமிட்டு விதைத்ததினால் இரண்டு இனங்களும் அரச பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு இலக்காகிப் பெரும் அழிவைச் சந்தித்துவருகின்றன.

பலபேருக்கு வரலாறும் தெரியாது; அந்த இரு இனங்களின் சிக்கல்களும் தெரியாது. ஆனால் அது "முஸ்லிம்கள் சம்பந்தமானவை" என்ற ஒற்றைக் காரணத்தைக் கொண்டு பலரும் கண்மூடித்தனமான வெறுப்பில் தங்களின் மூளை வறட்சியைக் கொட்டி வன்முறையைத் தூண்டுகிறார்கள்; வன்மம் பாராட்டுகிறார்கள்.




காஷ்மீரிலோ, பாலஸ்தீனத்திலோ மக்கள் கொல்லப்படும்போது அவர்கள் அடையும் ஆனந்தம் அவ்வளவு பெரிதாக இருக்கிறது. தங்களின் மானுடத்தன்மையைக் கழித்துக்கட்டி வெறும் சதைத்திரளாக உருப்பெற்று நிற்கிறார்கள்.

"மகாத்மா காந்தி தற்கொலை செய்துகொண்டார்" போன்ற வரலாற்று நூலை வாசித்துவிட்டு பாலஸ்தீனத் துயரைப் பேசுகிற அதிமேதாவிகளும் உண்டு.

இதன் தொடர்ச்சிதான் ஈரானின் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தும்போது அவர்களை உற்சாகமடையச் செய்கிறது. திருப்பி இஸ்ரேலின் மீது ஈரான் அதகளம் செய்யும்போது சங்கிகளாய் இருப்போரெல்லாம் சொங்கிகளாகி விஷத்தை இறக்குகிறார்கள்.

உலகளாவிய சங்கிகளுக்கு விடுக்கும் வேண்டுகோள் :

வரலாற்றிற்கு மதிப்பளியுங்கள். மனிதத்துவத்தைப் பலியிட்டு மகிழ்ச்சியடைய முயற்சி செய்யாதீர்கள்.

இஸ்ரேலுக்கு, அமெரிக்காவுக்கு வக்காலத்து வாங்குவோர் தங்களுடைய கழுத்தின் மீதுதான் கத்தியை வைத்திருக்கிறார்கள் என்ற உண்மையை உணர்ந்துகொள்ளட்டுமாக!

**– எழுத்தாளர் களந்தை பீர்முகமது**

## சொன்னார்கள்

### ஓரவஞ்சனை பாஜக

"இயற்கைப் பேரிடர்களின் போது, வெளிநாட்டிலிருந்து நிவாரண நிதி பெற மகாராஷ்டிரா அரசுக்கு ஒன்றிய பாஜக அரசு அனுமதி அளித்துள்ளது. எதன் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்படுகிறது? அனைத்து விவகாரங்களிலும் பாஜக அரசியல் செய்கிறது.

மகாராஷ்டிரா அரசு வெளிநாட்டு உதவியைப் பெறுவதில், கேரளாவுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால் கேரளாவுக்கு அனுமதி மறுத்ததை ஏற்க முடியாது. அதில் எந்த நியாயமும் இல்லை."

**கே.என்.பாலகோபால்**
**கேரள நிதியமைச்சர்**

### ஆன்மீகமல்ல; அரசியல்

"முருக பக்தர்கள் மாநாட்டில் நாங்கள் எல்லாம் குவியும்போது அது செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் எதிரொலிக்கும்."

**நயினார் நாகேந்திரன்**
**பாஜக தலைவர்**

# ஆளுநரை மாநில அமைச்சர...

**ஒன்றிய பாரதிய சனதாக் கட்சி அரசின் அலுவலர்களாகவே மாநில ஆளுநர்கள் செயல்பட்டுக்கொண்டிருப்பதுடன், ராட்டிரிய சுய சேவக் சங்கின் கொள்கைகளைப் பரப்புரை செய்வோராகவும் செயல்பட்டிருக்கின்றனர்.**


மே.து.ரா.

தமிழ்நாட்டு ஆளுநர் ஆர்.என்.ரவி, திருவள்ளுவர் ஆடைக்குக் காவி வண்ணம் பூசி, பா.ச.க.வின் நடைமுறையினைப் பின்பற்றிப் படங்களை வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து திருவள்ளுவர், வள்ளலார், திருமூலர், அப்பர் போன்ற அனைவரும் சனாதனத்தைப் பின்பற்றியோர் என்றும் பேசத் தொடங்கியுள்ளார்.

அண்மையில் திருக்குறள் அடிப்படையில்தான் தேசியக் கல்விக் கொள்கை வடிவமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுமளவுக்கு இது சென்றிருக்கிறது. சமக்கிருத மொழியினூடாகத்தான் அறிவுப் பரவல் ஏற்படும் என்று கூறும் தேசியக் கல்விக் கொள்கைக்கும் திருக்குறள் கருத்துக்களுக்கும் என்ன தொடர்பு என்பதை ஆளுநர் தெரிவிக்கவில்லை.

கீழடி அகழ்வுகளில் அறிவியல் அடிப்படையிலான முடிவுகளுக்கு மேலும் சான்றுகள் வேண்டுமென்று எதிர்பார்க்கின்ற சனாதனிகள், ஆளுநரின் கருத்துக்களுக்கு எத்தகைய தரவுகளையும் முன்வைக்கவில்லை.

ஒன்றிய அரசின் செயல்பாடுகளையும் திட்டங்களையும் அன்றாடம் புகழ்ந்து பேசுகின்ற தமிழ்நாடு உள்ளிட்ட மாற்றுக் கட்சி மாநில ஆளுநர்கள், தங்களது மாநில ஆட்சியினரின் கொள்கைகளைப் பற்றி வாய் திறப்பதில்லை.

தமிழ்நாட்டில் ஆட்சியிலிருக்கும் ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசின் சிறப்பான செயல்பாடுகள் குறித்து ஆளுநர் பெரிதும் பேசியதாகத் தெரியவில்லை. செயல்பாடுகள் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் கிடைத்த இரும்புப் பொருள்களின் காலம் கி.மு. 3300க்கு முந்தையது என்பதையோ, தமிழ் எழுத்துக்கள் கி.மு. 685க்கு முன்னரே பதியப்பட்டுள்ளன என்பது குறித்தோ, கீழடியில் கிடைத்த பொருள்களின் காலம் கி.மு. 800 என்பது ஏற்கப்பட்டு, கட்டிடக் கட்டமைப்புகள் கி.மு. 600க்கு முன்னதாகவே நிலவியிருந்தன என்பன போன்ற உண்மைகளையோ, பெருமைகளையோ இதுவரை ஆளுநர் ரவி ஒரு முறைகூடக் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை.

தமிழ் மொழியின் பெருமையையும் சில திருக்குறள்களையும் எடுத்துக்காட்டிப் பொதுவாகப் பேசுவதால் மட்டும் தாங்கள் தமிழ் மொழிக்கும் தமிழ் மக்களுக்கும் துணையாக இருப்பது போல், தலைமை அமைச்சர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்சா, நிதியமைச்சர் நிர்மலா போன்றோர் காட்டிக்கொள்ள முற்படுகின்றனர். மாநில பா.ச.க. தலைவர்கள் இதைக்கூடச் செய்வதில்லை.

ஆனால், இவர்களில் எவரும் அண்மைக் கால அகழ்வுகளில் அறியப்பட்ட தமிழரின் தொன்மை பற்றி இதுவரை சுட்டிக்காட்ட விரும்பியதில்லை.

தேசியக் கல்விக் கொள்கை, சிந்தூர் உள்ளிட்ட எல்லைப் போர்ச் செயல்கள் போன்ற ஒன்றிய அரசு தொடர்பான பலவற்றையும் நிகழ்வுகளையும் கலந்துரையாடல்களையும் மாற்றுக் கட்சி மாநில ஆளுநர்கள் நடத்துகின்றனர்.

ஆனால் தங்களுடைய ஆளுநர் உரைகள் வழியாகச் சட்டப்பேரவையில் தெரிவித்த திட்டங்கள் அல்லது மாநில அரசுகளின் கொள்கைகள் குறித்தெல்லாம் எத்தகைய நிகழ்வுகளையும் கலந்துரையாடல்களையும் அவர்கள் நடத்தவில்லை; அல்லது நடத்த வேண்டும் என்ற எண்ணங்களில் இருப்பதாகக்கூடத் தெரியவில்லை.

கேரளம், மேற்கு வங்கம், பஞ்சாப், தெலுங்கானா, கர்நாடகம் போன்ற மாநிலங்களிலும் இந்த நிலைதான் இருந்து வருகிறது.

கேரளத்தில், ஆளுநர் மாளிகையில் நடந்த உலக சுற்றுச்சூழல் நாள் விழாவில் இந்திய அன்னையின் (பாரத மாதா) படம் கையில் காவிக் கொடியுடன் வைக்கப்பட்டிருந்தது. இதன்வழி, தான் ஆர்.எசு.எசு. அமைப்பின் பணியாளர்தான் என்பதை ஆளுநர் ராசேந்திர விசுவநாத் அர்லேக்கர் உறுதிப்படுத்தியிருக்கிறார். நாட்டுப் பற்றைக் குறிப்பதாக விளக்கம் தரும் ஆளுநர், இதில் ஒன்றியத்தின் தேசியக் கொடியைப் பயன்படுத்த முனையவில்லை என்பதுதான் முரண்பாடு.

இந்த நிகழ்வில் கலந்துகொள்வதாக இருந்த இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேளாண் அமைச்சர் பிரசாத், எதிர்ப்புத் தெரிவித்துப் பங்கேற்காமல் புறக்கணித்துவிட்டார். ஆயினும், தலைமைச் செயலகத்தில் உலகச் சுற்றுச்சூழல் நிகழ்வை நடத்திக் காட்டியிருக்கிறார்.

தற்போது ஆர்.எசு.எசு. அமைப்பின் நிறுவனர் கெட்கேவார் மற்றும் கொள்கையாளர் கோல்வாக்கர் ஆகியோரது படங்களைக் கேரள ஆளுநர் மாளிகையில் இடம்பெறச் செய்திருப்பது, பரவலாகப் பெரும் போராட்டங்களுக்கு வழியமைத்திருக்கிறது.

மேற்கு வங்கத்தில், பா.ச.க.வினரின் போராட்டங்களால் ஏற்பட்ட சீரழிவுப் பகுதிகளுக்கு மாநில ஆளுநர் பார்வையிடச் சென்று, முதல்வர் மம்தாவின் ஆட்சிக்கு எதிராக மக்களைத் தூண்டிவிடுவது தொடர்கிறது.

பஞ்சாப் மாநிலச் சட்டப்பேரவையைக் கூட்ட ஒப்புதல் தர மறுத்த ஆளுநரை உச்ச நீதிமன்றமே கண்டிக்கும் நிலை ஏற்பட்டது.

தெலுங்கானாவில் ஆளுநராக இருந்த தமிழிசையின்



ஒத்துழையாமையால், குடியரசு நாள் கொடியேற்றத்தையே அப்போதைய மாநில அரசு தவிர்த்தது. மாநிலச் சட்டப் பேரவையில் ஆளுநர் உரையும் அப்போது நிகழ்த்தப்படவில்லை.

ஆளுநர் மாளிகைகள் பா.ச.க.வின் அலுவலகங்களாகவே மாறிவிட்டன என்னும் எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டுகள் உறுதிப்பட்டு வருகின்றன.

மாற்றுக் கட்சி மாநிலங்கள் மட்டுமல்லாது, பா.ச.க. ஆட்சி நடத்தும் மாநிலங்களின் ஆளுநர்களும் தங்களது பா.ச.க. பற்றையும், ஆர்.எசு.எசு. அமைப்பின் பின்புலத்தையும் அவ்வப்போது வெளிக்காட்டி வருகின்றனர்.

உத்திரப்பிரதேச ஆளுநராக இருக்கும் சிவபிரதாப் சுக்லா

## மன்னார்குடியில் மாற்றுக் கட்சின... இந்தியக் கம்யூனிஸ்ட் ...

மன்னார்குடி ஒன்றியம், தலையாமங்கலத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தோர், அக்கட்சியிருந்து விலகி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணையும் விழா, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம், ஒன்றியச் செயலாளர் துரை.அருள்ராஜன் தலைமையிலும், ஒன்றியப் பொருளாளர் எஸ்.ராகவன் முன்னிலையிலும் நடைபெற்றது.



நூற்றாண்டு விழா கொடியினைக் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் ஏற்றி வைத்து உரையாற்றினார். கல்வெட்டினைக் கட்சியின் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழுச் செயலாளர் கோ. பழனிச்சாமி திறந்து வைத்து உரையாற்றினார். இதில் கட்சியின் மாவட்டப் பொருளாளர் கே.தவபாண்டியன், நகரச் செயலாளர் வி.எம்.கலியபெருமாள், ஏஐடியூசி மாவட்டத் துணைச் செயலாளர் வி.கலைச்செல்வன், ஒன்றியத் துணைச் செயலாளர்கள் எஸ்.பாப்பையன், அ.ரமேஷ்குமார், டி.என்.சி.எஸ்.சி சங்கச் செயலாளர் பி.நாகேஷ்,

# ரவையால் அடக்க முடியுமா?

என்பவர், இந்திய ஒன்றியத்தின் மொழிகள் அனைத்தும் சமக்கிருத எழுத்துருவைப் (தேவநாகரி) பின்பற்றியிருந்தால். ஒன்றியத்தின் ஒருமைப்பாடு எளிதில் ஏற்பட்டிருக்கும் என்ற கருத்தை முன்மொழிந்திருக்கிறார்.

நாடு விடுதலை பெற்றபோது, காங்கிரசார் ஆட்சிக் காலத்திலேயே முன்னெடுக்கப்பட்டு, வலுத்த எதிர்ப்புகளால் முடக்கப்பட்ட முயற்சிதான் தேவநாகரி எழுத்துரு என்பதாகும் இப்போது மீண்டும் புகையத் தொடங்குகிறது.

இவை மட்டுமல்லாமல், ஆளுநர்கள் அன்றாட அரசியல் பேசும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அல்லது தாங்களாகவே தங்களது இருப்பைக் காட்டிக்கொள்ளத் தலைப்பட்டுள்ளனர்.

ஆளுநர்கள் மட்டுமல்லாது, ஒன்றிய அரசு சார்ந்த நிறுவனங்களும் ஆர்.எசு.எசு. மற்றும் பா.ச.க.வினரின் சனாதனக் கோட்பாடுகளை வெளிப்படுத்தத் தயங்கவில்லை.

ஒன்றிய அரசின் முகவர், ஒன்றிய அரசுக்கும் மாநில





அரசுக்கும் இணைப்பாக இருக்கக்கூடியவர், மாநில அரசுக்கு அறிவுரை கூறும் இடத்தில் இருப்பவர், தனித்த சில உரிமைகளைக் கொண்டிருப்பவர் என்பன போன்ற புரிதல்கள், ஆளுநர்கள் குறித்துப் பலருடைய மனதிலும் பெரிதும் பதிந்துவிட்டன என்று கூறிவிடலாம்.

இத்தகைய புரிதல்கள், பொதுமக்கள், அரசியல் கட்சிகள், ஊடகங்கள், நாடாளுமன்ற சட்டப்பேரவை உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியோருக்கு மட்டுமல்லாது, உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதியர் பலருக்கும்கூடப் பிடிபடவில்லை என்று கருதவேண்டியுள்ளது.

ஒன்றிய அரசு தானாகவோ, குடியரசுத் தலைவர் வழியாகவோ அரசமைப்புப் பொறுப்பில் அல்லது சட்ட வழியாகப் பலரைப் பணியமர்த்துகிறது. இத்தகையோர் யாராக இருப்பினும், அவர்கள் அனைவரும் ஒன்றிய அரசுக்குக் கட்டுப்பட்ட நேரடி ஊழியர்களாக இருக்கவில்லை. அரசமைப்புச் சட்டத்தின் எந்தவொரு பிரிவிலும் இத்தகைய நிலை நேரடியாகவோ, மறைமுகமாகவோ தெரிவிக்கப்படவில்லை.

இந்திய ஒன்றிய அரசமைப்புச் சட்டத்தின்படி, மாநில ஆளுநர்கள் மட்டுமல்லாது, உச்ச நீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதியர்கள் தேர்தல் ஆணையர்கள், ஒன்றியப் பணியாளர் தேர்வு ஆணைய உறுப்பினர்கள், தணிக்கை குழு ஆகிய வேறு பல பொறுப்புகளுக்குரியோரை ஒன்றிய அரசுதான் பணியமர்த்துகிறது.

இதனால், இவர்கள் அனைவரும் ஒன்றிய அரசின் சார்பாளர் என்றோ, முகவர் என்றோ, கட்டுப்பட்டவர் என்றோ கருதப்படுவதில்லை. அரசமைப்புச் சட்டம் வகுத்துள்ள கடமைகளை அவர்கள் எத்தகைய நேரடியான நெருக்குதல்களுக்கும் உள்ளாகாமல் தனித்து நிறைவேற்றுவோராகவே அவர்கள் இருக்கின்றனர்.

இதுதான் மாநில ஆளுநருக்கும் அரசமைப்புச் சட்டப்படி பொருந்தும்.

எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டின் ஆளுநர் பொறுப்பேற்கும்போது, "......தமிழ்நாட்டு ஆளுநரின் செயல்பாடுகளை நிறைவேற்றுவேன் என்றும் என்னால் இயன்றவரை அரசமைப்பையும் சட்டத்தையும் காத்து முன்னுறுத்துவேன் என்றும் தமிழ் நாட்டு மக்களது பணி மற்றும் நல்வாழ்வுக்காக என்னை முழுமையாக ஒப்படைத்துக்கொள்வேன்" என்று கூறித்தான் உறுதிமொழி எடுக்கிறார் (பிரிவு 159).

அவ்வளவுதான். இதற்கு மேல் அவருக்குப் பணிகளும் இல்லை; பொறுப்புகளும் இல்லை; உரிமைகளும் இல்லை; செயல்பாடுகளும் இல்லை.

பணியமர்த்தல் ஆணை வழங்குவதோடு ஒன்றிய அரசின் பங்களிப்பு அல்லது கடமை முடிந்துவிடுகிறது. அதற்குப் பின்னர் ஆளுநர் பொறுப்பேற்றவுடன் அவர் மாநில அமைச்சரவையின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடுகிறார்.

அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 163 ஆளுநரின் அனைத்துச் செயல்பாடுகளும், அமைச்சரவையின் அறிவுரைப்படிதான் நடந்தேறவேண்டும் என்று தெளிவாக வரையறுத்துவிடுகிறது.

இவையின்றி வேறு ஏதாவது பொறுப்புகள் அல்லது கடமைகள் அல்லது உரிமைகள் இருந்தாலும், அவை குறிப்பாக அரசமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கவேண்டும். அப்படிக் கூறியிருந்தால் மட்டுமே ஆளுநர் அதில் மட்டும் தனித்துச் செயல்பட முடியும் என்பதும் தெளிவாக உள்ளது.

மாநிலச் சட்டப்பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களைத் தகுதி நீக்கம் செய்யச் சில விதிகளைப் பிரிவு 191 வகுத்திருக்கிறது. ஆனால், தகுதி நீக்கம் செய்யும் உரிமை ஆளுநருக்கு வழங்கப்பட்டிருந்தாலும், அவர் அமைச்சரவையின் அறிவுரைக்கு அப்பால் தேர்தல் ஆணையத்தின் முடிவுக்குக் கட்டுப்பட வேண்டும் என்று பிரிவு 192 விளக்கம் தந்துவிடுகிறது.

ஒன்றிரண்டு மாநிலங்களில் உள்ள பிற்பட்ட, பழங்குடிப் பகுதிகள் முன்னேற்றம் குறித்த பொறுப்புகள் அல்லாமல் வேறு எந்த உரிமையையும் அரசமைப்புச் சட்டம் ஆளுநருக்கு வழங்கவில்லை. தமிழ்நாட்டு ஆளுநருக்கு இத்தகைய தனி உரிமைகள் எதுவும் அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்படவில்லை என்பதும் இங்குக் குறிக்கத்தக்கது.

மாநில மக்களது பணி, நல்வாழ்வு ஆகியவற்றுக்காகத் தங்களை முழுமையாக ஒப்படைத்துக்கொண்ட ஆளுநர் என்பவர், மக்களுக்கான பணி, நல்வாழ்வு என்று எவற்றையெல்லாம் கருதவேண்டும்? மாநில அமைச்சரவை எவையெல்லாம் மக்களுக்கான பணி, எவையெல்லாம் மக்களது நல்வாழ்வுக்கு ஏற்றது என்று அறிவுறுத்துகிறதோ அவற்றை மட்டுமே செய்யவேண்டும்; செய்ய முடியும்.

இவற்றுக்கு மாறாகச் செயல்படுவதெல்லாம் அரசமைப்புச் சட்டத்தை மறுப்பதாகவே அமைந்துவிடும். ஆளுநருடைய பதவியேற்பு உறுதிமொழிக்கு மாறானதாகவே அமைந்துவிடும்.

அரசமைப்பு அவையில் எழுப்பப்பட்ட வினாக்களுக்கு அம்பேத்கர் தெளிவாகவும் விளக்கமாகவும் வெளிப்படையாகவும் சுட்டிக்காட்டியிருப்பது போன்று, மாநில ஆளுநர்களுக்கு எத்தகைய தனிப் பணிகளும் இல்லை என்பதுதான் உண்மை. ஆளுநருடைய பணி என்பது தனித்த பணி ஏதுமில்லாமல் இருப்பதுதான்.

அம்பேத்கர் கூறியதை அரசமைப்புச் சட்டம் முழுமையாகப் பதிவு செய்திருக்கிறது என்றுதான் கூற வேண்டும்.

ஆளுநரை நீக்குவது அல்லது கண்டிப்பது என்பதான உரிமைகளை மாநிலச் சட்டப்பேரவைக்கு வழங்காமல் விட்டதில்தான், அரசமைப்புச் சட்டம் தடுமாறிவிட்டது. குடியரசுத் தலைவர் மீது நம்பிக்கை வைத்து இதனைத் தவிர்த்துவிட்டனர்.

ஆனால், ஒன்றிய அமைச்சரவையின் அறிவுரையின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் செயல்படுவதால், மாற்றுக் கட்சி ஆட்சி நடக்கும் மாநில ஆளுநர்களின் அத்துமீறல்களை எப்படி எதிர்கொள்வது என்ற அரசமைப்பு அவை உறுப்பினர்களின் அச்சங்கள் இப்போது உண்மையாகி வருகின்றன.

மாநில மக்களின் பொதுக்கருத்துக்களுக்கும் உணர்வுகளுக்கும் வரலாற்றுக்கும் வாழ்முறைக்கும் பண்பாட்டுக்கும் மாறான கருத்துக்களை ஆளுநர் அத்துமீறித் தெரிவிக்கும்போது, அவற்றை மறுப்பதோடு நின்றுவிடக்கூடாது. அவற்றுக்கும் மேலாக, இவ்வாறுதான் செயல்படவேண்டும், இப்படித்தான் பேச வேண்டும் என்று மாநில அமைச்சரவை, அரசமைப்புச் சட்ட அடிப்படையில் தெளிவான அறிவுரைகளை வழங்கவேண்டும். ஆளுநரின் அனைத்துச் செயல்பாடுகளுக்கும் அறிவுரை கூறும் உரிமை மாநில அமைச்சரவைக்குத் தரப்பட்டுள்ளது.

இவற்றை மீறுகின்றபோது உச்ச நீதிமன்றத்தை நாடுகின்ற உரிமை மாநில அரசுக்குத் தானாக வந்துவிடுகிறது.

அரசமைப்புச் சட்டத்தில் உள்ள இடைவெளிகளை இட்டு நிரப்பும் பணிகளை உச்ச நீதிமன்றம்தான் செய்ய முடியும். சட்ட வடிவங்களுக்கு ஆளுநர்கள் ஒப்புதல் தரக் காலவரையறை செய்து புரட்சியை ஏற்படுத்தியது உச்ச நீதிமன்றம்தான்.

அதைப்போன்று, ஆளுநர்களின் அத்துமீறல்களைத் தடுத்து நிறுத்தி, அமைச்சரவையின் அறிவுரைகளை ஏற்குமாறு உச்ச நீதிமன்றம்தான் ஆணையிட முடியும்; ஆணையிடவேண்டும்.

**தொடர்புக்கு : 9444075561**

## யைச் சேர்ந்த நூறு குடும்பத்தினர் கட்சியில் இணைந்தனர்



வி.தொ.ச ஒன்றியத் தலைவர் எஸ்.மாரியப்பன், வி.ச ஒன்றியச் செயலாளர் ஆர்.சதாசிவம், மாதர் சங்க ஒன்றியச் செயலாளர் ஆர்.பூபதி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதில் தலையாமங்கலம் ஊராட்சியிலிருந்து எம்.கலியமூர்த்தி, ஜி.சங்கர், வி.பாலகிருஷ்ணன், ஆர்.அண்ணா உள்ளிட்டு 100 குடும்பத்தினர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்.

## பதிவுகள்

### விமானத்தைக் கண்டு பிடித்தது பரத்வாஜர்!

"விமானம் பறக்கும் தத்துவத்தைக் கண்டுபிடித்தது ரைட் சகோதரர்கள் அல்ல, பரத்வாஜ முனிவர்"

**லக்னோவில் நடைபெற்ற பல்கலைக்கழக நிகழ்ச்சியில் உத்தரப்பிரதேச ஆளுநர் ஆனந்திபென் படேல் பேச்சு.**

### அர்னாபின் போலி தேசப்பற்று!

பாஜகவின் ஆதரவு ஊடகமான ரிபப்ளிக் டிவியின் உரிமையாளர் அர்னாப் கோஸ்வாமி, இந்தியாவைத் திட்டிப் பேசவென பாகிஸ்தானில் இருப்பவர்களைப் பணம் கொடுத்து நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வைப்பதாகவும் பிறகு அவர்களைத் திட்டி, கேவலமாகப் பேசி, தேசப்பற்றை முன்வைத்து தொலைக்காட்சிக்கான ரேட்டிங்கை வளர்த்துக் கொள்வதாகவும் பாகிஸ்தானிய ஊடகவியலாளர் ஹமீத் மிர் புகார்.

### மத்திய பிரதேசத்தில் போலி அரசு ஊழியர்கள்

மத்தியப் பிரதேசத்தில் போலியாக 50,000 நபர்களை அரசு ஊழியர்களாக்கி, அவர்கள் பெயரில் கடந்த 6 மாதமாகச் சம்பளம் வரவு வைக்கப்பட்டு நடந்துள்ள மிகப்பெரிய மோசடிச் சம்பவம் நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

அரசு வேலையில் இல்லாதவர்களின் பெயரில் போலிக் கணக்குகளின் மூலம் ரூ.230 கோடி மோசடி நடந்துள்ளதா என்கிற அடிப்படையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### பீகாரில் போலிக் காவல் நிலையம்!

பீகாரின் மொஹானி கிராமத்தில் போலிக் காவல் நிலையம் நடத்தப்பட்டது கண்டறியப்பட்டிருக்கிறது. ஒரு வருடமாகச் செயல்பட்டு வரும் இந்தக் காவல் நிலையத்தில் பணம் வாங்கிக் கொண்டு காவலர்களாகப் பலர் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். ஊரின் பல பகுதிகளில் வாகனப் பரிசோதனை செய்து தண்டம் வசூலித்தது தெரிய வந்திருக்கிறது. இந்த வருடக் குடியரசு தின விழாவும் இங்கு நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### அமலாக்கத்துறை மீது மக்களுக்குச் சந்தேகம் உச்சநீதிமன்றம்

கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் அமலாக்கத்துறை 5,300 வழக்குகள் பதிவு செய்துள்ளது. ஆனால் வெறும் 40 வழக்குகளில் மட்டுமே தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அமலாக்கத்துறை மீது மக்களுக்குச் சந்தேகம் எழுந்துள்ளது.

உச்சநீதிமன்ற நீதிபதி
**உஜ்ஜால் பூயான்** கருத்து.

# ஏஜஎஸ்எஃப் தேசியச் செயலாளர் சங்கமித்ரா, அவரது கணவர் மீது பஜ்ரங் தள் தாக்குதல்

## ஏஜஎஸ்எப் – தமிழ்நாடு மாநிலக்குழு கண்டனம்



சங்கமித்ரா ஜெனா ஒடிசா மாநில ஏஜஎஸ்எஃப் தலைவர் மற்றும் அவரது கணவர் ஆகியோர் கிஷன்நகருக்கு அருகிலுள்ள தங்கள் கிராமத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்தபோது, பஜ்ரங்தள் குண்டர்களால் மிகவும் கொடுமையாகத் தாக்கப்பட்டனர். சங்கமித்ராவின் தொலைபேசி மூலம் புகாரைப் பெற்ற காவல்துறை உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒடிசா மாநிலச் செயலாளர் ஆஷிஸ் கனுங்கோ இந்தச் சம்பவத்தைக் கண்டித்து, சங்கமித்ரா மற்றும் அவரது கணவரைத் தாக்கிய குண்டர்களை உடனடியாகக் கைது செய்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி உள்ளார்.

மேலும் ஏஜஎஸ்எஃப் தேசியச் செயலாளர் சங்கமித்ரா மற்றும் அவரது கணவர் மீதான தாக்குதலுக்கு அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநிலக் குழு வன்மையான கண்டனத்தைப் பதிவு செய்கிறது!

# கூட்டுறவுத் துறையில் சிபில் ஸ்கோர் அமலாக்கம் கடன் பெற முடியாத நிலையில் விவசாயிகள்

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கண்டனம்

கூட்டுறவுத் துறையில் சிபில் ஸ்கோர் அமலாக்கத்தால் இனி விவசாயிகள் கடன் பெற முடியாத நிலைக்கு, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி கண்டனம் தெரிவித்துள்ளார்.

மே 26 அன்று தமிழ்நாடு கூட்டுறவுத்துறை பதிவாளர், விவசாயிகளுக்கு வணிக வங்கிகள் பின்பற்றுகிற நடைமுறையின்படி இனி கூட்டுறவுக் கடன் பெறுவோர்களின் சிபில் ஸ்கோர் மதிப்பெண் பார்த்து தகுதி உள்ளோருக்கு மட்டும் கடன் வழங்கிட வேண்டுமென உத்தரவைப் பிறப்பித்துள்ளார். ரிசர்வ் வங்கி அண்மையில் புதிதாகப் பிறப்பித்த 9 விதிகள் கூட்டுறவுத் துறையைக் கட்டுப்படுத்தாது எனக் கூட்டுறவுத்துறை அமைச்சர் கூறிய நிலையில், கூட்டுறவுத்துறை அமைச்சரின் அறிவிப்புக்கு மாறாக, துறையின் தலைமை அலுவலர் உத்தரவிட்டாரா என அறிய விழைகிறோம்.

வேளாண்மை என்பது இயற்கையைச் சார்ந்த தொழிலாகும். விவசாயிகள் தன் மூலதனத்தை வெட்டவெளி நிலத்தில் போட்டுவிட்டு இயற்கைப் பேரிடர்கள், பருவ கால மாறுபாடுகள், இடுபொருள்களின் மாற்றங்களினால் ஏற்படும் பயிர் வளர் நிலை இடர்களை எல்லாம் தாண்டி, பல மாதங்கள் காத்திருந்து, போட்ட முதலீட்டைத் திருப்பி எடுக்கும் வரை இவர்கள் மட்டுமல்ல, இவர்களின் குடும்ப உறுப்பினர்களும் படும் துன்பங்கள் சொல்லிமாளாது. இப்படியான பாதிப்புகள் மிகக் கூடுதலாகி வரும் நிலையில், சிபில் ஸ்கோர் தகுதியை அளவீடாகக் கொண்டு விவசாயிகள் கடனைத் தீர்மானிக்கக் கூடாது. கடன் பெற்றோர் அக்கடனைத் திருப்பிச் செலுத்திய முறைகளைக் கணக்கீடாகக் கொண்ட சிபில் ஸ்கோர் மதிப்பெண்களின் அளவீடுதான் விவசாயிகள் கடன் பெறுவதற்கான தகுதியாகக் கொண்டு தீர்மானிக்கப்படும் என்றால் பெரும்பகுதி விவசாயிகளுக்குக் கடனே கிடைக்காது. வணிக வங்கிகளில் நடைமுறைகளில் உள்ள இம்முறை இப்போது கூட்டுறவுத்துறையிலும் அமல்படுத்தப்படுகிறது. வேளாண்மைத் தொழிலைப் புரிந்து கொள்ளாது, எதார்த்தமற்ற சிந்தனைகளால் வந்த அறிவிப்பாகும் இது. வேளாண்மையில் ஏற்படும் இழப்பீட்டை சிபில் ஸ்கோர் அளவீட்டில் கணக்கிட்டு நிவாரணம் மற்றும் காப்பீடு திட்டத்தை அமல்படுத்தினால், விவசாயிகளின் வாழ்வுத் தகுதியும் சிபில் ஸ்கோர் வரம்பில் வந்துவிடும். இப்படியான நெருக்கடிகள் தீராத நிலையில், வேளாண்மைக் கடன் வழங்குவதில் சிபில் ஸ்கோர் அளவீட்டை ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே தமிழக முதல்வர் தலையிட்டு வேளாண் தொழிலுக்கான கடன்களில் சிபில் ஸ்கோர் முறையைக் கைவிட நடவடிக்கை எடுத்திட தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம் என்று மாநிலப் பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி கண்டனம் தெரிவித்துள்ளார்.

# அரசியல் முருகன் ஆட்சியில்...

7 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!..”

இந்தகந்தசஷ்டி கவசம்பாடுவோருக்குக் கவசமாக இருந்து காக்கும் என்பதே முருக பக்தர்களின் நம்பிக்கை. தங்களுக்கும் கவசமாக இருந்து, தமிழ்நாட்டின் ஆட்சி, அதிகாரம் கிடைக்கும் எனச் சங்கிகள் மாநாடுகளை நடத்துகின்றனர். தமிழ்நாட்டில் முருகன் தங்களைக் காப்பாற்றுவார் என நம்புகின்றனர்.

“தமிழ் மண் ஆழ்வார்களின் மண், ஆன்மிக மண்” என்று சொல்லும் பாஜக, இந்து மதத்திற்கு எதிரான கட்சியாக திமுக இருக்கிறது என குற்றம்சாட்டுகிறது. அதனால்தான் “தமிழ்நாட்டில் அதிகமாக வழிபடக்கூடிய தெய்வமான முருகனை முன்வைத்து எதிர்ப்புத் தெரிவிக்கிறோம்” என்று பாஜக கூறுகிறது.

“முருகபக்தர்கள் மாநாடு இந்துக்களுக்கு ஏற்பட்டுள்ள அவமானத்தைத் துடைக்கும் மாநாடு. இதன்மூலம் இந்துக்களை ஒருங்கிணைக்க முடியும்” என்கிறார் பாஜகவின் தமிழகத் தலைவர்களில் ஒருவரான எஸ்.ஆர்.சேகர்.

### ஆட்சியும் அதிகாரமுமே நோக்கம்

எத்தகைய ஆன்மீகச் சாயம் பூசினாலும், இலக்கு என்பது தமிழ்நாட்டின் ஆட்சியும் அதிகாரமும் என்பதை பாஜகவின் கூற்றுகள் அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றன. 2021 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலுக்குச் சில மாதங்களுக்கு முன்பு பாஜக, முருகன் கோவில்களுக்கு வேல் யாத்திரை சென்றது. அதிமுகவின் தயவால் நான்கு தொகுதிகளையும் 2.62 விழுக்காடு வாக்குகளையும் மட்டுமே பெற முடிந்தது.

பாஜக முருக பக்தர்கள் மாநாடு நடத்தும் இதே மதுரையில், மீனாட்சி அம்மன் கோவில் திருவிழாவுக்குப் பல லட்சம் பேர் திரளுகின்றனர். வன்முறையோ வெறுப்பு உணர்வோ எழுந்ததே கிடையாது. ஆன்மீகம், மதம், கடவுள், அது சார்ந்த செயல்பாடுகள் வேறு, அரசியல், தேர்தல் என்பது வேறு என்பதில் தமிழ்நாட்டு மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். கந்த சஷ்டி கவசம் பாடியோ முருகனை வழிபட்டோ தமிழ்நாட்டு மக்களைக் குழப்பி, அரசியல் ஆதாயம் பெற்றுவிட முடியாது. இதனை எதிர்காலத்திலும் தமிழ்நாடு வெளிப்படுத்தும்.

**தொடர்புக்கு: 9500001224**

# நெல் குவிண்டால் ரூ.3000 விலை அறிவிக்க வேண்டும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

ஜூன் 12 அன்று மேட்டூர் அணையைத் திறந்து வைத்தபின், சேலத்தில் நடந்த அரசு விழாவில் பேசிய முதலமைச்சர் நெல் குவிண்டால் ஒன்றுக்கு சன்ன ரகத்திற்கு ஊக்கத் தொகை ரூ.156 சேர்த்து ரூ.2545 ஆகவும், சாதாரண ரகத்திற்கு ஊக்கத் தொகை ரூ.131 சேர்த்து ரூ.2500 ஆகவும் விலை கொடுக்கப்படும் எனக் கூறியுள்ளார். இந்த அறிவிப்பு விவசாயிகளுக்குப் பெரிய ஏமாற்றமாகும்.

2021 ஆம் ஆண்டு தேர்தலில் தாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன். நெல் விலை ரூ.2500 ஆக உயர்த்திக் கொடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் சொன்னபடி இதை நிறைவேற்றாமல், 5வது ஆண்டில் இது அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசு 2023 ஆண்டு முதல் இதுவரைக் கொடுத்திருக்கிற மூன்று ஆண்டுகளில் விலை உயர்வு முதல் ரகத்திற்கு 349 ரூபாய், இரண்டாவது ரகத்திற்கு 329 ரூபாய் ஆகும். தமிழ்நாடு அரசு கொடுத்திருப்பதோ முதல் ரகத்திற்கு ரூபாய் 493, இரண்டாவது ரகத்திற்கு ரூபாய் 397 ஆகும்.

2023 ஆம் ஆண்டு ஒன்றிய அரசு முதல் ரகம் ரூ.2203, சாதாரண ரகம் ரூ.2183 என்று நிர்ணயித்தது. தமிழ்நாடு அரசு வாக்குறுதி படி அப்போதே ரூ.2500 கொடுத்திருந்தால் மேற்கண்ட ஒன்றிய அரசின் மூன்றாண்டு விலை உயர்வையும் சேர்த்து, முதல் ரகத்திற்கு 2849 ரூபாயும், இரண்டாவது ரகத்திற்கு 2829 ரூபாயும் இப்போது கிடைத்திருக்கும். தமிழ்நாடு அரசு 3 ஆண்டுகளில் கொடுத்து வந்த ஊக்கத் தொகையையும் சேர்த்தால், சராசரி ஒரு குவின்டால் நெல் ரூபாய் 3278 கிடைத்திருக்கும். ஆகவே இது விவசாயிகளுக்கு ஏற்பட்ட கூடுதல் இழப்பாகும். ஆக மூன்று ஆண்டுகளில் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற இழப்பு சராசரி ஒரு குவிண்டாலுக்கு 3239 ரூபாய். திமுக ஆட்சியின் வாக்குறுதி மீறலால் விவசாயிகளுக்குக் கடந்த மூன்று ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் இழப்பாகும்.

ஆனாலும் இந்தியாவின் சில மாநிலங்கள் கடந்த பல ஆண்டுகளாகவே ஒன்றிய அரசின் விலையோடு 40 சதம் ரூபாய் கூடுதலாகச் சேர்த்து நெல் கொள்முதல் செய்து வருகிறது. சத்தீஸ்கர் மாநிலம் தொடர்ந்து இப்படியான விலை உயர்வைக் கொடுத்து வரும் சூழலில் நடப்பாண்டு ஒரு குவிண்டால் ரூபாய் 3120 கொடுத்து வருகிறது.

ஆகவே தமிழக முதல்வர் குறைவுத் தொகையைச் சேர்த்து நெல் குவிண்டால் ரூபாய் 3000 விலையாக அறிவித்திட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம் என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# வெளிநாட்டில் பயின்ற மருத்துவ மாணவர்களின் பிரச்சினைகளுக்கு அலட்சியம் காட்டாதே!

## மருத்துவ மாணவர்கள் சங்கத்தின் வெளிநாட்டுப் பிரிவு கண்டனம்



சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் மற்றும் தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கத்தின், வெளிநாட்டுப் பிரிவின் மாநில நிர்வாகிகள் கூட்டம், மாநிலத் தலைவர் டாக்டர் நா.மு.சரண் தலைமையில் 16.06.2025 அன்று நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வாழ்த்துரை வழங்கினார்.

இதில் சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், சமாதானம் மற்றும் முன்னேற்றத்திற்கான இந்திய டாக்டர்கள் சங்கத்தின் அகில இந்தியச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, வெளிநாட்டுப் பிரிவின் மாநிலப் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த் பிலிப்ஸ், மாநிலத் துணைத் தலைவர் டாக்டர் ஆ.ஜெயலட்சுமி, துணைச் செயலாளர் டாக்டர் அ.முகமது மொஹாசின், பொருளாளர் டாக்டர் சு.கிருபாராஜ் ஆகியோர் உரையாற்றினர்.

வெளிநாட்டில் மருத்துவப் படிப்பை முடித்துவிட்டு வரும் பட்டதாரிகளுக்குப் பயிற்சி மருத்துவர்களாகப் பணிபுரிவதற்கு, தற்காலிகத் தகுதிச் சான்றிதழ் வழங்குவதில் தமிழ்நாடு மருத்துவக் கவுன்சில் காலதாமதம் செய்துவருகிறது. அனுமதி வழங்குவதில் கடுமையான பாரபட்சம் காட்டப்படுகிறது. இப்போக்குக் கடும் கண்டனத்திற்குரியது.

டி.என்.எம்.சியின் இத்தகைய அலட்சியச் செயல்பாட்டைக் கண்டித்து வரும் 05.07.2025 அன்று சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது. எஃப்.எம்.ஜி பட்டதாரிகள் விண்ணப்பித்த ஒரு மாத காலத்திற்குள், மருத்துவராகச் செயல்படுவதற்கான தற்காலிகத் தகுதிச் சான்றிதழ் வழங்கிட வேண்டும்.

மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மொத்தப் பயிற்சி மருத்துவ இடங்களில், தற்பொழுது 7.5 விழுக்காடு அளவிற்கு, எப்.எம்.ஜி பட்டதாரிகளுக்குப் பயிற்சி மருத்துவப் பணி செய்ய அனுமதி வழங்கப்படுகிறது. அதை 20 விழுக்காடாக உயர்த்திட வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு நாடுகளில், நமது இந்திய மாணவர்கள் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மருத்துவப் படிப்பில் சேர்கின்றனர். அந்த மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் அகில இந்திய அளவிலும், மாநில அளவிலும் உதவி மையங்களை உருவாக்கிட வேண்டும்.

வெளிநாட்டில் படிப்பை முடித்துவிட்டு வருவோரை இரண்டு ஆண்டுகள் அல்லது மூன்று ஆண்டுகள் பயிற்சி மருத்துவம் செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதைக் கைவிட வேண்டும். இதுகுறித்து என்.எம்.சி விதிமுறைகளை முறையாகப் பின்பற்ற வேண்டும்.

சீனாவில் மருத்துவப் படிப்பை முடித்த தமிழ்நாடு மாணவர்களுக்கு, தற்காலிகத் தகுதிச் சான்றிதழ் வழங்குவதை தமிழக மருத்துவ கவுன்சில் கடந்த மூன்று மாதங்களாக நிறுத்தி வைத்துள்ளது. சான்றிதழ்களை உடனடியாக வழங்க வேண்டும்.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் பயிற்சி மருத்துவர்களாகப் பணிபுரியும் எஃப்.எம்.ஜி மருத்துவப் பட்டதாரிகளுக்கு, விடுதி வசதிகளை தமிழ்நாடு அரசு வழங்கிட வேண்டும்.

புதுச்சேரி ஜிப்மர் மருத்துவக் கல்லூரியில், எம்.பி.பி.எஸ் மற்றும் பி.ஏ.எம்.எஸ் படிப்புகளை இணைத்துப் புதிய படிப்பைத் தொடங்கிட ஒன்றிய அரசு முயல்வதைக் கைவிட வேண்டும். இதை வலியுறுத்தி வரும் ஜூலை 5 ம் தேதி மாலை சென்னையில் கருத்தரங்கம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

கலை இலக்கியப் பூங்கா

# விந்தனின் ‘பாலும் பாவையும்’ நாவலுக்கு பவள விழா

மு.பரமசிவம்

1948 இல் புதுக்கோட்டையில் இருந்து முருகு சுப்பிரமணியம் ‘பொன்னி’ எனும் இதழை வெளியிட்டார் நக்கீரன் என்ற பெயரில் ‘கண் திறக்குமா?’ என்ற நாவலை எழுதினார் விந்தன்.

அந்த நாவலில் வரும் சில பாத்திரங்கள் அக்காலகட்டத்தில் நடந்த சுதந்திரப் போராட்டத்திற்கு விரோதியாகவும், வெள்ளையனுக்கு விசுவாசியாகவும் இருந்த விதேசிகள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் பாரிஸ்டர் பரந்தாமன். இவரைப் பற்றி விந்தன் கேலியாகவும், கிண்டலாகவும் எழுதியதை இடதுசாரிகள் விரும்பிப் படித்தார்கள். படித்தவர்கள் அதோடு நிற்காமல் பேராசிரியர் கல்கிக்குக் கடிதம் எழுதினார்கள்.

அச்சமயத்தில் கல்கி இதழில் ஆசிரியர் குழுவில் இருந்த விந்தனை அழைத்து, பொன்னி இதழைக் காட்டி, “இந்த நாவலை எழுதியது நீங்கள் தானா?” என்று கேட்டார். விந்தன் மௌனமாக இருந்தார். தொடர்ந்து கேட்ட போது, “யாரோ என் விரோதிகள் இந்தக் கடிதம் எழுதி இருக்கிறார்கள்’’ என்று சொன்னார்.

விந்தனின் தடுமாற்றத்தையும், தயக்கத்தையும் கண்ட கல்கி இந்த நாவலை இவர்தான் எழுதியிருக்கிறார் என்று முடிவு செய்து, “நீங்கள் கல்கியில் தொடர்கதை எழுதலாம்’’ என்றார். அப்பொழுது 1950 இல் எழுதியதுதான் ‘பாலும் பாவையும்’ என்ற நாவல்.

பிறர் எழுத்தை நாங்கள் படிப்பதில்லை என்று சில எழுத்தாளர்கள் அலட்சியமாகச் சொல்லிக் கொண்டிருந்த போது, எழுத்தாளர் அகிலன் சொன்னார், பாலும் பாவையும் கதை புதிது, கருத்து புதிது, இலக்கியச் செறிவான கரு என்றார்.

அன்று வட இந்தியாவில் நடந்த இந்து முஸ்லிம் கலவரத்தில் ஆண்களை இழந்த பெண்களுக்கு, ஆண்கள் ஆதரவு தர வேண்டும் என்று காந்தியடிகள் கோரிக்கை வைத்தார் என்றார். முன்னாள் தமிழக முதல்வர் எம்.பக்தவச்சலம் அவர்கள். மேலும் சொன்னார் காந்தியடிகளின் கோரிக்கையை இந்த நாவல் வலியுறுத்துகிறது என்று இலங்கைப் பேராசிரியர் கைலாசபதி அவர்கள், ‘’பாலும் பாவையும்ஒருநவீனஇராமாயணம்’’ என்றார். நாவலைப் படித்த வாசகர்கள் கதையில் வரும் கனகலிங்கம், இந்திரன், அகல்யா, தசரதகுமாரன் போன்றவர்களைப் படிக்கும் போது பாரதியார், கம்பன் போன்றவர்கள் நினைவுக்கு வருகிறார்கள். அதோடு மட்டுமில்லாமல் நாவல்களைத் தொடங்கும் போது, அறிஞர்கள் கருத்துகளையோ, எண்களையோ பயன்படுத்துவார்கள். ஆனால் விந்தன் கதையில் வரும் மாந்தர்கள் பேசும் கருத்துகளை வெளியிட்டுப் புதுமை செய்தார்.

அதே நேரத்தில் இந்த நாவலை அக்கறையோடு அனுபவித்து படித்தார் முன்னாள் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி. அதனால்தான் 1952இல் அறிமுகமான சிவாஜி கணேசன் நடித்த ‘பராசக்தி’ படத்தில் நீதிமன்றக் காட்சியில் சிவாஜி கணேசன் பேசும் ‘’ஓடினாள், ஓடினாள் வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள்’’ என்ற வசனம் பாலும் பாவையும் நாவலில் வருகிறது.

இந்த நாவலைப் படித்த பணக்காரர்கள், படிக்கும் காலத்தில் பையன்கள் பெண்களைக் காதலிப்பதும் கைவிடுவதும் இயல்பு. இந்த விஷயத்தைப் பெரிதுபடுத்தி நாவல் எழுதுவது கண்டிக்கத்தக்கது என்று புகார் கூறினார். வளரும் பத்திரிகைக்கு வாழ்த்து வேண்டும் தவிர வசவுகள் தேவையில்லை என்று கருதினார் கல்கி.

பெண்கள் மாதத்தில் மூன்று நாட்கள் வீட்டுக்கு வெளியே இருந்து படிக்கும் ‘கல்கி’ போன்ற பத்திரிகைக்கு இத்தகைய விமர்சனமும், விவகாரமும் தேவையில்லை என்பதால் விந்தனிடம் தொடரை நிறுத்தும்படிச் சொன்னார்.

கல்கி இதழில் பதினாவது அத்தியாயம் வெளிவந்த தொடரை விந்தன் ‘நல்லவர்கள் வாழ்வதில்லை’ நானிலத்தின் தீர்ப்பு என்று எழுதித் தொடரை முடித்தார்.

அச்சமயத்தில் பிரபல சினிமா நடிகை டி.ஆர். ராஜகுமாரியின் சகோதரர் டி.ஆர்.ராமண்ணா விந்தனை அணுகி ‘பாலும் பாவையும்’ நாவலைத் திரைப்படமாக எடுப்பதாகக் கூறினார்.

அதற்குவிந்தன்சொன்னார், “என் கதையில் வரும் பெண் மூன்று ஆண்களுடன் தொடர்புடையவர். இதைச் சமூகம் ஏற்காது’’ என்றார். இராமண்ணா அதோடு முயற்சியைக் கைவிட்டார்.

அதே நேரத்தில் தினத்தந்தி இதழில் பிரபல எழுத்தாளர் விந்தன் ஏ.வி.எம் கதை இலகாவில் சேர்ந்து விட்டதாகச் செய்தி வந்தது.

அக்காலகட்டத்தில் ஏ.வி.எம், ஜெமினி, வாகினி, மாடர்ன் தியேட்டர்ஸ் ஆகிய திரைப்பட நிறுவனங்கள் சில எழுத்தாளர்களைச் சம்பளத்திற்கு வைத்துக் கொண்டு, அவர்கள் சுயமாகச் சிந்தித்து எழுதாமல் தாங்கள் சொல்வதை எழுதுவதற்கு வைத்திருந்தார்கள். அச்சமயத்தில் ஏ.வி.எம் கதை இலகாவில் ப.நீலகண்டன் தலைவராக இருந்தார்.

ஏ.வி.எம் இன் கொத்தடிமைப் போக்கு விந்தனுக்குப் பிடிக்காததால் ஏ.வி.எம் உடன் பேச விரும்பவில்லை. அச்சமயத்தில் ‘பாலும் பாவையும்’ திரைப்படத்தில் சிவாஜி கணேசன், பத்மினி நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்திருந்தார்கள்.

பேராசிரியர் கல்கியின் ‘கள்வனின் காதலி’, நாரணதுரை கண்ணனின் ‘உயிரோவியம்’, நாவல்களை நாடகமாக்கிய டி.கே.எஸ் சகோதரர்கள், விந்தனின் ‘பாலும் பாவையும்’ நாவலை நாடகமாக்க விரும்பினார்கள்.

டி.கே.எஸ் சகோதரர்கள் எழுத்தாளர்கள் மேல் வைத்திருந்த மதிப்பில் கால் பகுதி கூட எழுத்தாளர்களுக்குக் கொடுக்கும் சம்பளத்தில் இல்லை. அதனால் டி.கே.எஸ் சகோதரர்கள் நாடகமாக்குவதை விந்தன் விரும்பவில்லை.

1957, 58 ஆம் ஆண்டுகளில் நான் இரண்டு மேடை நாடகங்கள் எழுதி அரங்கேற்றியிருக்கிறேன். அப்பொழுது கவிஞர் தமிழ் ஒளி ‘’விந்தனின் ‘பாலும் பாவையும்’ நாவலை நாடகமாக்குங்கள்’’ என்று சொன்னார்.

1945 ஆம் ஆண்டில் நான் கல்கி அச்சகத்தில் வேலைக்குச் சேர்ந்தேன். அச்சமயத்தில் விந்தன் ஆசிரியர் குழுவில் இருந்ததைப் பார்த்திருக்கிறேன். ஆனால் பேசியதில்லை.

1954 இல் விந்தன் ‘மனிதன்’ இதழை வெளியிட்டார். அந்த இதழின் இரண்டாவது இதழ் அட்டைப்படம் அச்சாகியிருப்பதை எடுக்கப் பணம் இல்லாததால் என்னுடன் வேலை பார்த்த அவர் தம்பி ஆறுமுகத்தை அழைத்துக் கொண்டு என்னைச் சந்திக்க கல்கி அச்சகத்திற்கு வந்தார். அப்பொழுது நான் சிறு பண உதவி செய்தேன்.

அந்தப்பழக்கத்தில்விந்தனைச்சந்தித்து பாலும் பாவையும் நாவலை நாடகமாக்க அரங்கேற்றப் போகிறேன் என்றேன். சற்று நேரம் மௌனமாக இருந்த விந்தன் மொழிப் போராளி தாளமுத்து, நடராஜன் வாழ்க்கை வரலாற்றை நாடகமாகத் தயாரிக்கலாமே என்றார். நான் மௌனமாக இருந்தேன். இந்த மௌனம் நீண்ட நேரம் நீடித்ததால் நான் அதைச் சம்மதமாக ஏற்றுக் கொண்டு வீடு திரும்பினேன்.

ஒரு வாரம் கழித்து என்னைச் சந்தித்த விந்தன் நாடகத்தில் நடிக்க சினிமா நடிகர் எஸ்.ஜே.அசோகனைச் சந்திக்கப் போலாம் என்றார்.

நாங்கள் இருவரும் எஸ்.ஏ.அசோகனைச்




சந்தித்துப் பேசினோம். அவர் நாடகத்தில் நடிக்க முடியாது. எனக்கு வேலை இருக்கிறது என்று சொல்லி வருந்தினார்.

அடுத்து நாங்கள் கள்ளபாட் நடராஜன், ஆர்.காந்திமதி, பதிபக்தி கிருஷ்ணன் ஆகிய சினிமா நடிகர்களை நடிக்க ஏற்பாடு செய்து நாடகத் தொடக்க விழா நடத்தினேன்.

தொடக்க விழாவில் அவ்வை டி.கே.சண்முகம், டி.கே.பகவதி, அன்பு இயக்குநர் நடேசன், கவிஞர் தமிழ் ஒளி ஆகியோர் கலந்து கொண்டனர். அப்பொழுதுதான் என் மனதில் இருந்த குழப்பம் தெளிந்தது.

வழக்கம்போல் விந்தன் விழாவிற்கு வரவில்லை. எனினும் பாலும் பாவையும் நாவல் பற்றி சிவாஜி கணேசனுக்கு நல்ல அபிப்பிராயம் இருக்கிறது. அதனால் சிவாஜி கணேசனை நாடக அரங்கேற்றத்திற்குத் தலைமை தாங்க அழைக்க வேண்டும் என்றார்.

சிவாஜி கணேசன் நடித்த இரண்டு படத்திற்குக் கதை, வசனம், பாடல் எழுதிய விந்தனுக்கு சிவாஜியுடன் நெருங்கிய பழக்கம் இல்லை.

அச்சமயம் அமெரிக்காவிற்குச் சென்றிருந்த சிவாஜி கணேசன் எப்பொழுது தாயகம் திரும்புவார் என்ற விவரம் அறிய அவருக்கு நெருக்கமாக இருந்த நான்கு பேரைச் சந்தித்தோம். நான்கு பேரும் “எங்களுக்குத் தெரியாது” என்று ஒரே பதிலைச் சொன்னார்கள். அதனால் காலம் கடத்தாமல் டாக்டர் மு.வரதராஜனை நாடகத்திற்குத் தலைமை தாங்க அழைத்து 1964 ஜூலை 15 ஆம் தேதி சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் என் சொந்தச் செலவில் நாடகத்தை அரங்கேற்றினேன். அன்று மாலை ஔவை டி.கே.சண்முகம் என் நாடக முயற்சியைப் பாராட்டி வாழ்த்து மடல் அனுப்பி வைத்தார்.

என் நாடக முயற்சி வெற்றியா? தோல்வியா? என்று நினைக்கையில் ஆசிரியர் விந்தன் ஒவ்வொரு நிமிடமும் காட்டிய மௌனமும் அதற்குப் பின்னால் வெளிப்பட்ட அன்பும், ஆதரவும், அக்கறையும் என் முயற்சியின் வெற்றிக்கு வித்திட்டது போல் இருந்தது.

இந்த ஆண்டு பாலும் பாவையும் நாவலின் பவள விழா ஆண்டு. இந்தத் தலைப்பை எந்தப் பத்திரிகையோ, எழுத்தாளரோ, திரையுலகமோ, பயன்படுத்தாதது விந்தனுக்குப் பெரிய வெற்றியாகும்.

திருவள்ளுவருக்குத் திருக்குறள் போல், கம்பனுக்கு இராமாயணம் போல், இளங்கோ அடிகளுக்குச் சிலப்பதிகாரம் போல், விந்தனுக்கு பாலும் பாவையும் நாவல் அமைந்தது என்று வாசகர் உள்ளத்தில் பதிந்திருக்கிறது.

இந்தப் பதிவு தமிழர்களும், தமிழ் மொழியும் இருக்கும் வரை நீடிக்க வேண்டும் என்று தமிழ் வாசகர் உலகின் எதிர்பார்ப்பு.

தொடர்புக்கு: 9941275609

## இளமையில் க‘ள்’?!

*கடந்த ஜூன் 15ஆம் தேதி திருச்செந்தூர் அருகில் தமிழ்நாட்டில் கள் இறக்க அனுமதி வழங்கக்கோரி நடத்தப்பட்ட போராட்டத்தில் பனை மரம் ஏறி கள் இறக்கினார் நாம் தமிழர் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்.*

*சீமான் மரம் ஏறுவதற்கு வசதியாக பனை மரத்தில் ஏணிபோல் கட்டைகளை வைத்துக் கட்டி அதன் வழியே பனை மரத்தில் ஏறிய சீமான் கள் இறக்கினார்.*

*அண்டை மாநிலங்களான கேரளா, ஆந்திராவிலும் கள் தடை செய்யப்படாத போது, தமிழகத்தில் மட்டும் ஏன் கள்ளுக்குத் தடை? எனக்கேட்டு தடையை மீறி கள் இறக்கி உள்ளார். அதனை கீழே இருந்தவர்களும் சுவைத்துள்ளனர்.*

*தமிழ்நாட்டில் மட்டும் ஏன் கள்ளுக்கு அனுமதி இல்லை? சங்க இலக்கியங்களில் கள் உள்ளது. பெரியாரே சினிமா பார்ப்பதை விடவா கள் கேடு, ஏன் கள்ளுக் கடையை மூடுகிறார்கள்? என்று கேட்டுள்ளார் என சீமான் இப்போது பெரியாரைத் துணைக்கு அழைக்கிறார். ஆனால் அதே பெரியார்தான் மது ஒழிப்புப் போராட்டத்தில் தனக்குச் சொந்தமான தென்னந்தோப்பு முழுவதும் வெட்டிச் சாய்த்தார் என்பதை ஏன் அவர் குறிப்பிடவில்லை. சங்க இலக்கியங்கள் பற்றிக் குறிப்பிடுகிறார். ஆனால் வள்ளுவரின் திருக்குறளில் கள் உண்ணாமை குறித்து பத்துக் குறட்பாக்கள் இருக்கிறதே, அதைப் படித்தாரா? இல்லையா?*

*சுருக்கமாகச் சொன்னால், கள்ளுண்ணாமை அதிகாரம் மதுவின் தீமைகளையும், அதைப் பருகினால் ஏற்படும் இழிவுகளையும் விளக்கி, அதைத் தவிர்த்து வாழ வேண்டும் என்று வலியுறுத்துகிறது. ‘கள் உணவு’ என்று மிகத் தவறான பிரசாரத்தைச் செய்வதுடன், தடையை மீறி ‘கள்’ இறக்குவோம் எனக் கூறுவது அடாவடித்தனமானது ஆகும்.*

*அடுத்து மேய்ச்சல் நிலங்களின் உரிமையை வலியுறுத்தி மாடு மேய்க்கும் போராட்டத்தை நடத்தப் போகிறாராம்! நல்லது. ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையை எதிர்த்துப் போராட்டம் நடத்த மாட்டாரா? முருகனை பாஜக ஏற்று இப்போது போராட்டம் நடத்தப் போகிறது. முப்பாட்டன் உரிமை பேசிய சீமான் அமைதி காப்பது எதனால்?*

*இளமையில் கல் என்றார் அவ்வையார். ஆனால் இவரோ இளமையில் கள் என்கிறார் என்ன சொல்ல? தமிழகத்தின் பெருந்துயரம்.*

**த/லெ**

# அரசுப் பேருந்து ஓட்டுநரை தாக்கிய அதிகாரியை கண்டித்து ஆர்ப்பாட்டம்



மதுரை ஆரப்பாளையம் பேருந்து நிலையத்தில், ஓட்டுநர் கணேசன் மதுரைப் பேருந்து நிலையம் புறப்படுவதற்குக் காத்திருந்தார். பயணிகள் தாராபுரம் போவதற்கு நேரம் கேட்டபோது, அங்கு நேரக் காப்பாளர் உள்ளார், அவரிடம் சென்று கேளுங்கள் என்று கூறியுள்ளார். இது தொடர்பாகப் பயணிகளுக்கும், ஆரப்பாளையம் பேருந்து நிலையத்தில் பணியிலிருந்த துணை மேலாளருக்கும் நடந்த வாக்குவாதத்தில் துணை மேலாளர் மாரிமுத்து, ஓட்டுநர் கணேசனைச் செருப்பால் சரமாரியாக அடித்துள்ளார்.

இதைக் கண்டித்து ஏஐடியுசி, சிஐடியு உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன. இதன் ஒரு பகுதியாக, தஞ்சாவூர் ஜெபமாலைபுரம் அரசுப் போக்குவரத்துக்கழகக் கிளை முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு, கும்பகோணம் அரசுப் போக்குவரத்துச் சங்க ஏஐடியுசி பொதுச் செயலாளர் எஸ்.தாமரைச்செல்வன் தலைமை வகித்தார். சிஐடியு பொருளாளர் எஸ்.ராமசாமி முன்னிலை வகித்தார். ஏஐடியுசி போக்குவரத்துச் சங்க மாநிலத் துணைத் தலைவர் துரை.மதிவாணன் கண்டன உரையாற்றினார்.

# மேயரைச் சந்தித்து வாழ்த்து



திருச்சிராப்பள்ளி மாநகராட்சி நகர விற்பனைக் குழு தேர்தல் மூலம் வெற்றி பெற்ற ஏஐடியுசி, சிஐடியு பிரதிநிதிகள் ஆறு பேர் மேயரைச் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

# விருதுநகர் மாவட்டத்தில் விதொச உறுப்பினர் பதிவு



விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் மேற்கு ஒன்றியம் சுந்தர் நாச்சியார் புரத்தில், தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர்கள் சங்க உறுப்பினர் பதிவு ஒன்றியச் செயலாளர் அமுல்ராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் வரதராஜன் விளக்கிப் பேசினார்.

# விமான விபத்தில் உயிரிழந்தோருக்கு ஏஐஒய்எப் அஞ்சலி



அகமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்தோருக்கு, அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மதுரைப் புறநகர் தோழர்கள் அஞ்சலி செலுத்தினர். மேலும், சேகுவாராவின் பிறந்தநாள் கருத்தரங்கம் சேகுவாராவின் வாழ்வும் மரணமும் குறித்து நடைபெற்றது.

# 2025 ஜூலை 9 பொது வேலை நிறுத்தத்தை வெற்றி பெறச் செய்வோம்!





## தமிழ்நாடு ஏஐடியுசி பொதுக்குழு முடிவு

தமிழ்நாடு ஏஐடியுசி பொதுக்குழுக்கூட்டம் 12.06.2025 அன்று கரூரில் தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநிலப் பொதுச் செயலாளர் ம.ராதாகிருஷ்ணன் செயல்பாட்டு அறிக்கையை முன்வைத்தார். தேசிய துணைத்தலைவர் கே.சுப்பராயன், தேசியச் செயலாளர்கள் டி.எம். மூர்த்தி, வகிதா நிஜாம், மாநிலச் செயலாளர்கள் சி.சந்திரகுமார், ஆர்.ஆறுமுகம், சின்னச்சாமி ஆ.பாஸ்கர், ஆர்.தில்லைவனம், வி.ஆதிமூலம், பொருளாளர் பீட்டர் துரைராஜ் உள்ளிட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

கூட்டம் கீழ்க்கண்ட தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றியது.

தொழிலாளர் மீதான தாக்குதலை ஒன்றிய அரசு மேலும் கூர்மைப்படுத்தி வருகிறது. 150 ஆண்டுகளாகப் போராடிப் பெற்ற உரிமைகள் அனைத்தும் ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டு வருகின்றன. நிரந்தரத் தொழிலாளர் என்ற முறைமை படிப்படியாக ஒழிக்கப்படுகிறது. நிரந்தரப் பணியிடங்கள், எந்தச் சட்ட உரிமையும் இல்லாத காண்ட்ராக்ட், அவுட்சோர்சிங் தொழிலாளர்களால் நிரப்பப்படுகின்றன.

தொழிலாளர்களின் வேலைப்பாதுகாப்பு, ஊதியப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு அனைத்தும் மறுக்கப்பட்டு, அற்றைக் கூலித் தொழிலாளர்களாக மாற்றப்படுகிறார்கள். அதற்கு வசதியாக 44 தொழிலாளர் சட்டங்களின் சாறு பிழியப்பட்டு, வெறும் சக்கையாக 4 தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை ஒன்றிய அரசு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக இயற்றியது. தொழிலாளர்களின் கடுமையான எதிர்ப்பின் காரணமாக இதுவரை அமலாக்கவில்லை. ஆனாலும் சட்டங்களைச் செயல்படுத்த ஒன்றிய அரசு கடும் முயற்சிகளை மேற்கொள்கிறது.

இந்திய விவசாயிகள் ஓராண்டுக்குமேல் போராடி மூன்று வேளாண் சட்டங்களை முறியடித்த வழியில், தொழிலாளர் சட்டத்தொகுப்புகளைத் திரும்பப் பெறவைக்க முனைப்பான போராட்டம் காலத்தின் தேவையாகிறது.

நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகளைத் திரும்பப் பெறக் கோரியும், தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் பொதுவாக மக்களின் பிற நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தியும் ஜூலை 9, 2025 அன்று நாடு தழுவிய பொது வேலைநிறுத்தத்தை மத்திய தொழிற்சங்கங்கள் விடுத்த அழைப்பின்படி வெற்றிகரமாக நடத்த மாநிலக் கூட்டுக் குழு முயற்சிகளை எடுத்து வருகிறது.

பொது வேலைநிறுத்தக் கோரிக்கைகளைத் தொழிலாளர்கள் அனைவருக்கும் எடுத்துச் செல்லவும், பொதுமக்களிடம் பரப்புரை செய்யவும், உரிய வகையில் ஆயத்த நடவடிக்கைகளை இன்னும் முனைப்புடன் வரும் 25 நாட்களில் மேற்கொள்வது என்றும் வேலைநிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்துவதோடு, அதன் தொடர்ச்சியாக மறியல் உள்ளிட்ட போராட்டங்களில் ஈடுபடுவது என்றும் இவற்றில் பெருமளவு தொழிலாளர்களைத் திரட்டுவது என்றும் ஏஐடியூசி மாநிலப் பொதுக்குழு கூட்டம் முடிவு செய்கிறது.

# கொத்தமங்கலத்தில் முப்பெரும் விழா

புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் ஒன்றியம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொத்தமங்கலம் கிளையின் மறைந்த தோழர் ரெ.நாச்சானின் 50வது ஆண்டு நினைவு நாள் மற்றும் அ.பத்மநாபன், ஒ.வி.கருப்பையா இவர்களின் நினைவு மற்றும் கட்சியின் நூற்றாண்டு விழா, சுதந்திரப் போராட்ட வீரர் இரா.நல்லகண்ணு நூற்றாண்டு விழா, முப்பெரும் விழா தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மாவட்டச் செயலாளர் த.செல்வராசு தலைமையில் நடைபெற்றது.

நாச்சான் நினைவு இல்லத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்சியின் நூற்றாண்டு நினைவுக் கல்வெட்டைத் திறந்து வைத்து, தியாகச் செங்கொடியை மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் ஏற்றினார். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் கொடியை மாவட்டச் செயலாளர் த.செங்கோடன் ஏற்றினார். ஏஐடியுசி கொடியை ஒன்றியச் செயலாளர் மா.திலகர் ஏற்றினார். வாடிமாநகர் கடைத்தெருவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ரெ.நாச்சான் நினைவாக மா.கந்தசாமி ஆசிரியரால் தொகுக்கப்பட்ட சிறப்பு மலரை மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டார்.

## ஆசிரியர் கூட்டமைப்பில் பெரும் பங்காற்றிய பெருமாள் வாத்தியார் மறைவு

தங்கம்மாள்புரம் கம்யூனிஸ்ட் வாத்தியார் என்று அனைவராலும் அழைக்கப்படும், தோழர் பி.பெருமாள் வாத்தியார் மறைந்தார். இவர் ஆசிரியர் கூட்டமைப்பில் பெரும் பங்காற்றிய மறைந்த பேராசிரியர் போத்தி அவர்களோடு ஆசிரியர் கூட்டமைப்பில் இணைந்து பணியாற்றியவர். இவரது மறைவையொட்டி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக் குழுவின் சார்பில், மாவட்டத் துணைச் செயலாளர் பாலமுருகன், மாவட்டக் குழு உறுப்பினர் பிச்சை, விளாத்திகுளம் தாலுகா துணைச் செயலாளர் கந்தசாமி, தாலுகா பொருளாளர் சுப்பையா ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

ரயில்வே சுரங்கப்பாதையின் இருபுறமும்

# அணுகுச் சாலை அமைக்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்



கோவில்பட்டி இளையரசனேந்தல் ரயில்வே சுரங்கப்பாதையின் இருபுறமும் அணுகுச் சாலை அமைக்க வலியுறுத்தி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், நகரச் செயலாளர் செந்தில் ஆறுமுகம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டத் துணைச் செயலாளர் பாபு, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் சேதுராமலிங்கம் ஆகியோர் கோரிக்கையை விளக்கிப் பேசினர். இதில் சிபிஐ நகர உதவிச் செயலாளர்கள் அலாவுதீன், விஜயலட்சுமி, பொருளாளர் சீனிவாசன், கோமதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கோவில்பட்டி இளையரசனேந்தல் சாலையில் உள்ள ரயில்வே சுரங்கப்பாதையின் இருபுறமும் முழுமையாக அணுகுச் சாலை அமைத்திட வேண்டும், மந்தித்தோப்பு சாலையை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் சிபிஐ நகர உதவிச் செயலாளர்கள் அலாவுதீன், விஜயலட்சுமி, பொருளாளர் சீனிவாசன், கோமதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# போர் இல்லாத உலகம் கவியரங்கம்



கலைமாமணி வி.பி.மாணிக்கம் கலை இலக்கிய தமிழ் வளர்ச்சி மன்றத்தின் சார்பில், புதுச்சேரி தூய மேரி மேல்நிலைப் பள்ளியில் கவியரங்கம் நடைபெற்றது. கவிஞர் கலைச்சுடர் பாரதி வரவேற்றார். கலைமாமணி மாணிக்கம் தலைமை உரையாற்றினார். படைப்பாளி பைரவி தலைமையில் 'போர் இல்லாத உலகம்' தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது. பள்ளித் தலைமை ஆசிரியர் செல்வி மேரி, சமூக சேவகர் கமலக்கண்ணன், புதுவைக்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். ஓவியக் கவி பரமேஸ்வரன் நன்றி கூறினார்.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இடைக் கமிட்டி மாநாடுகள்

**விருதுநகர் தெற்கு ஒன்றியம்:** விருதுநகர் மாவட்டம் ஆர்.ஆர்.நகரில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் விருதுநகர் தெற்கு ஒன்றிய மாநாடு நடைபெற்றது. ராஜேந்திரன், ராமசுப்பு தலைமைக் குழுவாகச் செயல்பட்டனர். மூத்த தோழர் செல்லச்சாமி கட்சிக் கொடியை ஏற்றினார். மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்.பி மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசினார். தேசியக் குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்.எல்.ஏ, மாவட்ட துணைச் செயலாளர்கள் சமுத்திரம், செந்தில்குமார், மாவட்டப் பொருளாளர் பழனிக்குமார், பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்.எல்.ஏ, இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் பகத்சிங், விருதுநகர் வடக்கு ஒன்றியச் செயலாளர் சக்கணன் ஆகியோர் பேசினார்கள்.

ஒன்றியச் செயலாளராக பாலமுருகன், துணைச் செயலாளர்களாக வடிவேல் முருகன், ராமசுப்பு, பொருளாளராக வீரமுத்து ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

தேசிய நெடுஞ்சாலை என்.ஹெச்7 வழியாகச் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் ஆர்.ஆர்.நகரில் நின்று செல்ல வேண்டும், ஆர்.ஆர்.நகரை மையமாக வைத்துப் புதிய ஊராட்சி ஒன்றியம அமைக்க வேண்டும், அதிக மக்கள் தொகை கொண்ட வாடியூர் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**ஆத்தூர் ஒன்றிய மாநாடு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆத்தூர் ஒன்றிய 14வது மாநாட்டில், ஒன்றியச் செயலாளராக ஜெ.இலக்கியராஜ் தேர்வு செய்யப்பட்டார்.

**திருச்சுழி நரிக்குடி ஒன்றியம்:** விருதுநகர் மாவட்டம் திருச்சுழி நரிக்குடி ஒன்றிய 25வது மாநாடு பெரியண்ணன், குருசாமி, தங்கராஜ் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மூத்த தோழர் சீனிவாசன் கட்சிக் கொடியை ஏற்றினார். அஞ்சலித் தீர்மானத்தை சங்கரபாண்டி வாசித்தார். மாநாட்டைத் தொடங்கி வைத்து மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்.பி பேசினார். தேசியக் குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்.எல்.ஏ நிறைவுரையாற்றினார். மாநிலக் குழு உறுப்பினர்கள் செந்தில்குமார், பாலமுருகன், மாவட்டப் பொருளாளர் பழனிக்குமார், விதொச வரதராஜன், இளைஞர் மன்ற மாவட்டச் செயலாளர் பகத்சிங் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். செயலாளராக செல்வம், துணைச் செயலாளராக பெரியண்ணன், பொருளாளராக ஜீவானந்தம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

விவசாயிகளுக்கு நிவாரண நிதி, பயிர்க் காப்பீட்டு நிதியை உடனே வழங்க வேண்டும். காட்டு நாயக்கன் சமூகத்திற்குச் சாதிச் சான்றிதலை உடனே வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நகரச் செயலாளர் செந்தூர்பாண்டி நன்றி கூறினார்.

**திருப்பூர் இரண்டாவது மண்டலம்:** கட்சியின் திருப்பூர் மாநகர், இரண்டாவது மண்டலக் குழுவின் 5வது மாநாடு, பி.சிவசாமி நினைவரங்கத்தில் ஆர்.ரவிச்சந்திரன், என்.முத்துப்பாண்டி, ஆர்.தமிழ்ச்செல்வி, ஜி.சங்கீதா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மூத்த தோழர் ஆர்.வெங்கடாசலம் கொடி ஏற்றினார். ஆர்.சந்திரசேகர் அனைவரையும் வரவேற்றார். மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.ரவி துவக்க உரையாற்றினார். மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு தலைவர் கே.சுப்பராயன் எம்.பி சிறப்புரையாற்றினார்.

இதில் செயலாளராக வி.எஸ்.சசிகுமார், துணைச் செயலாளர்களாக எஸ்.விஜய், என்.முத்துப்பாண்டி, பொருளாளராக ஏ.ராஜேந்திரன் ஆகியோர் தேர்வு





செய்யப்பட்டனர். மாநகர் மாவட்டச் செயலாளர் எஸ்.ரவிச்சந்திரன், திருப்பூர் மாநகராட்சி துணை மேயர் ஆர்.பாலசுப்பிரமணியம், மூத்த தோழர் ஜி.காளியப்பன், ஏஐடியுசி மாவட்ட தலைவர் எம்.மோகன், முதல் மண்டலக் குழுச் செயலாளர் எஸ்.செல்வராஜ், மூன்றாவது மண்டலக் குழுச் செயலாளர் ஆர்.செந்தில்குமார், நான்காவது மண்டலக் குழுச் செயலாளர் ஆர்.வடிவேல் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

வளர்ந்து வருகிற திருப்பூர் மாநகரத்தின் போக்குவரத்து நெருக்கடியைப் போக்கவும், விபத்துகளைத் தடுக்கவும், புஷ்பா தியேட்டரில் இருந்து பெருமாநல்லூர் வரை பறக்கும் மேம்பாலம் அமைக்க வேண்டும்.

திருப்பூர் மாநகராட்சி அறிவித்துள்ள சொத்து வரி உயர்வு, குப்பை வரி உயர்வை ரத்து செய்ய வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.,






**நெல்லை மண்டலம்:** நெல்லை மண்டல 2 வது மாநாடு பாலன் இல்லத்தில் என்.முருகன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஆர்.சடையப்பன் சிறப்புரை ஆற்றினார். இதில் மண்டலச் செயலாளராக ஏ.வெடிகண்டபெருமாள், துணைச் செயலாளர்களாக பொ. கிருஷ்ணன், பி.சுரேஷ், பொருளாளராக பி.ஜான் டேனியல் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

சீர்மிகு நகரத் திட்டத்தில் கட்டியுள்ள கட்டிடங்கள், வணிக வளாகம், பேருந்து நிலையம், தினசரி சந்தை, வாகனக் காப்பகம், வாகன முனையம் ஆகியவற்றை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும். தாமிரபரணி ஆற்றில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க பாதாளச் சாக்கடை பணியை விரைந்து முடிக்க வேண்டும். மாநகரம் முழுவதும் சாலைகளை விரைவாகச் சீரமைக்க வேண்டும்.

**களக்காடு ஒன்றியம்:** கட்சியின் திருநெல்வேலி மாவட்ட களக்காடு ஒன்றிய மாநாடு பாலன் இல்லத்தில் முத்துவேல் தலைமையில் நடைபெற்றது. நெல்லை மாவட்டச் செயலாளர் ஆர்.சடையப்பன் சிறப்புரையாற்றினார்.

இதில் ஒன்றியச் செயலாளராக எம்.லெனின் முருகானந்தம், துணைச் செயலாளர்களாக எஸ்.ஏ.பி.பாலன், பி.சுகுமாரன், பொருளாளர் வி.பாண்டி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டார்கள். மாவட்ட துணைச் செயலாளர் ஏ.சேதுராமலிங்கம் வாழ்த்திப் பேசினார்.

**மதுரை மாநகர் மத்திய கிழக்கு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மதுரை மாநகர், மத்திய கிழக்குப் பகுதி 10வது மாநாடு, கிருஷ்ணமூர்த்தி, வீரமாகாளி, சோலை ஈஸ்வரி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியினை கிருஷ்ணமூர்த்தி ஏற்றினார். மாநகர் மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.முருகன், எம்.நந்தாசிங், பி.ராஜலட்சுமி, சீ.தாமஸ், பி.வீரனசிங்கம் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

செயலாளராக கே.சந்திரசேகர், உதவிச் செயலாள ராக கே.வீரமாகாளி, சித்தநாதன், பொருளாளராக எம்.ஜெய்லானி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**இருகூர் கிளை:** கோவை மாவட்டம் இருகூர் கட்சிக் கிளை மாநாடு சௌந்தரராஜன் தலைமையில் நடைபெற்றது. இதில் செயலாளராக வீராச்சாமி, துணைச் செயலாளராக சௌந்தரராஜன், பொருளாளராக சக்திவேல் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாவட்டச் செயற்குழு உறுப்பினர் மௌனசாமி, தெற்கு ஒன்றியச் செயலாளர் வசந்தகுமார், மாவட்டக் குழு உறுப்பினர் எஸ்.கோட்டியப்பன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

**மருங்காபுரி ஒன்றியம்:** மருங்காபுரி ஒன்றிய மாநாடு துவரங்குறிச்சியில் பாலமுருகன், தேவகி, கண்ணதாசன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. புறநகர் மாவட்டச் செயலாளர் ராஜ்குமார் துவக்க உரையாற்றினார். திருச்சி புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் பழனிச்சாமி, போக்குவரத்து ஏஐடியூசி சம்மேளனத் துணைப் பொதுச் செயலாளர் சுப்பிரமணியன், திருச்சி மண்டலச் செயலாளர் சுந்தர்ராஜ், கட்சி மணப்பாறை நகரச் செயலாளர் ஜனசக்தி உசேன், தெற்கு ஒன்றியச் செயலாளர் ராஜேந்திரன் ஆகியோர் வாழ்த்தி உரை நிகழ்த்தினர். ஒன்றியச் செயலாளர் வெள்ளக்கண்ணு வேலை அறிக்கை சமர்ப்பித்தார்.



செயலாளராக ஆறுமுகம், துணைச் செயலாளர்களாக பாலமுருகன், கோவிந்தராஜ், பொருளாளராக பெரியசாமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் துணைச் செயலாளர் இந்திரஜித் நிறைவுரை ஆற்றினார். பத்துக்கும் மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. துணைச் செயலாளர் கோவிந்தராஜ் நன்றி கூறினார்.

**முசிறி ஒன்றியம்:** முசிறி ஒன்றிய மாநாடு முவனூரில் சரவணன் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டைத் துவக்கி வைத்து புறநகர் மாவட்டச் செயலாளர் ராஜ்குமார் உரையாற்றினார். புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் பழனிச்சாமி மாநாட்டினை வாழ்த்தி உரை நிகழ்த்தினார்.

செயலாளராக சண்முகம், துணைச் செயலாளர்களாக சுப்பிரமணி, ஜெகதீஸ், பொருளாளராக சத்தியராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலப் பொருளாளர் ஆயிலை சிவசூரியன் உரை நிகழ்த்தினார். ஐந்துக்கும் மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தொட்டியம் ஒன்றிய மாநாடு:** தொட்டியம் ஒன்றிய மாநாடு சதிஸ் குமார் இல்லத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டுக்கு நடராஜ், பார்வதி ஆகியோர் தலைமை வகித்தினர். மாநாட்டைத் துவக்கி வைத்து புறநகர் மாவட்டச் செயலாளர் ராஜ்குமார் உரையாற்றினார். புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் பழனிச்சாமி வாழ்த்தி உரை நிகழ்த்தினார்.

இதில் செயலாளராக சதிஸ், துணைச் செயலாளர்களாக மூர்த்தி, சசிகுமார், பொருளாளராக குழந்தைவேல் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலப் பொருளாளர் ஆயிலை சிவசூரியன் உரை நிகழ்த்தினார்.

**உப்பிலியபுரம் ஒன்றிய மாநாடு:** திருச்சி புறநகர் மாவட்டம் உப்பிலியபுரம் ஒன்றிய மாநாடு சாந்தி, ஏ.சுப்பிரமணியம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

மூத்த தோழர்.ஏ.சந்திரசேகர் மாநாட்டுக் கொடியினை ஏற்றினார். சுப்பிரமணியன் வரவேற்புரை நிகழ்த்தினார். சுந்தர்ராஜ் அஞ்சலித் தீர்மானத்தை வாசித்தார்.

மாநாட்டைத் தொடங்கி வைத்துக் கட்சியின் புறநகர் மாவட்டச் செயலாளர் செ.ராஜ்குமார் உரை நிகழ்த்தினார். விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டச் செயலாளர் கணேசன், விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் பழனிச்சாமி, உப்பிலியபுரம் ஒன்றியப் பொறுப்பாளர் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.செல்வராஜ் ஆகியோர் மாநாட்டை வாழ்த்தி உரை நிகழ்த்தினர்.

ஒன்றியச் செயலாளராக வி.ஆர். மருதையும், துணைச் செயலாளர்களாக சுப்ரமணியம், அருண்மொழிவர்மன், பொருளாளராக மேட்டூர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டார்கள்.

நிறைவாக தமிழ்நாடு விவசாயிகள் சங்க தேசியக் குழு உறுப்பினர் த.இந்திரஜித் உரை நிகழ்த்தினார்.






# பேராசிரியர் G.சாமுவேல்

## கட்சிப் பணியும் தொழிற்சங்கப் பணியும்



ப.பரமசிவம்

**1940ல் சேலம் முனிசிபாலிட்டி நடத்தி வந்த ஒரே அரசுக் கல்லூரி சேலத்தில் உள்ள கலைக் கல்லூரிதான். அதில் பேராசிரியர் G.சாமுவேல் லாஜிக் போதிக்கும் பேராசிரியராக மிகச் சிறப்பாகப் பணியாற்றி வந்தார். தமது வகுப்பில் பயின்ற மாணவர்களுக்குப் பாடம் மட்டுமின்றித் தத்துவார்த்தப் பயிற்சியும் அளித்து வந்தார்.**

கிடைக்கும் ஒய்வு நேரத்தில் மார்க்ஸீயப் பயிற்சியும் அளிக்கத் தவறவில்லை.இதையறிந்த கல்லூரி முதல்வர் நி.சாமுவேலை உடனடியாகக் கல்லூரியிலிருந்து வெளியேற்றிவிட்டார். 1944 இல் இச்சம்பவம் நடந்தது. உடனடியாக வெளியேறி அவரது ஊரான ஆத்துருக்கு அருகிலுள்ள மஞ்சினிக்கே சென்றுவிட்டார்.

14 ஏக்கர் நிலம் சொந்தமாக இருந்துள்ளது. மனைவியும் இல்லாமல் நமது இரு மகன்களும் வெளியூரில் இருந்ததால், தனிக் கட்டையான இவர் மீண்டும் சேலத்திற்கு வந்து அரசியல் தொழிற்சங்கக் கூட்டத்தில் செயலாற்றத் தொடங்கினார்.

வருமானம் ஏதுமில்லாததால் ஏதாவது தொழில் செய்ய முனைந்து செவ்வாய்பேட்டையில் இருந்த அவரது நண்பர் மாரப்பகவுண்டரிடம் இணைந்து செவ்வாய்பேட்டை லாரிமார்க்கெட்டில் சினிமா டெண்ட் கொட்டகை போட்டு சினிமா காட்சிகள் நடத்தி வந்தார். அருகில்தான் சத்திரம் அரிசிப்பாளையத்தில் கட்சித் தொழிற்சங்க அலுவலகம் செயல்பட்டு வந்தது. அடிக்கடி அங்கு சென்றதால் K.செல்வராஜ், S.M.ராமையா இவர்களுடைய நெருங்கிய தொடர்பு ஏற்பட்டுள்ளது.



1946ல் சினிமா தொழிலை உதறிவிட்டு முழுநேரத் தொழிற்சங்கப் பணிகளில் பொறுப்பேற்றுச் செயல்படத் தொடங்கினார்.

பஞ்சாலைப் பிரச்சனைகள் மிக வேகமாகச் சூடு பிடிக்கத் தொடங்கியதால் S.M.ராமையா, G.சாமுவேல் மாவட்டப் பணிகளைப் பிரித்துக் கொண்டு கடுமையாகச் செயல்படத் தொடங்கினார்கள். 1950களில் சேலத்திலுள்ள மில்கள் திருச்செங்கோடு புள்ளிகார் மில்களில் சம்பள உயர்வு கோரி தொழிலாளர்கள் போராடத் தொடங்கினார்கள். அதில் G.சாமுவேல் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றார்.

K.T.K.தங்கமணி, பார்வதி கிருஷ்ணன், N.K.கிருஷ்ணன் ஆகியோர் சேலத்தில் முகாமிட்டு மில் தொழிலாளர்கள் போராட்டத்திற்கு வழிகாட்டினார்கள். மில் நிர்வாகத்திடம் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள். வழக்கு மன்றத்திலும் பல சுற்று பேச்சுவார்த்தை நடத்தினர். அதன்பிறகு ஓரளவிற்குச் சம்பள உயர்வு ஒப்பந்தம் போடப்பட்டது.

சேலத்தில் பீடித் தொழிலாளர்கள் பரவலாகப் பணிபுரிந்து வந்தார்கள். அவர்களுக்குக் குறைந்த கூலி மட்டுமே வழங்கப்பட்டு வந்துள்ளது. அந்தத் தொழிலாளர்களை பீடி முதலாளிகள் கொத்தடிமைகளாக நடத்தி வந்தார்கள். பீடிச் சங்கத்தில் அவர்களை அழைத்து வந்து பீடித் தொழிலாளர்களுக்கான கோரிக்கைகளை உருவாக்கினார். இச்சங்கத்திற்கு G.சாமுவேல் தலைவராகவும் H.M.முஸ்தபா செயலாளராகவும் இருந்து செயல்பட்டார்கள்.

மாநிலப் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு அனைத்துப் பகுதிகளுக்குமான அடிப்படை பஞ்சப்படி இன்சென்டிவ் இதரச் சலுகைகளை 1956ல் தமிழக அரசு அறிவித்தது. சேலத்துப் பஞ்சாலை முதலாளிகள் கொடுக்க மறுத்தார்கள். அதனை பஞ்சாலைத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கத் தொழில் கோர்ட்டில் தாவா எழுப்பிக் கடுமையாக உழைத்து வாதாடி கிடைக்கச் செய்தார்.

1962ல் S.M.ராமையாவிற்குப் பிறகு கட்சியின் மாவட்டச் செயலாளர் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார். கட்சியை முறைப்படுத்துவதில் வேகமாகச் செயல்படத் துவங்கினார். எங்கும் சைக்கிளில்தான் செல்வார். மாலை நேரங்களில்தான் கட்சிக் கிளைக் கூட்டங்கள் நடைபெறும். அரி சிபாளையத்திலிருந்து நாளிக்கல்பட்டி 10 கிலோ மீட்டர் இருக்கும் அந்தக் கிளைக் கூட்டத்திற்கு சைக்கிளில்தான் சென்று கிளைக்கூட்டத்தை நடத்திவிட்டு இரவு 10.00 மணியளவில் புறப்பட்டு அலுவலகம் வந்தடைவாறாம்.

சேலம் மாநகரத்தில் சாயப்பட்டறைத் தொழிற்சாலைகள் ஏராளமாகச் செயல்பட்டு வந்துள்ளன. நகரத்திலிருந்து சுற்றுவட்டாரத்தில் பத்துக் கிலோ மீட்டர் சுற்றுளவில் இருந்து தொழிலாளர்கள் சாயப்பட்டறையில் பணி செய்வார்கள். அவர்களை எல்லாம் ஒன்று திரட்டிச் சங்கம் வைத்து நாளிக்கல்பட்டி K.K.கருப்பண்ணன் செயலாளராகவும், G.சாமுவேல் தலைவராகவும் இருந்து செயல்பட்டார்கள். தொழிற்சாலை சட்டப்படி தொழிலாளருக்கு உள்ள சட்டப்படி வழங்க வேண்டும் என்று கடுமையாகப் போராடினார்கள். பிரச்சனை தீரவில்லை வழக்கு தொழில் கோர்ட்டுக்குச் சென்றது.

சாயப்பட்டறையில் பணிபுரியும் எல்லா தொழிலாளர் விவரங்களையும் குதிரை வண்டில்தான் கோர்ட்டுக்கு எடுத்துச் செல்வார். நாள் முழுதும் கோர்ட்டில் வேலை. மதிய உணவு சாப்பிட பணம் இருக்காது. கடலைமிட்டாயும் முறுக்கையும் வாங்கிச் சாப்பிட்டுத் தண்ணீரைக் குடித்து வயிற்றை நிரப்பிக் கொண்டு பசியாற்றிக் கொள்வார். கோர்ட்டில் கடுமையாக வாதாடி சாயத் தொழிலாளர்கள் 9 பேர்களுக்கு மேல் ஒரு பேக்டரியில் பணிபுரிந்தால் அது தொழிற்சாலை சட்டத்திற்குள் வரும் என்று தமிழ்நாட்டிலேயே சாயத் தொழிலாளர்களுக்கு முன்னோடித் திட்டத்தைக் கொண்டு வந்தார். 1956 - 1958 வரை சேலம் சீலநாயக்கன்பட்டியில் இயங்கிச் சுற்றுபுறச் சுகாதாரத்தைக் கெடுத்துவந்த தோல்சாப்பை அகற்றக் கோரி, பாதிக்கப்பட்ட மக்களைத் திரட்டிப் போராடி வந்தார்.

1972ல் ராஜேந்திரா மில்லில் வேலைபளுவை எதிர்த்து 43 நாள் ஸ்டிரைக் நடந்தது. அதில் S.R.பெருமாள், G.கோபால் உள்பட 700 பேர் மறியலில் கைதாகினர். சேலம் நகர ஏஐடியுசி சங்கங்கள் மேகனசைட் சங்கம் போன்ற பல சங்கங்கள் தினசரி ஊர்வலம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. மாநிலத் தலைவர்கள் பலர் வந்து ஆதரித்தார்கள். G.சாமுவேல் சிறப்பாக இவ்வழக்கில் ஆஜராகி வாதாடிச் சம்பளம், பஞசப்படி உயர்வு பெறுவதற்கு வழி வகுத்தார்.

**சேலம் உருக்காலை:** சேலம் கஞ்கமலையில் உள்ள இரும்புத் தாதுவை வெட்டி எடுத்து உருக்காலை உருவாக்க நமது தலைவர்கள் ராமமூர்த்தி, கல்யாணசுந்தரம் ஆகியோர் பெரும் முயற்சி மேற்கொண்டனர். 1955 ஆண்டு முதல் பல இயக்கங்கள் தொடர்ந்து வந்தன. இதில் பெரும் பங்காற்றியது 1965ல் உருக்காலை அமைக்க வலியுறுத்தி G.சாமுவேல் 9 நாட்கள் சேலம் தலைமைத் தபால் நிலையம் அருகில் உண்ணாவிரதம் மேற்கொண்டார். உண்ணாவிரதத்தை முடித்து வைக்கக் கூறி முதலமைச்சராக இருந்த காமராசர், திரு மா. பொ.சி.சிவஞானத்தைத் தூது அனுப்பி சேலம் இரும்பாலை வந்தே தீரும் அதற்காக நான் தொடர்ந்துதான் போராடி வருகிறேன். அதனால் உண்ணாவிரதப் போராட்டத்தை வாபஸ் வாங்கிக் கொள்ளச் செய்யுங்கள் என்று மாபொசி மூலம் சொல்லி அனுப்பிப் போராட்டத்தை வாபஸ் வாங்க வைத்தார். அவர் கூறியது போல மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து 1982ல் சேலம் உருக்காலைச் செயல்பாட்டிற்கு வந்துவிட்டது.

இவர் கடைசி மூச்சுள்ள வரை பல சங்க வழக்குகளை நடத்தித் தொழிலாளர்களுக்கு வெற்றியும், கூலி உயர்வும் பெற்றுத் தந்துள்ளார். பல சங்கங்களை உருவாக்கிச் செயல்படுத்தியுள்ளார். இறுதிவரை உழைக்கும் மக்களுக்காகவே செயல்பட்டு 1974ல் மறைந்தார். இவருக்கு 2 மகன்கள் இருந்தனர்.

மத்திய மாநில அரசுகள் நியமித்த பஞ்சலைச் சங்கம் அமைப்புகளுக்கான மாநில ஆலோசனைக் குழு உறுப்பினராக இவர் இருந்தார். குறிப்பாக தமிழக கம்யூனிஸ்ட் தலைவர்கள் பலர் சிறையில் இவரிடம் ஆங்கிலம் கற்றுக் கொண்டுள்ளார்கள். பேராசிரியர் G.சாமுவேல் என்றுதான் அன்போடு எல்லோராலும் அழைக்கப்பட்டவர்.

தொழிலாளி வர்க்கத்திற்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்தான் G.சாமுவேல். அவர் வாழ்ந்த பூமிதான் சேலம். அவர் விட்டுச் சென்ற பணியைத் தொடங்குவோம்.

**அந்த சேலத்தில்தான் கட்சி துவங்கிய 100 வது ஆண்டில் 26 வது தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு ஆகஸ்ட் 15, 16, 17, 18 தேதிகளில் நடைபெறுகிறது. அனைவரும் வாரீர்... ஆதரவு தாரீர்.**

**தொடர்புக்கு: 9442995040**

## நூல் நயம்

### எந்தக் கட்சி நம்ம கட்சி




ஒரு ஜனநாயக நாட்டில் அரசியல் கட்சிகள் இன்றியமையாதவை. அரசியல் கட்சிகளால்தான் மக்களின் தேவைகள், விருப்பங்கள், கோரிக்கைகளைப் பூர்த்தி செய்ய முடியும். நாட்டின் முன்னேற்றம் குறித்தும், பாதுகாப்பு, தொழில் வளர்ச்சி, மக்களின் நலன் குறித்தும் அரசியல் கட்சிகளின் பார்வை தெளிவாக இருந்தால்தான், நாட்டின் பயணம் சரியாக இருக்கும். இதற்கு அடிப்படைத் தேவையாக இருப்பது அரசியல் கட்சிகளாகும். ஆனால் நமது அரசியல் கட்சிகள் தேர்தல் வருகிற போது கொடுக்கிற வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறார்களா என்றால் நிச்சயமாக அது கேள்விக்குறிதான்? நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வேலை வாய்ப்பை உருவாக்குவோம், அனைவருக்கும் உணவு, வீடு, வேலை, மருத்துவ வசதியை ஏற்படுத்தித் தருவோம் என்ற தேர்தல் வாக்குறுதிகள் காற்றில் பறப்பதை நாம் அறிவோம்.

மனிதர்கள் இயற்கையோடு இணைந்தும், போராடியும் மனித இனத்தை மேன்மையடையச் செய்ய வேண்டுமே தவிர, இயற்கையை அழிப்பதன் மூலம் தன்னையும் அழித்துக் கொள்வது அல்ல. ஆனால் உலகமயமாக்கல் காரணமாகப் பல்வேறு விதமான உற்பத்திப் பொருள்கள் தேவைக்கு மேலாகச் சந்தையில் குவிந்து கிடக்கின்றன. இதனால் இயற்கை மாசுபாடுகள் அதிகரித்திருக்கின்றன.

இயற்கையைச் சீரழிப்பது பற்றி கார்ப்பரேட்டுகள் ஒருபோதும் கவலைப்படுவதில்லை. குறிப்பாக மின்சார உற்பத்தி, பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருட்களைப் பயன்படுத்திச் சுற்றுச்சூழலை வேகமாக மாசுபடுத்தி வருகிறார்கள். நெகிழிப் பொருட்கள், எலக்ட்ரானிக் பொருட்கள் தேவைக்கு அதிகமாகவே பயன்படுத்தப்படுகின்றன. நமது அரசியல் கட்சிகள், தங்களது பொருளாதார யுத்திகளை மாற்றி, இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையை மக்களுக்குக் கற்றுத் தருவதற்கு முன்வர வேண்டும். இயற்கையைப் பாதுகாப்பதன் மூலமாகத்தான், நாம் பாதுகாப்பாக வாழ முடியும். அவற்றை எந்தக் கட்சி முன்னெடுக்கிறதோ அந்தக் கட்சியே மக்கள் கட்சியாகும் என்று இந்நூல் பேசுகிறது. சிறு நூலாக இருந்தாலும், சிந்திக்கத்தக்க நூல்.

– இன்சுவை பாரதி

நூலாசிரியர் : பா.சின்மயானந்தம்
பக்கம் : 32 விலை : 40
வெளியீடு : சிந்திப்போம் செயல்படுவோம் இயக்கம், 1, ஈ.வெ.ரா. பெரியார் தெரு, அண்ணா நகர், மதுரை – 20

# சேகுவேராவின் வாழ்வும் மரணமும்

# தமிழ்நாடு முழுவதும் இளைஞர் பெருமன்றக் கருத்தரங்கம்










**இளைஞர்களின் ஆதர்ச நாயகனாக சேகுவேரா விளங்கி வருகிறார். ஏகாதிபத்திய எதிர்ப்பில், பாசிச எதிர்ப்பில் உறுதியாக நின்று, கியூப விடுதலைக்காகவும், உலக முழுவதும் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகவும் போராடிய புரட்சியாளர் சேகுவேராவின் வாழ்வும் மரணமும், உலக இளைஞர்களின் புரட்சிகரச் செயல்பாட்டுக்கு வழிகாட்டுவதாகும்.**

அர்ஜென்டினாவில் பிறந்து மருத்துவராகவும், புரட்சியாளராகவும், தலைவராகவும், மார்க்சிய அறிஞராகவும், கொரில்லா படைத் தலைவராகவும், கியூப அமைச்சராகவும் விளங்கிய எர்னெஸ்டோ "சே" குவேரா, காலத்தால் அழியாத ஒரு புரட்சியின் அரசியல் குறியீடாக இன்றும் உலகெங்கும் நினைவுகூரப்படுகிறார்.

ஜூன் 14 அவரது 98வது பிறந்த நாளினையொட்டி, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் தமிழ்நாடு முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் "சே குவேராவின் வாழ்வும் மரணமும்" என்கின்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

தர்மபுரியில் ஏஐஒய்எப் மாவட்டச் செயலாளர் நவீன் குமார் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில், மாணவர் பெருமன்றம் மாநிலச் செயலாளர் பா.தினேஷ் சிறப்புரையாற்றினார். கட்சியின் மாவட்டச் செயலாளர் கலைச் செல்வன், ஏஐடியுசி மாநில துணைத்தலைவர் கே.மணி, மாதர் சம்மேளன மாவட்டச் செயலாளர் எஸ்.கமலமூர்த்தி, விவசாயச் சங்கம் மாவட்டச் செயலாளர் எஸ்.சின்னச்சாமி ஆகியோர் உரையாற்றினார்கள்.

நாமக்கல் குமாரபாளையம் கட்சி அலுவலகத்தில், ஏஐஒய்எப் மாவட்டத் துணைச் செயலாளர் ஆர்.ரஞ்சித் தலைமையில், மாநிலக் குழு உறுப்பினர்கள் ஏ.அர்ச்சனா ப.மோ.சுபாஷ் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். ஏஐஒய்எப் மாவட்டச் செயலாளர் ஏ.ஜே.சாதிக் பங்கேற்றார்.

கடலூர் பண்ருட்டி கட்சி அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர் ஜி.மோகன் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் மாரி. கார்த்திகேசன் சிறப்புரையாற்றினார்.

தேனி சின்னமனூர் ஒன்றியக் குழு சார்பில், மாவட்ட தலைவர் ம.விக்னேஷ்வரன் தலைமையில் மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. மாநிலத் தலைவர் இரா.தமிழ்பெருமாள், மாவட்ட துணைச் செயலாளர் வே.ஜெய்ஹிந்த் கலந்து கொண்டனர்.





ஆண்டிபட்டி ஒன்றியக் குழு சார்பில், ஒன்றியச் செயலாளர் மு.ஜனசக்தி பிரபாகரன் தலைமையில் நடைபெற்றது. இதில் கட்சியின் மாவட்ட துணைச்செயலாளர் வே.பரமேஸ்வரன், ஒன்றியச் செயலாளர் பா.பிச்சைமணி, நகரச் செயலாளர் க.முனீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். பின்னர் நடைபெற்ற கருத்தரங்கில் ஏஐஒய்எப் மாவட்டச் செயலாளர் எம்விகே.மணிகண்டன் தலைமையில், மாநிலக் குழு உறுப்பினர் எம்.பத்மநாபன் சிறப்புரையாற்றினார். ஏஐஒய்எப் மாவட்டத் தலைவர் எம்.விக்னேஷ்வரன், மாவட்டக் குழு உறுப்பினர் வீ.மணிகண்டன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திருப்பூர் புறநகர் மாவட்டம் உடுமலைப்பேட்டை கட்சி அலுவலகத்தில், நகரத் தலைவர் பி.முத்துக்குமார் தலைமையில், மார்க்சிய மெய்யியல் ஆசிரியர் தா.சந்திரன் கருத்துரை வழங்கினார். ஏஐஎஸ்எப் புறநகர் மாவட்டச் செயலாளர் ச.முத்துக்குமார் வரவேற்புரை நிகழ்த்தினார். ஏஐஒய்எப் மாவட்டச் செயலாளர் எஸ்.தெய்வசிகாமணி வாழ்த்துரை நிகழ்த்தினார்.

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் கட்சி அலுவலகத்தில், ஒன்றியச் செயலாளர் காத்தவராயன் தலைமையில், மாநிலப் பொருளாளர் காரல் மார்க்ஸ் சிறப்புரை நிகழ்த்தினார். கட்சி மாவட்டச் செயலாளர் இராமநாதன், ஒன்றியப் பொருளாளர் பன்னீர்செல்வம் ஆகியோர் பங்கேற்றனர்.

செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் திருக்கழுக்குன்றம் ஒன்றியக் குழு சார்பில், திருப்போரூர் கட்சி அலுவலகத்தில், ஒன்றியத் தலைவர் ப.பிரதாபன் தலைமையில், முன்னாள் தேசியக் குழு உறுப்பினர் க.ஜெகதிசன் மற்றும் முன்னாள் மாவட்டப் பொருளாளர் எம்.முனுசாமி, மாநிலத் துணைத் தலைவர் மோ.வெங்கடேசன் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

விழுப்புரத்தில் ஏஐஒய்எப் மாவட்டச் செயலாளர் பா.சந்துரு தலைமையில், கட்சியின் மாவட்டச் செயலாளர் அ.சௌரிராஜன் சிறப்புரையாற்றினார். ஏஐஒய்எப் மாவட்டப் பொருளாளர் காத்தவராயன், மாவட்ட துணைத் தலைவர் அதியமான் மற்றும் தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

தென் சென்னை மற்றும் ஏஐஎஸ்எப்இஸ்கப் சார்பாக சைதாப்பேட்டை ஐந்துவிளக்கு பகுதியில் கலை நிகழ்ச்சியுடன் கேக் வெட்டி தெருமுனைக்கூட்டம் மற்றும் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மூ.வீரபாண்டியன், தென்சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.கே.சிவா ஆகியோர் பங்கேற்றனர்.

தஞ்சாவூர் தெற்கு மாவட்டம் பட்டுக்கோட்டையில், நகரத் தலைவர் கணேசன் தலைமையில், ஏஐஒய்எப் மாநிலப் பொருளாளர் காரல் மார்க்ஸ் சிறப்புரை நிகழ்த்தினார். பேராவூரணி ஒன்றியத்தில் ஒன்றியச் செயலாளர் சுகுமார் தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் கட்சியின் பேராவூரணி ஒன்றியச் செயலாளர் வீரமணி கொடியேற்றினார்.

திருச்சி புறநகர் திருவெறும்பூர் எழில்நகரில், புறநகர் மாவட்டச் செயலாளர் எம்.தமிழரசன் தலைமையில் நடைபெற்றது. ஏஐஎஸ்எப் மாவட்டச் செயலாளர் கே.எம். பிரவீன், சிபிஐ ஒன்றியச் செயலாளர் கே.பழனிச்சாமி ஆகியோர் பங்கேற்றனர்.

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தில் ஏஐஒய்எப் நகரச் செயலாளர் வி.கருப்பையா தலைமையில், ஏஐடியுசி மீனவர் சங்கம் மாநிலச் செயலாளர் சி.ஆர். செந்தில்வேல் சிறப்புரையாற்றினார். ஏஐஒய்எப் மாவட்டச் செயலாளர் லெ.வெங்கடேசன், மாவட்ட துணைச் செயலாளர் ராஜீ, மாதர் சங்க மாவட்டச் செயலாளர் பி.வடகொரியா மற்றும் தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

ஈரோடு வடக்கு பவானி நகரில், வட்டாரத் தலைவர் ஜி.ராகவாஹரி தலைமையில், மாவட்ட தலைவர் பி.முகமது அலி, மேனாள் மாநிலத் துணைத் தலைவர் வழக்கறிஞர் ப.மா. பாலமுருகன் கருத்துரையாற்றினார். நிகழ்வில் 20 வது வார்டு கவுன்சிலர் கு.கல்பனா ஏற்பாட்டில், பள்ளி மாணவர்களுக்கு நோட்டுகள், டிபன்பாக்ஸ், பேனா, தண்ணீர் பாட்டில் வழங்கினார்கள். இந்நிகழ்வில் சிபிஐ மாவட்டக் குழு உறுப்பினர்கள் எல்.சிவராமன், எம்.தங்கராஜ், நகரப் பொருளாளர் என்.விஸ்வநாதன் ஆகியோர் பங்கேற்றனர்.

திருச்சி மாநகர் பெரியமிளகு பாறையில் ஏஐஒய்எப் மாநில துணைத் தலைவர் வழக்கறிஞர் எம்.செல்வகுமார் தலைமையில் நடைபெற்றது. பின்னர் நடைபெற்ற கருத்தரங்கத்திற்கு மாணவர் பெருமன்ற முன்னாள் மாநிலத் தலைவர் என்.மணிமோகன் சிறப்புரை ஆற்றினார்,

தஞ்சை வடக்கு மாவட்டம் கும்பகோணத்தில் உள்ள ஏனநல்லூர் கிளையில், மாவட்டச் செயலாளர் மாதாமணி தலைமையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்ட கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. மேலும் அறந்தாங்கி மற்றும் திருவரங்குளம் ஆகிய ஒன்றியங்களில் ஏஐஒய்எப் ஒன்றியச் செயலாளர் கா.பாலாசுப்பிரமணியன் தலைமையில், நகரச் செயலாளர் எஸ்.சிவகுமார் முன்னிலையில், சிபிஐ மாவட்டத் துணைச் செயலாளர் ஏ.ராஜேந்திரன் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.

திருப்பூர் மாவட்டம் சூலூர் வடக்கு ஒன்றியக் குழு சார்பில், ஸ்ரீமதி தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில், மாவட்ட துணைத் தலைவர் ஹரிஹரசுதன் வரவேற்புரை வழங்கினார். மாநிலத் துணைச் செயலாளர் கலை அஸ்வினி கருத்துரை வழங்கினார்.

மேட்டுப்பாளையத்தில் தாலுகா செயலாளர் மா.ராஜ்கமல் தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் மௌ.குணசேகர், மாவட்ட துணைச் செயலாளர் அ.மன்சூர் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

மதுரை புறநகர் ஒத்தகடையில் நடைபெற்ற கருத்தரங்கிற்கு மாவட்டச் செயலாளர் கே.கிருஷ்பாக்கியம் தலைமை தாங்கினார். முன்னாள் மாநிலப் பொருளாளர் உ.சிவாஜிகாந்திசிறப்புரையாற்றினார். சிபிஐ மதுரைப் புறநகர் மாவட்டச் செயலாளர் பி.முத்துவேல் துவக்கவுரை ஆற்றினார்.

வடசென்னையில் மாவட்டத் துணைச் செயலாளர் எம்.காவிரிசெல்வம் தலைமையில். சிபிஐ மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் கருத்துரையாற்றினார். சிபிஐ மாவட்டச் செயலாளர் த.கு.வெங்கடேசன் வாழ்த்துரை வழங்கினார்

JANASAKTHI TAMIL WEEKLY CELL: 9444331138
DAY OF PUBLICATION: EVERY THURSDAY

Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026
WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026
Posted on Every Friday & Saturday
Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

# கீழடி ஆய்வை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும்!

## மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வலியுறுத்தல்



கீழடி ஆய்வு முடிவை மறைக்க முயலும் ஒன்றிய அரசின் நடவடிக்கையைக் கண்டித்தும், கீழடி அகழாய்வு அறிக்கையை அங்கீகரிக்க முடியாது என ஒன்றிய அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத் கூறியதைக் கண்டித்தும் திராவிடர் கழகம் சார்பாக, ஜூன் 18 அன்று சென்னை சைதாப்பேட்டையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி., திமுக நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர் க.கனகராஜ், காங்கிரஸ் சொத்து பாதுகாப்புக் குழு தலைவர் கே.வீ.தங்கபாலு, ஆதித்தமிழர் பேரவைத் தலைவர் இரா.அதியமான், மதிமுக கொள்கை விளக்க அணி மாநிலச் செயலாளர் வந்தியத்தேவன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் துணைத் தலைவர் எம்.அப்துல் ரகுமான், மனிதநேய மக்கள் கட்சியின் குணங்குடி அனிபா உள்ளிட்டோர் உரையாற்றினர்.


ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி முன்மொழிந்த, கீழடி தொல்லியல் அகழாய்வு அறிக்கையை ஒன்றிய பாஜக அரசு உடனடியாக வெளியிட வேண்டும், தொல்லியல் துறை அதிகாரி அமர்நாத் ராமகிருஷ்ணாவின் பணியிட மாற்றத்தை உடனே ரத்து செய்ய வேண்டும் ஆகிய இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### இரா.முத்தரசன் உரை

பின்னர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் உரையாற்றினார். அப்போது, “திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி முன்மொழிந்த இரண்டு தீர்மானங்களையும் நாம் அனைவரும் எழுந்து நின்று வரவேற்று ஆதரித்தோம். இந்தத் தீர்மானங்களைச் செயல்படுத்த ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள அரசாக இருந்தால், இவற்றை செவிமடுத்துக் கேட்க வேண்டும்.

உண்மையை ஒப்புக்கொள்ளுங்கள் என்பதற்காக நாம் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறோம். பொய்யை ஒப்புக்கொள்ளவில்லை என்றால் புரிந்துகொள்ளலாம். ஏனென்றால் பொய்யை ஒப்புக்கொள்ளவே முடியாது. ஆனால் உண்மையை ஒப்புக்கொள் என்று போராட்டம் நடத்த வேண்டிய கட்டாயத்திற்கு தமிழ்நாடு தள்ளப்பட்டுள்ளது.

2,500 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்களின் நாகரிகம் இருந்தது என்பதற்குச் சான்று கீழடி ஆய்வறிக்கை. தமிழர்கள் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் எப்படியெல்லாம் வாழ்ந்தார்கள் என்பதற்கு ஆதாரமாக அந்த ஆய்வறிக்கையின் முடிவுகள் உள்ளன. 10, 12 ஆண்டுகள் உழைத்து, கட்டம் கட்டமாக ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையில் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.



ஆய்வு செய்தவர்தானே அறிக்கை கொடுக்க முடியும். ஆனால் ஆய்வு செய்தவர் அறிக்கை கொடுக்கக் கூடாது என ஒன்றிய அரசு தடை விதித்தது. இதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடி, போராடி, நீதிமன்றம் அறிவுறுத்திய பின்னர் தான் ஆய்வறிக்கை கொடுக்கப்பட்டது. இப்போது அந்த ஆய்வறிக்கையை ஏற்க ஒன்றிய அரசு மறுக்கிறது. அதுவும் போகிற போக்கில் அதனை ஏற்க முடியாது என்று சொல்கிறது. முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க ஒன்றிய அரசு பார்க்கிறது.

கீழடி ஆய்வறிக்கையை ஏற்க முடியாது என நிராகரிப்பது, ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டை நிராகரிப்பதாகும். கீழடி ஆய்வில் நமது நாகரிகம், நமது பண்பாடு, மதச்சார்பின்மைகொள்கை வெளிப்படுகிறது. நாங்கள் எந்த மதத்திற்கும் அடிமைகள் அல்ல என்ற கொள்கையும் வெளிப்படுகிறது. 6000 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பைப் பயன்படுத்தி உள்ளோம். அரசு முத்திரை இருந்தது. இவற்றை ஏற்க மாட்டோம் என்று ஒன்றிய அரசு சொல்வது சரியல்ல.

இந்த ஆய்வை நாம் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும். இதற்கான நிதியை ஒன்றிய அரசு ஒதுக்காது. நாம்தான் ஆய்வைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். இதற்கு நிதி ஒரு பொருட்டல்ல. முதலமைச்சர் முன்முயற்சி எடுத்தால், தமிழ்நாடு முழுவதும் உண்டியல் குலுக்கிக்கூட நிதி திரட்டிக் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். உண்டியல் குலுக்குவது எங்களுக்குப் புதிதல்ல. 40 கோடி ரூபாய் மட்டுமல்ல, 100 கோடி ரூபாய் கூட வசூலித்துத் தர நாங்கள் தயார். இதற்கு உதவ தமிழ்நாட்டு மக்களும் தயாராக இருக்கிறார்கள். நாம் அனைவரும் ஒருங்கிணைந்து கீழடி ஆய்வை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லவேண்டும்” என்று இரா.முத்தரசன் உறுதிபடத் தெரிவித்தார்.

## உலகக் கோப்பையை வென்று கொடுத்த ‘கோட்டா’ வீரர்






பன்னாட்டு கிரிக்கெட் வாரியம் (ஐசிசி) டெஸ்ட் சாம்பியன்ஷிப் உலகக் கோப்பை போட்டிகளை நடத்தி வருகிறது. அண்மையில் நடைபெற்ற உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டியில், நடப்பு சாம்பியனான ஆஸ்திரேலியாவும், தென் ஆப்பிரிக்காவும் மோதியது. லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் தென் ஆப்பிரிக்க அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று, டெஸ்ட் சாம்பியன்ஸ் உலகக் கோப்பையை கைப்பற்றியது. 27 ஆண்டுகளுக்குப் பிறகு டெஸ்ட் சாம்பியன்ஷிப் உலகக் கோப்பையை வென்று, டெம்பா பவுமா தலைமையிலான தென் ஆப்பிரிக்க அணி வரலாறு படைத்துள்ளது.

நிறவெறி தலைவிரித்தாடிய தென்னாப்பிரிக்காவில், அனைத்துத் தரப்பினருக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதற்காக 2016 ஆம் ஆண்டு கிரிக்கெட் அணியில் இடஒதுக்கீடு முறை கொண்டுவரப்பட்டது. இதன்படி, அணியில் வெள்ளை இனத்தவர் அல்லாத 6 வீரர்களும் கறுப்பினத்தவர் இருவரும் இடம்பெற வேண்டும்.

இந்த விதியின்படி தென் ஆப்பிரிக்க அணியில் இடம்பெற்றவர்தான் டெம்பா பவுமா. பேட்டிங், பீல்டிங்கில் சிறப்பாக செய்லபடக்கூடிய பவுமா, அவர் சிறிது சொதப்பினாலும் திறமை இல்லாதவர், கோட்டாவில் வந்தவர் என்று கேலி செய்து வந்தனர். அவற்றை எல்லாம் கண்டுகொள்ளாமல் தீவிரப் பயிற்சி மேற்கொண்ட பவுமா, தென் ஆப்பிரிக்க அணியின் கேப்டனாக உயர்ந்தார். தென் ஆப்பிரிக்க அணியில் கேப்டனாக நியமிக்கப்பட்ட முதல் கருப்பின வீரரும் அவர்தான்.

அதன் பிறகும் பவுமாவின் திறமையை யாரும் அங்கீகரிக்கவில்லை. அணி வீரர்களும் ஒத்துழைப்புத் தரவில்லை. இவற்றைக் கண்டு சோர்வடையாத டெம்பா பவுமா, அணியின் வெற்றிக்கான வியூகங்களை வகுத்து தீவிரமாக உழைத்தார். இதனையடுத்து தென் ஆப்பிரிக்கா அணி டெஸ்ட் போட்டிகளில் தொடர் வெற்றிகளை குவிக்கத் தொடங்கியது. பவுமாவுக்கு வீரர்கள் ஆதரவு அளித்தனர். வெளியுலகம் அங்கீகரித்தது.

டெம்பா பவுமாவின் விடாப்பிடியான உழைப்பு, 27 ஆண்டுகளுக்குப் பிறகு தென் ஆப்பிரிக்கா அணிக்கு டெஸ்ட் சாம்பியன்ஷிப் உலகக் கோப்பையை வென்று கொடுத்து புதிய வரலாறு படைத்துள்ளது. உலகம் முழுவதும் வாழ்த்துகள் குவிந்து வருகின்றன.

அதிலும், இந்திய ரசிகர்களே சமூக வலைத்தளங்களில் அதிகமாகக் கொண்டாடி வருகின்றனர். இதனைக்கண்ட தென் ஆப்பிரிக்கா ரசிகர்கள் மகிழ்ச்சியில் திளைத்துள்ளனர்.

ஆமா.. இந்திய கிரிக்கெட் அணிக்கும் கோட்டா முறை வருமா?

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.